# பாதையில் மலர்ந்த பனி மலர்கள்

114840



S.E.N. குணசிலன்

# பாதையில் மலர்ந்த பனி மலர்கள்

பொசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

கலாநிதி சி. இ. நி. குணசீலன்
எம். ஏ; எம். எஸ்சி; பிஎச். டி.

114840

18-5-1995

THE LORD IS MY SHEPHERD

வெளியீடு - 16
குடும்ப மேம்பாட்டுப் பணி நிலையம்,
சேந்தான்குளம் — இளவாலை.
4-6-1982

# PATHAYIL MALARNTHA PANIMALARGAL

152.9

By

**Rev. Dr. S. Emm. NICHOLAS GUNASEELAN**

Dip. Sp. Thl., (Rome)

M. A., M. Sc., Ph. D., (U. S. A.)

**FAMILY PASTORAL SERVICES CENTRE**

SENTHANKULAM

ILAVALAI

SRI LANKA

114841

## காணிக்கை

அன்பே என்னை அன்னை வயிற்றில்
கருவாக விதைத்தது —
அன்பே என் அன்னையின் உருவில்
ஆளாக்கி விட்டது —
அந்த
அன்பு அன்னையின் பாதமலர்களில்
இந்த
அன்பு நூலைக் காணிக்கையாக்குகிறேன்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

✠

# இன் மொழி

பேராயர் இல்லம்

கொழும்பு-8

1-6-1982

VERITATEM DICERE IN CARITATE

அன்புடையீர்!

அன்பு படித்துப் பெறுவதல்ல. அனுபவத்தால் கிடைக்கும் செல்வம். அந்த அனுபவத்தை அடுத்தவர்களுடன் பகிர்ந்து கொள்வதில்தான் எத்தனை ஆனந்தம். அன்பை அனுபவித்தவர்களின் அனுபவத்தை அறிந்து கொள்வதிலுறன் எத்தனை இன்பம். தான் பெற்ற இன்பத்தை மற்றவர்களுடன் இந்த நூலின் மூலம் பகிர்ந்து கொள்கிறார் குணசீலன் அடிகள்.

ஆரம்பப் பள்ளியையும் காணாதவர்கள் பலர் அனுபவப் பள்ளிமூலம் அறிஞர்களாகி அயலவர்களுக்கு பயன்மிக்கவர்களாகின்றனர். ஆனால் உளவியல் துறையில் மிக்க பயிற்சி பெற்று நொறுங்கிய இதயம் உடையவர்கள் மத்தியிலே அன்புப் பணி புரியும் குணசீலன் அடிகளாரின் அனுபவங்கள் வாழ்க்கையில் பல துறையில் தாக்கமடைந்தவர்களுக்கு வழி காட்டியாக அமைகின்றது. கல்லூரி கொடுக்கும் அறிவைவிட காலம் கற்பிக்கும் அறிவு உன்னதமானதுதான்.

குணசீலன் அடிகளாரின் வாழ்க்கைப் பாதையில் மலர்ந்த பனி மலர்கள் இதழுக்கு இதழ் அன்பு மணம் கமழ்கின்றது. பாரதிதாசன் தமிழின் சுவைக்கு ஒப்பானதாக எடுத்துப் பார்த்த ''பனிமலர் ஏறிய தேனும்'' எனும் பாடல்வரிகளை நினைவுறுத்துகின்றது. பனியில் நனைந்த மலர்கள் பசுமையும் குளிர்மையும் உடையதாக இருக்கும். அம்மலர்கள் கொண்டுள்ள தேனும் குளிர்ச்சி மிக்க இனிமை கொண்டதாக விளங்கும். தேன் ஒரு சிறந்த மருந்து. குணசீலன் அடிகளாரின் வாழ்க்கைப் பாதையில் மலர்ந்த பனி மலர்கள், பலரின் நோய்தீர்க்கும் மருந்தான அன்புத் தேனைக் கொண்டு நிற்கின்றது.

அன்பு மலராம் இந்த சீரிய நூல் அனைவரும் படித்து பயனடையவேண்டியதொன்றாகும். அடிகளாரின் இப் பணி தொடரவேண்டும் என்றும் அதன் மூலம் அவர் பெறும் அனுபவங்கள் அயலவர் வாழ்விற்குத் துணையாக அமையும் விதத்தில் இதுபோன்று மலர்கள் நூலுருவில் வெளிவர வேண்டும் என்றும் என் உள்ளம் நிறை ஆசி கூறுகின்றேன்.

**+ நிக்கொலஸ் மார்க்கஸ் பெர்ணண்டோ**

கொழும்பு மறைமாவட்ட பேராயர்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

✠

மங்களம் மரியே

# பாதையில் மலர்ந்த பனி மலர்கள்

## முன்மொழியின் முன்........

பாதை — ஐம்பது ஆண்டுகளாக நான் நடந்துவந்த பாதை — என் வாழ்க்கைப்பாதை —

இந்த ஐம்பதாவது வயது எனும் மைல் கல்லில் நின்று திரும்பிப்பார்க்கிறேன் — எத்தனைமேடுகள், எத்தனை பள்ளங்கள் எத்தனை ஏற்றத் தாழ்வுகள் — குறுகிய செங்குத்துச் சரிவுகள்?

ஒவ்வொரு மைல் கல்லிலும் நின்று கொண்டு எதிர் காலத்தை நோக்கும்போது அங்கு இன்ப வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவது போன்ற தோற்றம். நம்பிக்கையோடு நடையைத் தொடர்ந்து அதை அண்மிக்கும்போது, அது வெறும் கானல் நீர் என்பதைக் கண்டு கொள்ளும்போது ஏமாற்றம். மீண்டும் தொலைவை நோக்குகையில் அதே தோற்றம்.. மீண்டும் பயணம் தொடர்கிறது...

இறுதிவரை இன்பமாக வாழ்ந்தவன் எவனுமில்லை, அவர்களில் நானும் ஒருவன் — எனவே துன்பத்தில் இன்பம் கிடைக்குமா? உறைபனிகாலத்தில் மலர்களேது?

ஆனால் உறைபனியில் அழகியமலர்கள் கிடைத்தால் அவை உன்னதமானவை பெருமைக்குரியவை.

அப்படி — பனி உறைந்த வாழ்க்கை பாதையிலே பயணத்தைத் தொடர்ந்து வந்த என்தன் பாதங்களைத் தட்டித் தடவின பனி மலர்கள். அந்த மலர்கள் அளித்த ஆனந்தம் — அதன் மேன்மை எத்துணை!

அந்த அழகிய பனிமலர்கள் எவையென்று மறைவின்றிக் கூறுவதாயின் அதன் மறு பெயர் அன்பு —

என் வாழ்க்கைப்பாதையில் கிடைத்த அன்பு —

என் பயணத்தில் எனக்கு பக்கத்துணையாக விளங்கிய அன்பு —

இன்றுவரை என்னை வாழவைத்துக்கொண்டிருக்கும் அன்பு

இதுவே என் 'பாதையில் கிடைத்த பனிமலர்கள்'

அம்மலர்களில் நான் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறக்கூடாதா என்ற பேரவா உற்று அம்மலர்களை மாலையாகக் கோத்து — நூலுருவில் உங்கள் முன்வைக்கிறேன் அதனை நுகர்வதோடு நில்லாது சூடிமகிழுங்கள்.

என்றோ மலர்ந்திருந்த இம்மலரின் கருத்துக்களை எழில் மாலையாக்கத் துணைநின்ற திரு. நாவண்ணன் அவர்கட்கு என் நன்றி. ஈற்றில் கலாநிதி பேரருள் நிக்கொலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் தமது பாரிய அன்புப் பணிகள் மத்தியிலும் எமது மலரை அன்புடன் ஏற்று இன் மொழி ஈர்ந்ததற்கும் என் இதயம் நிறை நன்றிகள்

சுவாமி சி. இ. நி. குணசீலன்
4-6-1982



## முன்மொழிகள்

அன்பை—

அதன் அழகை—

அதன் ஆழத்தை—

அதன் பெருமதியை—

எனது இவ்வன்பின் ஆக்கத்தின் மூலம் எடுத்தியம்ப விழைகின்றேன்.

வாழ்க்கைப் பயணத்தில் நான் பதித்துவந்த காலடிச் சுவடுகளால் கண்டறிந்த உண்மைகளை — அனுபவப் பள்ளி எனக்குக் கற்றுத்தந்த உண்மையின் வெளிப்பாடுகளை எழுத்தில் வடிக்க நான் எடுத்துக் கொண்ட பெருமுயற்சிதான் இந்நூல்.

இந்த அனுபவப் பாடங்களை வேகமாகக் கற்று விடை கண்டு கொண்டவர்கள் சிலர். ஏனையோர் என்னைப் போன்று தாமதமாகவே கற்றுணர்ந்துள்ளார்கள்.

இந்நூலில் காணப்படும் ஒரு வரிதானும் என் மனச் சாட்சிக்கு விரோதமாக வரையப்பட்ட புனைகதையென்றோ, பொய்மொழியென்றோ கொள்ள முடியாது. இவை யாவும் சாகாவரம் பெற்ற சத்தியங்கள். "எங்கள் சகோதரரைச் சிநேகிக்கின்றபடியால் நாங்கள் மரணத்தில் நின்று நீங்கி வாழ்வுக்கு உட்பட்டிருக்கின்றோம் என்று நாம் அறிந்து கொள்கின்றோம்" இது புனித அருளப்பரின் பொய்யா மொழிகள். அழியாவரம் பெற்ற அன்பின் தத்துவம்.

அன்புடன் தான் வாழ்வு. ஏன்? வாழ்வின் உதயமே அன்பிலே தான் பிறக்கின்றது.

அன்பிலார் வாழ்வில் ஆனந்தமில்லை, அவநம்பிக்கை இருளில் அல்லலுறும் அவர்கள் வாழ்வு கனிகொடா மரத்தின் மலட்டு வாழ்வு, இதன் பொருட்டே புனித் அருளப்பரும் "சிநேகியாதவன் மரணத்தில் நிலைகொண்டிருக்கிறுன்" என்கிருர். அன்பு செய்யத் தெரிந்தவன் அறிஞன் என்பதில் ஐயமில்லை.

"அன்பு செய்யத் தெரிந்தவன் ஓடுகிறுன், அகமகிழ்கிறுன். அவன் சிறைப்பட்டவனல்லன், விடுதலை பெற்றவன்" இக் கருத்தை உரைத்தவர் தோமஸ் கெம்பிஸ்.

தேவையான அன்பு ஒருவரது இதயத்தில் இருத்தல் கூடும். ஆனல் பொங்கி வழியும் அன்பு அநேகரிடம் காணப் படுவது அரிது "அன்பு என்றும் நன்மையே செய்கிறது. அன்பு ஒருபோதும் கேடு செய்வதில்லை." என்பது புனித சின்னப்பரின் வாக்கு.

பொன்னிலும் பெறுமதி மிக்கது அன்பு, அந்த அன்பு தான் நம் வாழ்வின் குறிக்கோளாக இருக்க வேண்டும். அது அள்ள அள்ள வற்ருத ஊற்று. இதை நாம் அடுத்தவருக்கு அள்ளிச் சொரிய அது சுரந்து கொண்டேயிருக்கும்.

எதனையும் வெல்லும் ஆற்றல் அன்புக்கு உண்டு. உங்கள் இதயத்திற்கும் அடுத்தவர் இதயத்திற்கும் இதமளிக்கக் கூடிய சக்தி அதற்குத்தான் உண்டு. "அன்பே அறிவின் சிகரம்" என்கிருர் தோமஸ் கெம்பிஸ். சித்தத்தையும் (விதி) வெல்லும் வலிமை இதற்கு உண்டு.

அன்பைப்பற்றி எழுதும் தகைமை எனக்கு உண்டு என்று சொல்லும் துணிவு எனக்கில்லை, அப்படி எனக்கு ஒரு தகைமை இருக்குமேயானல — அது எனது இதயம் உண்மையும் பிரமாணிக்கமுமாய் இருக்கிறது என்பதை விட, சொல்லாக செயலாக எண்ணற்ற அன்புச் செல்வங்களை என் வாழ்வில்



அனுபவித்துள்ளேன் என்பது ஒன்றுதான் ஆம், அன்பு எனும் அந்த அமிர்தத்தை அள்ளிப் பருகிடும்பேறு பெற் றிருக்கின்றேன்.

என் வாழ்க்கைப் பயணத்தில் நான் தாண்டி வந்த பாதையை நின்று நிதானித்துத் திரும்பிப் பார்க்கின்றேன். எனது விழிகளுக்கு எட்டிய தொலைவுவரை காலச் சுருவளியால் அணைந்து போகாத அந்த ஒளி விளக்குகளை, தியாகம் எனும் அந்தத் தெய்வீகச் சுடர்களின் ஒளியைக் காண்கின்றேன். ஏனெனில் பிறர் அன்பின் சாதனைகள் அவை, சாகாவரம் பெற்றவை.

அன்பானது உலகம் அடங்கிலும் பெருமளவில் காணப்படு கின்றது. ஈகை, இரக்கம், பெருந்தன்மை எல்லாம் குறைவின் றிக் காணப்படுகிறது. அவற்றில் அன்பின் சுயரூபத்தைத் தெளிவாகக் கண்டு கொண்டேன்.

பறவைகள் பறக்கின்ற பாங்கினைக் கண்டு பரவசமடை கின்ருேம். வண்ண மலர்களின் வனப்பினைக் கண்டு இன்புறு கின்ருேம். அது போன்று அன்புச் செயல்களையும் எம்மால் ஏன் அனுபவவித்து இன்புற முடியாது? இயற்கையில் எங்ஙனம் அளப்பரிய அன்பை அள்ளியிறைத்த இறைவன், அனைத்திலும் மேலான அழகை மனித இதயங்களிலன்ருே அள்ளியிறைத் துள்ளார்.

**பிறரைப்பற்றி நாம் சொல்லும் நல்ல சொல்லைவிட அழகான பொருள் என்ன இருக்க முடியும்? ஒருவேளை வில்லிமலர் ஒன்றினுக்கு தங்க முலாம் பூசி அழகு செய் திடலாம். ஆனல் அன்புச் செயலை அழகுபடுத்துவது என்பது எவராலும் முடியாத காரியம், ஏனெனில் அன்பினுக்கு நிகரான அழகு — அன்பினையும் விஞ்சிய அழகு எதுவுமில்லை. எங்குமில்லை. அது தன்னிகரற்றது.**

அன்பினுக்காகவும், அன்பு செய்யவும் எமது இதயங்கள் ஏங்குகின்றன. அப்படியிருந்தும் எமது இதயங்களை நாம் இரும்புச் சிறையில் இடுவது ஏன்? அயலவருக்கு அன்பு

பொழிந்து, அவர்களுக்குப் பணிபுரிய வேண்டாம் என்று தடை விதித்து இதயக்கதவுகளை இறுகப் பூட்டிக்கொள்வது ஏன்?

"தூய ஆவியே! தூய அன்பை எங்கள் உள்ளங்களில் பொழிக!"

புனித இராயப்பர் சத்திய மறைக்குச் சான்று பகர்ந்து சாவுக்குத் தன்னைக் கையளிக்கு முன்னர், அன்பு பற்றிய போதனைகளை தன் மடல்களில் மீண்டும் எழுதினார். தம்மவர்கள் முன்பு பல தடவைகளில் அவற்றைக் கேட்டிருக்கிறார்கள் என்பது அவருக்குத் தெரியும். எனினும், தாம் இவற்றை மீண்டும் அவர்களுக்கு நினைவுறுத்துவதன் மூலம் அவை அவர்களது உள்ளங்களை உறுத்திட வேண்டும் என்பதற்காகவே என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலில் வடிக்கப்பட்டுள்ள வாக்கியங்கள் யாவும் பயன் மிக்கவை, பெறுமதி மிக்கவை. அன்பின் ஆவியால் நீங்கள் புத்துயிர் பெற்று அன்பின் வாழ்வை ஆரம்பிக்க இச்சிறியநூல் வழிகாட்டியாக அமையட்டும்.

தொடருங்கள் —

இதன் மொழிப்படி சிந்தனையைத் தொடருங்கள்...

இதன் சிந்தனைப்படி வாழ்க்கையைத் தொடருங்கள்... ...





# என் மொழி 1

## அன்பு என்பது?............

ஒரு மென்மையான பரிவு

அல்லது

பெருந்தன்மையுள்ள இரக்கம்

இதுதான் அன்பு என்று நினைக்கின்றோம்

ஆனால்.........

உணர்வுகளையும், உரையாடல்களையும், கடந்து நிற்பது தான் உண்மையான அன்பு. அன்பு இதயத்திற்கு மட்டுமல்ல மனம், சித்தம், கை — கால் அனைத்துக்கும் உரிய சொத்தாகும். அது இன்முகமும் இன்மொழிகளும் மட்டுமல்ல. ஆற்றலும் செயலும் கூட அன்புக்கு உண்டு. நாவிலும், நவிலும்மொழியிலும் சத்தியத்திலும் செயலிலும் தான் அது வாழ்கின்றது. அன்பு நிறைந்த உள்ளத்தில் மன்னிப்பு இருக்கின்றது எனவே, அதுவே பூரணத்துவம் நிறைந்த இதயமாய்த் திகழ்கின்றது. "நமக்கு நேரம் உள்ளமட்டும் எல்லோருக்கும் நன்மைசெய்வோமாக". என்கிறார் புனித சின்னப்பர். இதன் பொருள் எல்லோரையும் அன்பு செய்யுங்கள் என்பதே.

உண்மை அன்புதான் எமது வாழ்வின் பேறுகும். எமது வாழ்வில் நாம் பெற்ற பேறுகளில் எல்லாம் எல்லைக்கோடும் அதுதான்.

பொய்மை அற்ற அன்புச் செயல் எம்மை தாக்கத்துக்கு உள்ளாக்கும் தன்மைபெற்றது. அது கொடுக்கும் அதிர்ச்சி மின்சாரத்துக்கு ஒப்பானது. அதுகாட்டும் நிகழ்வுகள் காண்ப வரைக் கற்சிலைகளாகச் சமைத்து விடுகின்றன.

ஒரு முறை புனித ஆசீர்வாதப்பர் மடம் ஒன்றில் தீப்பிடித்துக் கொண்டது. கல்லூரி இருந்த இடமோ ஒரு கிராமப்புறம் தீயணைப்புப் படையின் உதவி கிடைக்கக்கூடிய இடமுமல்ல.

தீ நாக்குகள் 'திமு திமு' வெனச் சுழன்று எழுந்து எங்கும் சூழ்ந்துகொண்டன. மாடியையும் அங்கு செல்லும் மரப்படியையும் தீ ஆக்கிரமித்துக்கொண்டது. அனல் வெட்கையும் புகை மண்டலமும் எவரையும் அணுகவிடாவண்ணம் தடுத்துக் கொண்டிருந்தன.

இத்தனை அவலங்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அந்த வேளையிலே......

மாடியின் ஓர் அறையிலே தன்னை மறந்து துயின்று கொண்டிருந்தான் வேலைக்காரச் சிறுவன் ஒருவன். அவன் அப்படியே அங்கு இருந்தால் இன்னும் சற்று நேரத்தில் கருகிச் சாம்பராகிவிடுவான் என்பதை அங்கு நின்ற அனைவரும் அறிந்தே இருந்தார்கள். அந்நிலையிலும் அவனை மீட்க வேண்டுமே என்ற துணிவு எவருக்குமே வரவில்லை. தீயின் வேகம் அதிகரித்துக்கொண்டேயிருந்தது. படிகள் பற்றியெரியத் தொடங்கின பலகைகள் எரிந்து வெடிக்கும் சத்தம் பயங்கரமாக விருந்தது. சிறுவனை மீட்பதற்கு வேண்டிய துணிவு எவருக்கும் இன்னும் பிறக்கவில்லை. துயரத்தின் எல்லையிலே அனைவரும் துடித்துக்கொண்டிருந்தனர்.

## உயிர் கொடுத்து உயிர் காத்த உண்மை அன்பு

தவித்துக் கொண்டு நின்ற அந்தக் கூட்டத்தின் நடுவே தளர்நடைக்கிழவன் ஒருவர் வந்து நின்றார். அவர் மடத்தின் சமையற் பகுதியில் கடமையாற்றும் சந்நியாசி பெயர் யாகப்பர் முதுமை அடைந்து ஓய்வு பெறும் வயதை நெருங்கிக்கொண்டிருப்பவர். கடமை நேரம்தவிர ஓய்வு நேரத்தின் பெரும் பகுதியை மடத்தின் சிற்றாலயத்திலே செலவிடுகின்ற பக்திமான்.



சுடர் விட்டுச் சூழ்ந்து எரிகின்ற நெருப்பை சுருங்கிக் குழிவிழுந்த அவரது கண்கள் கூர்மையாக நோக்கின. அங்கே நின்றவர்கள் கண்டதையும், கேட்டதையும், அவருங் கண்டார். கேட்டார். ஆனால் சாவின் விழிம்பில் நின்று கொண்டிருக்கும் சிறுவன் அமலைக் காப்பாற்ற முடியாது என்று மற்றவர்கள் எண்ணியது போன்று அவர் எண்ணவில்லை.

எங்கிருந்துதான் அவருக்கு அந்த வேகம் பிறந்ததோ?! கொழுந்துவிட்டெரியும் தீ நாக்குகளினிடையே அவர் திடீரெனப் பாய்ந்தார். புகைமூட்டத்துள் மறைந்து விட்ட அவர் எரிந்து கொண்டிருக்கும் மரப்படிகளில் ஏறிச் செல்லுகின்ற 'தடதட' ஓசையை மட்டும்தான் அங்கு நின்றவர்களால் கேட்கமுடிந்தது.

தீயை ஊடுருவிக்கொண்டு மாடியை அடைந்துவிட்ட அந்த முதியவர் அமல் இருந்த அறையை அடைந்தார் அவரது கரங்கள் வேகமாக இயங்கின கட்டிற் துணிகளால் சிறுவனைச் சுற்றிக் கட்டினார். தான் கீழ்த் தளத்தை அடையுமட்டும் சிறுவனைத் தீ தாக்காது என்பதை நிட்சயித்துக் கொண்ட அவர் மறுபடியும் எரிந்து கொண்டிருக்கும் மரப்படிகளில் பாய்ந்து கீழே தாவினார். அதே வேளையில் தனது இறுதி மன்றாட்டை அவரது வாய் முணுமுணுத்துக்கொண்டது.

உள்ளே சென்ற சகோதரருக்கும் அமலுக்கும் என்ன நடந்தது என்பதை அறியும் ஆவலில் வெளியே தவித்துக் கொண்டிருந்தது கும்பல்.

படிகளில் 'பட, பட' என்ற சப்தம் தொடர்ந்து, பற்றி எரியும் வெண் அங்கியுடன் சிறுவனை அணைத்துப் பிடித்தபடி பாய்ந்து இறங்கிவந்தார் அந்தத் துறவி.

## தியாகத் தீபம் அணைந்தது

தரைக்கு வந்து விட்ட அவர், தான் தாங்கிவந்த அந்தச் சிறுவனை பாதுகாப்பாக இறக்கிவிட்டார். மறுகணம் அவர் உடல் தளர்ந்து வீழ்ந்தது. உயிர் பிரிந்து விட்டது. அந்தத் தியாகத் தீபம் அணைந்தேவிட்டது.

அங்கே நின்ற கும்பல் பெற்ற அதிர்ச்சியில் இருந்து மீளமுடியாமல் நின்றது. வாய்கள் பேச மறுத்தன. உணர்ச்சிப்

பெருக்கு அவர்கள் உள்ளங்களை நிரப்பியிருந்தது. கண்டகாட்சிகளால் கருத்திழந்தவர்களாக கற்சிலைகளாக நின்றிருந்தார்கள், அவர்களில் நானும் ஒருவன்.

அன்று அங்கு நின்றோர் அனைவரையும் அந்நிலைக்கு இட்டுச் சென்ற சக்தி எது? சகோதரர் யாகப்பரின் அன்புச் செயல் அல்லவா? அந்த எளிய துறவியின் செயல், வீரச் செயலையும் விஞ்சிநிற்கும் அன்புச் செயல் அல்லவா?

## போர்க்களத்தில்

ஜோன் பிற்மன் அமெரிக்கப் படையின் ஆணையாளர்களில் ஒருவர். போர்க்களத்தில் ஒரு நாள் அவர் எதிரிகள் எறிந்த குண்டின்மேல் பாய்ந்து அது வெடித்துச் சிதருவண்ணம் தடுத்தார். தமது படைகளைக்காக்க இவர் ஆற்றிய இச்செயல் அன்பின் தூண்டுதலினால் அல்லவா? தன் உயிரையும் துச்சமாக மதித்து அன்புப் பணி ஆற்றிய அவரை இறையருள் மீட்டது.

## பகைவனின் பாசறையில் பாய்ந்த இன்னொருவன்

விமானமொன்று விபத்துக்குள்ளாகி எதிரிகள் முகாமில் வீழ்ந்தது. விமானத்தோடு பகைவரின் பிடியில் சிக்கிவிட்ட தன் நண்பனை மீட்கத் துடித்தான் இன்னுமொருவன். எதிரிகளின் குண்டு வீச்சுக்கள் பீரங்கி முழக்கங்கள் எதனையும் அவன் பொருட்படுத்தவில்லை. தனது 'ஹெலிக் கொப்டர்' விமானத்தை அந்த எதிரிகள் முகாமில் துணிந்து இறக்குகின்றான். என்னே அவன் அன்பின் வலிமை!

போர்முனைகளில் இவை போன்று நடக்கும் எத்தனையோ சம்பவங்களைப்பற்றி நாம் நினைத்தும் பார்ப்பதில்லை. அவற்றையெல்லாம் வெறும் வீரச் செயல்கள் என்று பாராட்டுவதோடு நின்றுவிடுகின்றோம். ஆனால் மானிட உள்ளங்களையெல்லாம் ஆட்கொண்டு அசாதாரணமாக இந்தச் செயல்களைச் செய்யத் தூண்டும் சக்தி எது என்பதுபற்றி நாம் ஆய்வு செய்வதில்லை. அப்படிச் செய்யும் போதுதான் கைமாறு கருதாத அன்பின் அழகை, அதன் ஆழத்தைக் கண்டுபிடிக்கமுடியும்.



## அன்பு பற்றிய அடைமொழிகள்

அன்பைப் பற்றித் தெளிவான, துணிவான, உண்மையான செய்தியொன்று கிறிஸ்துநாதர் அனுசாரத்தில் உண்டு. தெய்வீக மனித அன்பைப்பற்றி பல தெளிவான அனுபவங்களைப் பெற்ற தோமஸ் கெம்பிஸ் பின்வருமாறு கூறுகின்றார்.

''அன்பே பெரியதும் நிறைவு பெற்றதுமான நன்மை. அன்பு ஏற்றத் தாழ்வுகளைச் சமப்படுத்துகின்றது. தாழ்ந்தவற்றையும் புரிந்து கொள்ள முடியாதவற்றையும் கண்டு அன்பு பின்னிற்பதில்லை. அது சுமையை உணர்வதில்லை. தொல்லைகளைப் பற்றிச் சிந்திப்பதில்லை. தனது வலிமைக்கு மேலாகப் பணிபுரிவதற்கு அன்பு துடிக்கிறது. முடியாது என்று பணிந்துபோகும் பண்பு அன்புக்கு இல்லை. அன்பு களைத்துப் போகக் கூடும். ஆனால் சலிப்புக் கொள்வதில்லை. அதிர்ச்சியடையக் கூடும். ஆனால் அவநம்பிக்கை அடைவதில்லை. அன்புக்கு நிகரான துணிவுள்ள உயர்ந்த ஆற்றல் உலகில் வேறு எதுவுமில்லை. அன்பு செய்பவன் ஓடுகிறான், பறக்கிறான், அகமகிழ்கிறான். அவன் சிறைப்பட்டவனல்லன். விடுதலை பெற்றவன்.''

## நான் உணர்ந்த அன்பு

அன்பு என்பது என்னவென்று என்னிடம் யாராவது கேட்டால் என் அனுபவத்தின் பொருட்டு அளிக்கக்கூடிய பதில் இதுதான்.

அச்சமூட்டும் போர் முனையில் அபாயங்கள் இடையூறுகள் மத்தியிலே அமைதியாக இருந்துகொண்டு வீட்டில் இருக்கும் பெற்றோருக்கு மகிழ்ச்சி தரக்கூடிய கடிதத்தை எழுதும் இளம் போர்வீரன்தான் அன்பு—

வேலையற்ற ஒருவருக்கு வேலை தேடித்தருவதாக வாக்களிப்பதோடு நில்லாமல் அதை நிறைவேற்றும் மனிதன்தான் அன்பு—

இன்னுமொரு பெண்ணின் அந்தரங்கமான கெட்ட நடத்தையை அறிந்திருந்தும் அதை மற்றவர்களுக்கு வெளிப் படுத்தாமல் இருக்கும் பெண் தான் அன்பு—

வேண்டாத விருந்தாளி என்று உணர்ந்தும் கூட தனது பலகாரத்தட்டில் மிகச் சுவையான சிற்றுண்டி வகைகளை வைத்து அவனுக்கு இன்முகம் காட்டி உபசரித்து விருந்தோம்பும் பெண் தான் அன்பு—

தனிமையில் வாழும் காது கேட்காத கிழவியுடன் பேசிப் பொழுது போக்குவதற்காக ஊமைமொழி படிக்கும் மாணவன் தான் அன்பு—

ஏழையொருவன் பிச்சை வாங்குவதற்காக இரண்டாம் முறை வரும் பொழுதும் இல்லை என்னாமல் அள்ளிக் கொடுக்கும் மனிதன் தான் அன்பு—

மற்றவர்கள் பிழைவிடும் போது அவர்கள்மேல் பழி சுமத்தாமல் அவர்கள் தவறு செய்யக் காரணமாயிருந்த தனது பிழைகளைக் கண்டு பிடிக்கும் மனிதனே அன்பு.

தான் வாங்கிய கடனை மறக்காமல் தன்னால் முடிந்த தொகையை விரைவில் திருப்பிக் கொடுக்கத்துடிக்கும் நன்றி மறவாத உள்ளமே அன்பு —

கபடவிசுவாசம் போலி நடிப்பு எதுவும் அன்புக்கு இல்லை

''அன்பு கபடமற்றது'' என்கிறார் புனித சின்னப்பர்.

''வாஞ்சையுள்ளது, நேர்மையானது. பிறர் பரிவு கொண்டது'' என்கிறார் புனித இராயப்பர்.

அன்புக்கே உரித்தான களங்கமற்ற தன்மையை இவ் வார்த்தைகள் உறுதிப் படுத்துகின்றன. உணர்ச்சி வேகமும், மன எழுச்சியும் உச்சநிலையை அடையும்போது ஆபத்து உண்டாகின்றது ஆனால் அன்பானது ஒருபோதும் கடுமையானதாக பலவந்தம் செய்வதாக இருப்பதில்லை. ''இறைவனிடம் இருந்தே அன்பு பிறக்கிறது'' என்கிறார் தோமஸ் கெம்பிஸ் எவ்வளவு அன்பு உண்டோ அவ்வளவுக்கு மனிதனின் உள்ளம் சிறப்புள்ளதாக இருக்கும் இன்று உலகினை அழித்துச் சிதைக்கும் பஞ்சம் அன்பின்மை ஒன்றுதான்.



## அன்புபற்றி நாம் நினைப்பது

அன்பு பற்றி நம் எண்ணம் என்ன? அன்பின் வல்லமையில் அதன் மாட்சியில் நாமும் ஏன் நம்பிக்கை வைப்பதில்லை?

இளைஞர்களின் மனதில் எல்லாவிதமான பேராசைகளையும் வளர்த்துவிடுகிறோம்—

பேராசிரியராக, ஓவியர்களாக, இசை மேதைகளாக, விளையாட்டு வீரர்களாக உருவாக்கும்படி ஊக்கமூட்டுகிறோம். அவர்கள் தம் கற்பனைத் திறனை, அழகைச் சுவைக்கும் பண்பை கலை ஆர்வத்தை. அவர்களுக்குப் புகட்டுகின்றோம். ஆனால் அவர்கள் தம் நெஞ்சை அன்புக்குப் பலியிடும்படி அவர்களது மனதை வழிப்படுத்துவதற்கு நாம் மறந்துவிடுகிறோம்.

## ஆசிரியரும் - தந்தையும் சொல்ல வேண்டியது

இதோ பார் மகனே! நீ ஏதும் பெரிய திட்டங்கள் தீட்டுகிறாயா? அவை அனைத்திலும் மேலாக நல்ல இதயம் ஒன்றை - உண்மையான அன்பு நெஞ்சமொன்றைக் கொண்டிருக்க வேண்டும் என்பதே ஒரு மனிதனின் உண்மையான குறிக்கோளாக இருக்கவேண்டும். அதுவே உயர்ந்த குறிக்கோளுமாகும்.

உனது தலைக்கோ, கைக்கோ என்ன நேரிட்டாலும் காரியமில்லை. ஆனால் உனது உள்ளத்தை மட்டும் எதுவும் கடினப்படுத்தாதபடி அல்லது உறைந்து போகாதபடி பார்த்துக் கொள்.

''உன் அயலான் மட்டில் இரக்க உள்ளத்தைக் கொண்டிருப்பதன் மூலம் நீ மற்றவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கலாம். நீயும் என்றும் மகிழ்ச்சியாக இருக்கலாம். இதுவே உனக்குப் பேராவலாக இருக்கட்டும். இதை விடச் சிறந்தது உன் வாழ்வில் என்ன வேண்டும்?'' என்று வலியுறுத்திச் சொல்லக் கூடிய ஆசிரியர் அல்லது தந்தை இருக்கமுடியாதா?

''தனிமனிதன் ஒருவனிடம் குற்றமற்ற அன்பு இருந்தால் இலட்சக் கணக்கான மக்களின் பகையை முறியடிக்க அஃது ஒன்றே போதும்.'' என்கிறார் பாரத ஞானியான காந்தி மகாத்மா. ஏனெனில் தூய அன்பின் வலிமையை அவர் நன்கு அறிந்திருந்தார்.

## வாழ்வின் தொடக்கம் எது?

''வாழ்வு நாற்பதாவது வயதில் தொடங்குகிறது'' என்கிறார் ஓர் அறிஞர். அனுபவமுள்ள வாழ்வு இந்த வயதில் தான் ஆரம்பிக்கின்றது என்பதே இதன் பொருள். எமது குறிக் கோள்களை நாம் உணர்ந்து செயற்படத் தொடங்கும் போதுதான் வாழ்வு தொடங்குகின்றது என்பதே இதன் தெளிவான விளக்கம்.

வாழ்வின் தொடக்கம் இல்லற வாழ்வின் ஆரம்பத்தில் தொடங்குகின்றது என்பது மக்களது பொதுவான எண்ணம்.

ஆனால் தங்கள் உடன் மனிதர்களுடன் மனித உள்ளங்கள் பிறர் அன்பால் துடிக்கத் தொடங்கும் பொழுதும் — அன்பின் உண்மையான விதிகளை மக்கள் கடைப்பிடிக்கத் தொடங்கும் பொழுதிலும்தான், இறைவன் எந்த வாழ்வை நாம் வாழ வேண்டும் எனப் படைத்தாரோ அந்த வாழ்வு எம்மிடம் ஆரம் பிக்கின்றது என்பது என் கருத்து.

அன்புடன்தான் நமது வாழ்வு ஆரம்பிக்கின்றது. ஏனெனில் நான் எனும் அடிமைத்தனத்தில் இருந்து அன்புதான் நம்மை விடுவிக்கின்றது. வாழ்வில் எமக்கு அச்சமூட்டும் பகைஇருளை அகற்றிவிடுவதும் அன்புதான்.

''அன்பில் அச்சத்தைக் காணமுடியாது அன்பு அதை விரட்டி ஓட்டுகின்றது'' என்கிறார் புனித அருளப்பர்

அன்பு நம் ஆற்றலை அதிகப்படுத்துகின்றது நம்மை உத்தமர்களாக்குகிறது. ''அன்பு ஆன்மாவின் ஆற்றலை வளர்க் கிறது'' என்கிறார் தோமஸ் கெம்பிஸ்.



## ஏற்றத் தாழ்வுகளை அன்பு சமன்படுத்துகிறது

''நீயும் போய் அவ்விதமே செய்'' என்று நல்ல சமாரித்தன் உவமையில் கிறிஸ்து இயேசுவால் சொல்லப்பட்ட மொழியை ஒரு அறிஞர் தன் வாழ்வில் கண்டிப்பாக கடைப்பிடித்து வந்தார்.—

கடுங்குளிரும், மழையும் மிகுந்த மாரிகாலத்தின் ஒரு நண்பகல் அது. அந்த நகரில் மனித நடமாட்டம் குறைந்த ஒரு பகுதியில் அவருடைய வீடு இருந்தது. அவர் தமது அலுவலக அறையில் நின்று பலகனி வழியாக வீதியைப் பார்த்தார் அங்கே—

கந்தை உடை. கிழிந்து-தேய்ந்த காலணிகள், நெஞ்சு வெடித்துவிடுமோ என அஞ்சும்படிக்கு இருமல். கரங்களோ, தான் சுற்றி மூடிக் கொண்டிருக்கும் போர்வையைப் பிடித்துக் கொண்டிருந்தன. இந்த நிலையில் சேறும் சகதியும் நிறைந்த அந்த வீதியில் தள்ளாடிய வண்ணம் கால்களை உறுதியாக ஊன்ற முயற்சித்துக் கொண்டே நடந்துகொண்டிருந்தது ஒரு மனித உருவம்.

குற்றுயிராக விடப்பட்ட நிலையில் இருந்து அன்று நல்ல சமாரித்தனால் காப்பாற்றப்பட்ட மனிதனைப்போன்று அப்பெரிய வருக்கு அம்மனிதன் தோன்றினான். ''என் உடன்பிறப்பான அந்த மனிதனுக்குக் கொடுக்க என்னிடம் உடைகளும் காலணி களும் உண்டு'' என்று அந்த அறிஞர் நினைத்தார். தனது பல கனியின் கதவுகளிலே தட்டினார். அவன் திரும்பிப்பார்த்தான் அவர் அவனைத் தன்னிடம்வரும்படி சைகை காட்டினார்.

தன்னுடைய அறையைத்திறந்து அவனை உள்ளே அழைத்துச் சென்றார். தான் எடுத்துவைத்திருந்த உடைகளையும் காலணிகளையும் அந்த ஏழைக்கு அணிந்துவிட்டார். தாம் அவனுக்கு உணவு கொண்டு வரும்வரை அவன் நெருப்பின் அருகில் இருந்து குளிர்காயும்படி செய்தார். அவன் உணவு உண்டு, இளைப்பாறிய பின் அவன் வழிச் செலவுக்கு பணமும் கொடுத்து அனுப்பிவைத்தார்.

இந்தப் பெரியாரின் செயலில் ஏற்றத் தாழ்வுகள் காணப் பட வில்லை. கேள்வியோ, பேச்சோ, அல்லது தயக்கமோ இடம் பெறவில்லை. அந்த மனிதனை உள்ளே அழைக்குப்படி எவரும் அவரைக் கட்டாயப்படுத்தவில்லை. களங்கமற்ற அன்பின் தாழ்ச்சியான பணிவிடையே இங்கு இடம் பெற்றது.

அன்புதான் உண்மையான குடியாட்சியையும் குடிமக்களை யும் உருவாக்குகிறது. தோமஸ் கெம்பிஸ் கூறுவது போன்று ''ஏற்றத்தாழ்வுகள் அனைத்தையும் சமன்படுத்துவது அன்புதான்''

## நம்மிடம் நாமேகேட்போம்

அன்பு எனும் இந்த அழகிய பண்பு எங்கிருந்து வந்தது. இறைவன் நம் இதயத்தில் விதைத்திருக்கும் வித்தில் இருந்து இது வளருகிறதா?

அதன் வளர்ச்சியில் நாம் கவனம் செலுத்த வேண்டுமா? அன்பின் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் பயிற்சிகள் ஒழுங்குகள் உண்டா?

அப்படியானல் அவை என்ன?

## இதயத்தில் ஒலிப்பது இறைவன் குரல்

''உங்கள் இதயத்தில் நீங்கள் உணரும் தன்மைதான் சரியான உண்மைகள் இறைவனின் அன்பு நம் உள்ளத்தில் பேசி நம்மூலம் பணிபுரிய விரும்புகிறது என்பதைச் சிறுவர் சிறுமியருக்குச் சொல்லுங்கள்'' என்கிறார் அல்பேட் சுவிட்சர் எனும் மேதை

அன்பு சகோதரத்துவம் என்பன இந்நாளில் ஓரளவு வளர்ந்தேயிருக்கின்றன. நல்லெண்ணம், சகிப்புத் தன்மை, தியாக



வாழ்வு எனபனவற்றிற்காக மக்கள் மத்தியிலும், நாடுகளுக் கிடையிலும் குரல்கள் எழுப்பப்படுகின்றன. சமூகத்தில் புதிது புதிதாக முளைக்கும் சமூகப் பிணிகள் எல்லாம் உடனுக்குடன் போக்கப்பட்டாலும் புதிய சீர்கேடுகள் பல உடனே தலை தூக்கவும் செய்கின்றன.

மதுபான விற்பனை நிலையங்களால் இளைஞர் சமுதாயத்தில் ஏற்படும் அழிவுகளும் —

சூதாடிகள், திருடர், கொலைஞர் ஆகியோரின் குற்றங்கள் எல்லாம் உயர் பதவி வகிப்போர் பெறும் கையூட்டுக்களினல் மூடிமறைக்கப்படுதல் — அல்லது புனைகதைகள்மூலம் திரித்துச் சரி செய்யும் படுபயங்கரமான பிற்போக்குத் தனங்களும் காணப்படுகின்றன

பகை, பேராசை போன்ற இந்தச் சமூகநோய்களைத் தீர்த்துக்கட்ட நல்ல உள்ளம் கொண்ட பலர் துடிக்கின்றனர். ''முள்ளை முள்ளால் எடுப்பதுபோன்று தீயோரை, வன்முறை களால்தான் திருத்தமுடியும்'' என்று வேறு சிலர் பிழையான பயங்கர நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றனர்.

## சமூகப் பிணிகள் தீர தனிநபர் ஒத்துழைப்புத் தேவை

தனிப்பட்டவர்களின் ஒத்துழைப்புடன்தான் சமூகச் சீர் கேடுகளைச் சாகடிக்கமுடியும். ஒவ்வொரு தனிமனிதனும் தனது மீட்புக்காக உழைக்க வேண்டும்.

அன்பு என்றால் என்னவென்று ஒவ்வொரு தனிமனிதனும் தெரிந்திருக்க வேண்டும். தாம் தெரிந்து கொண்டதின்படி பிறரை நேசிக்க வேண்டும். உடலில் தொற்றுநோய் பரவாமல் தடுப்பு ஊசிகளைப் பயன்படுத்துவது போல சமூகப் பிணிகளாம் பகை, பேராசை போன்றவற்றை ஒழித்துக் கட்டும் தடை மருந்தாக எந்தவொரு அற்ப மனிதனையும் பயன்படுத்த வேண்டும் — பயன்படுத்த முடியும்.

## அன்பை ஆக்கும் பணி

அன்பு தொற்றும் தன்மையுடையது. நேர்மையும் இரக்கமும் உள்ள ஒருவருடன் நாம் பழகத் தொடங்கும்போது நம்மை அறியாமலே நம்மிடமுள்ள தீய பண்புகள் மறையத் தொடங்குகின்றன. எனவே அன்பையும், பிறர் உறவையும் உருவாக்குவதற்கு நாம் படிப்படியாகத்தான் முயற்சிக்க வேண்டும் என்றில்லை. அல்லது அவநம்பிக்கைப்படத் தேவையுமில்லை. இந்தப் புதிய வாழ்வில் தனிமனிதன் ஒருவன் ஊக்கத்துடன் முன்னேறும்போது - இதன் உயரிய வழியால் அவன் பிறரைக் கவர்ந்து கொள்கிறன்.

நிறைந்த அன்பு உள்ள ஒருவர் வியப்புக்குரியவராக, மற்றவர்களுக்கு மருட்சியைக் கொடுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றர்.

''அத்தகைய ஒருவரின் அன்பு சாதனைகள் மலிந்தது. நேர்மை உள்ளது. பரிவு மிக்கது. இன்பம் தருவது. கவர்ச்சிகரமானது. உறுதி கொண்டது. பொறுமை நிறைந்தது. பிரமாணிக்கம் தவருதது. விவேகம் உள்ளது. முயற்சி மிக்கது. அஞ்சா நெஞ்சம் கொண்டது. தன்னைத் தேடுவதில்லை.'' என்கிறர் தோமஸ் கெம்பிஸ். அன்பின் பெருமையை கனவில் தானும் குறைத்து மதிப்பிடத் தெரியாத இந்தப் பெரியார். மேலும் ''அதிகம் அன்பு செய்வோனே அதிகம் சாதிக்கிறன்'' என்கிறர் இவ்வார்த்தைகளில் தான் எத்துணை பொருள் பொதிந்துள்ளன!

## அன்ருட வாழ்வில் அன்பின் பணி

நம்முடைய மனித உறவுகள் அனைத்தோடும் அன்புக்கு ஈடுபாடு இருக்கிறது.

நமது தெருக் கதவினடியில் யாரோ தெரியாதவனின் அழைப்புக் குரல் கேட்கிறது —



நமது வீட்டின் வாசற் கதவு தட்டப்படுகிறது —

வீதியில் யாரோ ஒருவன் நம்மோடு மோதிக்கொள்கிறன்—

யாரோ ஒருவரைப்பற்றி எவரோ எம்மிடம் விசாரிக்கிறர்கள் —

எம்மிடம் ஏதோ உதவிகோரப்படுகிறது —

வீதியிலே விகாரமான ஒரு சொறி நாய் இரக்கத்தோடு எம்மை ஏறெடுத்தும் பார்க்கின்றது —

இவைகள் எல்லாம் வெறும் சாதாரண நிகழ்வுகள் அல்ல நாம் அன்புகாட்டவேண்டும் என்பதற்காக இறைவனல் எமக்கு அளிக்கப்படும் வாய்ப்புகள், சந்தர்ப்பங்கள். இவை போன்ற சம்பவங்கள் என்றும். எங்கும், எப்பொழுதும் மலிந்து காணப்படுகின்றன. ஆகையால் அன்பு செய்வதற்கு சந்தர்ப்பம் எப்பொழுதும் உண்டு. எனவே அன்புக்கு ஒரு மணித்துளி தானும் ஓய்வு இல்லை.

அன்பு ஒருபைத்தியம் அது அங்கும் இங்கும் நின்று கொண்டு அவலக் குரல் எழுப்புகின்றது.

அனைவராலும் வேண்டப்படும் அன்பு — அவர்களாலும், இவர்களாலும், வருந்தி அழைக்கப்படும் அன்பு — ஐயக்கண் கொண்டு பார்க்கப்படுகின்றது. எள்ளி நகையாடப்படுகின்றது. ஏக்கத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்டு புறக்கணிக்கப்பட்ட நிலையில் நிற்கிறது.

ஆனல்......

தோல்வியைக் கண்டு துவளாத அன்பு அந்நிலையிலும் தன்னம்பிக்கையுடன் தலைநிமிர்ந்து நிற்கிறது. சுமையை எண்ணி அது சோரவில்லை. சிக்கலை எண்ணி அது சிந்திக்கவில்லை. இயலாதே என்று அது இரங்கிக் கெஞ்சவில்லை. தளர்ந்த நிலையிலும் தடம்புரளவில்லை. சலிப்பு அடையவில்லை. எதைக் கொடுக்கவேண்டும்? எதைக் செய்ய வேண்டும்? என்ற கட்டுப்பாடு அன்புக்கு இல்லை. பிறருக்காக உயிரைக் கொடுக்க வேண்டி வருகினும் அது அஞ்சிப் பின் வாங்குமா?

## அன்பை நிரூபிப்பது செயல்

அன்பு செய்ய வேண்டுமெனில் ஏதாவது நன்மை செய்ய வேண்டும்

உணர்ச்சிமிக்க அன்பானது உள்ளத்தில் சுரக்கும் ஊற்ருகும், அதில் உண்மை, கனிவு, பாசம், இதயம் திறந்து கூறும் நல்வாழ்த்து இவைகள் எல்லாம் நிறைந்திருக்கும்.

"உங்கள் சகோதரனே சகோதரியோ, உடுக்க உடையின்றியும், பட்டினியாலும் வருந்துகின்ருர்கள். நீங்கள் அவர்களைப் பார்த்து 'கவலைப்பட வேண்டாம். எல்லாம் கிடைக்கும்' என்று கூறி உதவி செய்யாமல் உங்கள் கைகளை இறுக்கி மூடிக்கொண்டால் இதனல் வரும் நன்மைகள் என்ன?'' என்று கேட்கிருர் புனித யாகப்பர். கையால் உதவி எதுவும் செய்யாமல் வார்த்தையினுல் வழங்கும் ஆறுதல் மொழிகள் நகைப்புக்கு உரியனவே.

## அன்பே வாழ்வின் வழி

''பிறர் அன்புக்கு எமது வாழ்வில் இரண்டாம் இடத்தைக் கொடுத்தால் போதுமானது. அதை ஒரு பொழுது போக்காய்க் கொள்ளல் வேண்டும்'' என்பது அல்பேட் சுவிட்சரின் கருத்து ஆனல் அது ஏற்றுக்கொள்ளக் கூடியதன்று. அது வெறும் பொழுது போக்காக அல்ல. எமது வாழ்விற்கு வழியாக அமைய வேண்டும். ஏனெனில் அன்பு தன் தேவைக்கு என்றைக்கும் முதல் இடத்தைக் கொடுப்பதில்லை.

''ஒவ்வொருவரும் உங்கள் சொந்த நன்மைகளில் அல்ல மற்றவர்களின் நன்மையில்தான் அக்கறை கொள்ளுங்கள்'' என்கிருர் புனித சின்னப்பர்.

அன்பின் வழி இனிமையானது. வேடிக்கையானது. விநோதங்கள் மலிந்தது. அதன் வழி தனிவழியல்ல. ஏனெனில் பலர் அதன் வழியில் இன்பமுடன் பயணம் செய்துகொண்



டிருக்கிருர்கள். அதன் வழியில் கருமுகில்கள் படிவதில்லை. இருளின் சாயலை அங்கு காணமுடியாது.

''ஏனெனில் தன் சகோதரனைச் சிநேகிக்கிறவன் ஒளியின் முன் வாழுகின்ருன். அந்த வழியால் நடக்கிறவர்களை இறைவன் கண்காணித்து வருகிருர். ஆகையால் நல்லதைச் செய்து, நன்மையில் பங்குபெற மறந்து போகாதீர்கள். ஏனெனில் இந்த வித தியாகங்களில்தான் நாம் இறைவனைப் பிரியப்படுத்த முடியும்.'' இது புனித சின்னப்பர் கூறிய கருத்து.

---

# என் மொழி 2

## கண்டு பிடிப்பு

மக்கள் தெளிவாகத் தெரிந்து கொண்டிராத விடயத்தை—

அவர்களுக்கு விளங்காமல் இருக்கும் ஓர் உண்மையை—

அவர்கள் பயன்படுத்தாமல் இருக்கும் ஒரு சக்தியை—

அவர்கள் அறிந்து பயன்படும்படி செய்வதே கண்டுபிடிப்பாம். மக்கள் அறியாமலும், விளங்காமலும், பயன்படுத்தாமலும் இருப்பவைகளில் அன்பின் தேவையும் ஒன்றுக உள்ளது

அருட்திரு தமியான் அடிகள், புனித பொஸ்கோ ஓசானும், சங்கைமிகு கபிரினிதாயார். புளோறன்ஸ் நைட்டிங்கேல், அல்பேட் சுவிட்சர் மற்றும் இளேஞர் நகரை உருவாக்கிய வண. பிளே நெகன், அன்னை தெராசா இவர்களைப் போன்ற பலரும் அன்பின் அவசியத்தைக் கண்டுபிடித்தார்கள். அதே வேளையில் நமது அன்றுடவாழ்வின் பிரச்சனைகளைச் சமாளிப்பதற்கு அன்புதான் அத்தியாவசியமானது என்பதை எம்மிற் பலர் இன்னும் கண்டுபிடிக்கவே இல்லை. இன்பசரமான வாழ்வு நடாத்துவதற்கு நமக்கு அன்பு தேவை என்பதை நாம் விளங்கி ஏற்றுக் கொள்வதுண்டா?



அன்பின் அவசியம் பற்றி நாம் பல வழிகளிலும் ஆய்ந்து பார்க்க முடியும்

'வொல்கா' நதியில் உடலொடிய படகு செலுத்திய உழைப்பாளர்களில் சிலர் அன்பைக் கண்டார்கள் —

அயறிஸ் குன்றுகளின் அடிவாரத்தில் இல்லிடமற்றவர்களாய் விரட்டியடிக்கப்பட்ட விவசாயிகளிலே வேறுசிலர் கண்டார்கள்—

பட்டினியால் வாழும் இந்தியச் சிறுவர்களிலே இன்னும் சிலர் கண்டார்கள் —

அகதிகளாக ஊர் விட்டு ஊருக்கு அடைக்கலம்தேடி வந்தவர்களிலே எம்மவர்கள் கண்டார்கள் —

உலகினில் அன்பு தேவைப்படுகிறது — அவசியமாக இருக்கின்றது என்பதற்குரிய சான்றுகளே இவை

ஜேர்மானியப் பேராசிரியரும், இசை மேதையுமான அல்பேட் சுவிட்சர் ஆபிரிக்க மக்கள் படும் அல்லல்களை தன் அகக்கண் கொண்டு பார்த்தார். துன்பச் சுமையால் அழுந்தியிருப்போருக்கும் மனிதனுகப் பிறந்தவனுக்கு ஏற்படக்கூடிய இன்னல்களின் தாக்கங்களைச் சுவைப்போருக்கும் அன்புகாட்ட வேண்டியது அவசியம் என்பதை — அந்த உண்மையை அவர் கண்டுணர்ந்தார்.

### துன்பங்களில் இருந்து விடுதலை பெறுவதே உயிர்களின் தவிப்பு

உயிர்கள் அனைத்துக்கும் உள்ள விடுதலை வேட்கை யாதெனில் தமக்குள்ள துன்பங்களில் இருந்து விடுதலை கிடைக்க வேண்டும் என்பதே இவ்விதமான மனித உயிர்களின் ஏக்கம் அன்பின் அவசியத்தை உலகிற்கு உணர்த்துகின்றன. "இன்று உலகில் தட்டுப்பாடாக இருப்பது யாதெனில் பிறர் சேவைக்காக

தன்னை அர்ப்பணிக்கும் மனிதர்கள்தான்'' என்கிறார் அல்பேட் சுவிட்சர். இது நாம் மனதில் பதித்துக்கொள்ள வேண்டிய சிந்தனைப் பொருளாகும்.

## தாயின் பங்கு

அன்பும், அழகும், பண்பும் உள்ள தாயை அவனது மகன் மிகவும் நேசிக்கிறான். ''அம்மா நான் உன்னை நேசிக்கிறேன்'' என்று அவன் தன் தாய்க்கு அடிக்கடி கூறுவான்.

அன்னைமீது அவன் கொண்டுள்ள அளப்பரிய அன்பின் பொருட்டு அவன் அப்படிக் கூறுகிறான் என்பதை அவன் உணர்ந்திருக்கக்கூடும். ஆனால் அத்தகைய தாயின் அன்புக்கும் நான் இங்கே குறிப்பிடும் அன்பின் தேவைக்குமிடையே அதிக வேறுபாடு உண்டு.

அவனது அந்தத் தாய்—அன்புமிக்க தாய், அறிவுமிக்கவளாக இருந்திருந்தால், என்னினிய அன்னை எனக்குச் செய்தது போன்று வாழ்க்கையின் இயல்பான— நாம் எதிர்நோக்கக் கூடிய வறுமை, துன்பம் ஆகியவற்றில் போதிய அனுபவம் பெறும்படி செய்திருப்பாள்.

அனுபவ வாயிலாக அவன் பெறுவதற்கு அவள் கையாளக் கூடிய ஒரு முறை—

அன்புக்காகவும், ஆதரவுக்காகவும் ஏங்கி, அவற்றைத் தனக்குக் கொடுப்பார் யார்? என்று எதிர்பார்த்துக்கொண்டு இருக்கும் நோயாளியான ஒரு விதவையை சந்திப்பதற்கு தன் மகனை அன்னை அழைத்துச் செல்லலாம். அப்படிச் செய்கையில் அவனது கைச் செலவிற்காகக் கொடுக்கப்படும் சில்லறையின் ஒரு பங்கினை—அன்றேல் அவனுடைய சிற்றுண்டியினை அவன் தானே விரும்பி அந்த ஏழை விதவைக்குக் கொடுக்க அவன் உணர்வுகள் தூண்டும். அப்படி அவன் கொடுக்கத் தொடங்கும் போது உண்மையான அன்பின் இயல்பை முதன்முறையாக அவன் தன்னுள் உணர்கின்றான். இவ்வேளையிற்றான் தனது



சமயம் வலியுறுத்தும் கடமைகளையே உணரத்தொடங்கியுள்ளான் என்று கூறுவதும் மிகையாகாது.

ஆம் ''விதவைகளை சந்தித்து ஆறுதல் கூறுவதால் சமயம் புனிதமடைகிறது'' என்கிறார் புனித யாகப்பர்.

## அன்பு இல்லா வாழ்வு ஆபத்தான பயணம்

அன்பின் அவசியத்தை உணராதவன் வாழ்வு இருட்டு வழியினில் செல்லும் நெடும் பயணமாகும். அத்தகையோன் வாழ்வில் அமைதியென்பது கிடைக்கமுடியாததொன்றாகும்.

''திரு. ஸ்குறூஜ்'' என்பது சாள்ஸ் டிக்கன்ஸ் எழுதிய கிறிஸ்துமஸ் சிறுகதையாகும் இது படிப்பினைகள் பல நிறைந்த படைப்பு.

திரு. ஸ்குறூஜ் தனது கனவிலே கிறிஸ்துமஸின் ஆவியைக் காணுமுன்னர், அவர் வாழ்வு உலோபித்தனமும் கொடுமையும் கொண்டதாக விளங்கியது. அவர் அன்பற்ற வாழ்க்கை நடாத்தி வந்துள்ளதை கனவு அவருக்குக் காட்டியது. அவரது அகக் கண்கள் திறந்துகொண்டன. வாழ்க்கையின் அன்றாட நடைமுறைகளில் அதிசயிக்கத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. என்னை முந்திக்கொண்டு 'வாழ்வு அன்புடன் ஆரம்பிக்கின்றது' என்று டிக்கன்ஸ் அச்சிறுகதைக்கு பெயரிட்டிருக்கலாம்.

நம்மில் பலர் உடல் உபாதையுறுகிறார்கள். வேறு சிலர் வறுமையின் பிடியில் வாடிவதங்குகின்றனர். இப்படியாக மீத முள்ளோர் அனைவரும் ஏதோ ஒரு குறையை எம்மில் கொண்டவர்களாகவே உள்ளோம். எனவே உலகில் அனைவருக்கும் அன்பு தேவைப்படுகின்றது.

'வறியவர்கள் எப்பொழுதும் உங்களோடு இருக்கிறார்கள்' என்று யேசு தம் சீடருக்குக் கூறியுள்ளார். அன்பும் கனிவும் கொண்ட இதயங்களுக்கு அகிலம் அழியும்வரை செய்யவேண்டிய பணிகள் தொடர்ந்துகொண்டேயிருக்கும்.

## இறைவனின் சுவீகாரப் பிள்ளைகள் என்பதால் நாம அனைவரும் சகோதரர்கள்

பகை, சந்தேகம், அடுத்தவன் கருத்தை அலட்சியம் செய்தல் ஆகிய தவறுகள் இன்று உலகெங்கும் மலிந்து காணப் படுகின்றன. மனிதன் தன்னவரோடேயே போர் செய்கிறான். ஒருவர் மற்றவரைப் பகைத்தல், அடுத்தவர் உரிமைகளை மறுத்தல் தவிர்க்கப்படல் வேண்டும். எல்லோருக்கும் பொதுவானதாய் இருக்கும் மனிதத்தன்மையையும், இறைவனின் பிள்ளைகளாக எல்லோரும் சுவீகரிக்கப்பட்டிருப்பதையும் மனிதர்கள் நினைவு கூரவேண்டும். இந்தச் சுவீகரிப்பினால் நாங்கள் ஒருவருக்கு ஒருவர் சகோதரர்களாயிருக்கிறோம். இதை மனிதர்கள் அறிய வேண்டும். அன்பு செய்யப் பழகுதல் வேண்டும். இன்றைய மனிதனின் இதயத்தில இல்லாமல் இருப்பது அன்பு ஒன்றுதான். ஆனால் அத்தியாவசியமானதும் அதுதான்.

"ஒருவர் ஒருவர் மட்டிலும், எல்லா மனிதர்கள் மீதும் உங்களுக்கு அன்பு மிகு படி ஆண்டவர் அருள்புரிவாக" என்று வேண்டிக் கொண்ட போது புனித சின்னப்பர் இதை நன்றாக அறிந்திருந்தார்.

## அள்ளிக் கொடுப்பதுடன் கடமை முடிந்து விடுவதில்லை

பொதுமக்களின் நலன் கருதல், அற நிலையங்களை ஆதரித்தல் ஆகியவற்றில் அரசு இந்நாட்டில் ஓரளவு அக்கறை செலுத்தி வருகிறது. இதனால் அரசும் நாட்டின் தலைவர்களும் அத்தோடு சம்பந்தப்பட்டவர்களும் பார்த்துக் கொள்வார்கள் என்ற நினைவுடன் பொதுநலப்பணிகளில் நின்று மக்கள் நழுவிக் கொள்கிறார்கள் வேறு சிலர், அறப்பணிகளுக்கென்று பணத்தை அள்ளிக் கொடுப்பதோடு தம்பணி முடிந்தது என்று திருப்தி யுற்று அமைந்து கொள்கிறார்கள்.



அறப்பணிகளுக்கென அகத்தூய்மையோடு அள்ளிக் கொடுப்பது நல்ல செயல்தான். அவர்களது செய்கையும் வாழ்த்துதற்குரியதுதான். அவர் செயல்களும் அதனால் விளையும் பயன்களும் ஆண்டாண்டு காலமாக நிலைத்து நிற்பனதான். ஆயினும் அன்பின் பணி என்பதன் மட்டில் ஒருவர் அள்ளிக் கொடுப்பதோடு அவர் பணியானது பூரணத்துவம் பெற்று விடாது. அள்ளிக் கொடுப்பது என்பது அன்புப் பணியைப் பொறுத்த வரையில் ஆரம்பப்படியேயாகும்—முதல் அடியே யாகும். எனவே கொடுப்பதோடு மட்டும் நில்லாமல் தான் தனது நிலையில் இருந்து பல படிகள் இறங்கிப் பணிசெய்ய தன்னையே அர்ப்பணிக்க வேண்டும்.

ஏழைகள், வல்லமை குறைந்தவர்கள், நோயாளிகள், முதியவர்கள் எல்லோரையும் உலகெங்கிலும் உள்ள அற நிறுவனங்கள் தம்மால் முடிந்த அளவு ஆதரித்து வந்தாலும்— இன்னும் எவராலும் கவனிக்கப்படாத நிலையில் துன்பத்தீயில் துவண்டு கருகிக்கொண்டிருக்கும் இரக்கத்துக்குரிய மக்கள் குழுவொன்று உலகில் இருந்து கொண்டேயிருக்கிறது.

இவர்கள் யார்? தனிப்பட்டவர்களின் தயாளசிந்தை, தாபரிப்பு, பாதுகாப்பு என்பனவற்றால் மட்டுமே உதவிபெற்று வாழக் கூடியவர்களாகும். நீங்கள் அன்பு செய்வது என்பது உண்மையானால்; உங்கள் வாழ்நாளில் நீங்கள் தனிமையில் இருக்கும் சமயம் தவிர்ந்த காலங்களில் உங்களது உதவியை எதிர்நோக்கக் கூடிய மனநிலையில் உள்ள ஒருவர்தானும் உங் களின் குரல் எட்டக் கூடிய தொலைவில் இருப்பார். அப்படி ஒருவர் இல்லாமல் ஒரு வினாடியாவது இருக்க முடியாது.

## குடும்பத்திலும் சமூகத்திலும் அன்பு எடுக்கும் உருவம்

அன்பின் உருவம் என்ன?

அதற்குரிய பதில், சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப அதன் உருவம் தோற்றமளிக்கும் என்பதே.

ஒரு குடும்பத்தின் உறுப்பினன் ஒருவனிடம் அன்பு கேட்டு நிற்பதென்ன?

சமுதாயத்திலும் குடும்பத்திலும் அன்பு நிலவ வேண்டியது அவசியம் இது நாம் அனைவரும் அறிந்ததே. வேலைப் பளுவைக் குறைக்கத் துணை நிற்கும் நவீன இயந்திரங்களாலோ—வரவேற்பு வைபவங்களில் இடம் பெறும் அலங்காரங்கள், ஆட்டங்கள், இசைவிருந்து, ஒலிபெருக்கி போன்றவற்றாலோ அன்பு இல்லா வெற்றிடத்தை நிறைவு செய்ய முடியாது. அன்பு இல்லா இடத்தில் ஆயிரம் இருப்பினும் அங்கு ஒன்றுமில்லை.

எம் ஒவ்வொருவரையும் பார்த்து அன்பு கூறுவது என்ன?

''ஈகைக் குணம் உள்ளவனாக இரு, உன்னிடம் கேட்கும் எவனுக்கும் கொடு'' (புனித மத்தேயு)

'ஒருவர் ஒருவரை மன்னித்து சகிப்புத் தன்மையைக் காண்பியுங்கள். மற்றவர்களுக்கு எதிராக உங்களுக்குள் ஏதாவது முறைப்பாடு இருந்தால் நம் ஆண்டவர் உங்களை மன்னிப்பது போல நீங்களும் அவர்களை மன்னித்து விடுங்கள். வயது முதிர்ந்தவர்களுடன் அலட்சியமாய் நடக்க வேண்டாம். பொய் சொல்லவேண்டாம். இளைஞர்களுக்குச் சினம் மூட்டி அவர்களை அதைரியப்படுத்தவேண்டாம்'' (புனித சின்னப்பர்)

நெருங்கிய அன்பானது உண்மை, பொறுமை ஈகை ஏனும் உருவங்களில் ஒரு குடும்பத்திலே தேவைப்படுகின்றது.

வீட்டிற்கு வெளியே வேலைத்தளங்களிலும் சமூக வாழ்விலும் வேறு உருவங்களில் அன்பின் தேவை காட்சி தருகின்றது.

## மானிடத்தின் சிறப்பான தேவை

எல்லாத் தேவைகளையும் கடந்து நிற்பதாக நாமுணரும் மனிதத் தன்மைக்கு இன்னுமொரு முக்கியமான தேவை ஒன்றுண்டு.



உணவு, உடை, உறையுள் போன்ற தேவைகளுக்கும் உடலுக்குந் தேவையாக விளங்கும் அனைத்து உதவிகளுக்கும் அது அப்பாற்பட்டது. இது உலக மனிதர்களுக்கெல்லாம் பொதுவான தேவை

''மனிதர் என்ற மட்டில் நாங்கள் எல்லோரும் சமமாக நடாத்தப்படுதல் வேண்டும். எங்கள் தனி மனித உரிமைகள் பாதுகாக்கப்படுதல் வேண்டும்.'' இது எல்லோருக்கும் உள்ள இதய ஏக்கம் மட்டுமல்ல மனிதனுக்கு உள்ள சிறப்பான தேவையுமாகும்.

ஒருவன் கல்வியறிவற்ற ஏழையாக இருக்கலாம். ஒழுக்க நெறிகளினாலோ, அல்லது சமூக ஏற்றத்தாழ்வுகளின் நியதிப்படியோ அவன் தாழ்ந்தவனாகக் கருதப்படுதல் கூடும். இருப்பினும் தன் தகுதிக்காக ஏங்கும் நெஞ்சம் அவனுக்கும் உண்டு இந்த மனிதத் தேவையை நிறைவு செய்ய வேண்டியது நமது கடமையாகும். நாம் எமது இக்கடமையை நிறைவேற்றத்தவறினால்; எமது இதயங்கள் ஈரலிப்புத்தன்மை அற்றவை. மனங்கள் மரத்துப் போனவை என்பதே மிகப் பொருந்தும்.

''எல்லா மனிதரையும் மதியுங்கள்'' என்று ஆணையிடுகிறார் புனித இராயப்பர், இவ்வாணைக்கு விதிவிலக்கானவன் எவனுமில்லை. அன்பின் அவசியத்தை ஆணித்தரமாக அறிந்து கொண்டதன் காரணத்தினாற்றான் புனித சின்னப்பரும் ''சகோதர பாசத்துடன் ஒருவரை ஒருவர் நேசித்து மரியாதையுடன் நடந்து கொள்ளுங்கள்'' என்கிறார்

ஒற்றுமைப் பிணைப்புக்கு, வாழ்வின் அமைதிக்கு, மனிதன் இன்ப வாழ்வை அமைப்பதற்கு மற்றவரை மதித்து மரியாதை செலுத்த வேண்டும் என்ற தடையற்ற அன்புத் தேவை ஒன்றுண்டு.

## மனிதர் எல்லாரையும் மதியுங்கள்

ஒஸ்கார் வைல்ட் (Oscar Wilde) என்பவர் இடிவீழுந்த மனத்தினராய் விரக்தியுற்றவராக "ரீடிங் ஜெயில்" எனும் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்படுவதற்காக புகைவண்டி நிலையத்தில் நின்றுகொண்டிருந்தார். அந்தக் கோலத்திலே அவர் நின்ற பொழுதும் அவரைக் கடந்து சென்ற செல்வந்தர் ஒருவர் தமது தொப்பியை கழற்றி அவருக்கு மரியாதை செலுத்தினர். அந்த ஒரு சிறு நிகழ்ச்சியானது ஒஸ்கார் வைல்டின் இதயத்தில் இடம்பெற்று விட்ட மறக்கமுடியாத சம்பவமாகும். அதைப்பற்றி அவர் கூறும் பொழுதெல்லாம், உணர்ச்சிவசப் படுவராம். ஏனெனில் அந்தச் செல்வந்தன் செய்த அச்சிறிய செயலில் அன்பு இருந்தது.

## அடிமைக் கப்பலிலே

அழுக்கும் அசிங்கமும் நிறைந்த இடம்—குமட்டலும் கும்மிருட்டும் சேர்ந்த இடம் தான் ஒரு கப்பலின் அடித்தளம் என்பதை அதைக் கண்டவர்கள் ஒப்புக்கொள்வார்கள். அந்த அசுத்தத்தின் மத்தியிலே வாழ்வுக்காகப் போராடிக் கொண்டிருக்கிறது ஒரு மனித உருவம். அவன் ஒரு கறுப்பு இனத்தவன். ஆம், நீக்கிரோ. அந்த இடமும் மக்கள் வெறுக்கும் இடம். அந்த மனிதனும் வெள்ளையர் வெறுக்கும் இனம். ஆனால்... அவனது அந்த நிலையிலும் வெள்ளையர் ஒருவர் அவனைத் தூக்கி தன்னோடு அரவணைத்த வண்ணம் காட்சி தருகின்றார். அவர் பெயர் பீற்றர் கிளவர் (Peter Clever). "எல்லாரையும் மதியுங்கள் என்ற இராயப்பரின் மணிவாக்கின் மாதிரிகை யல்லவா அந்தச் செய்கை.

## மனிதன் எவனும் நிறைவுள்ளவனல்ல

எம்மில் நாமே தன் நிறைவு கொள்பவர்கள் அல்ல. எல்லோரும் எம்மைப் புரிந்து கொள்ள வேண்டும் இரக்கம் காட்ட வேண்டும் என்ற ஏக்கம் எம் எல்லோர் இதயங்களின்



மாநகர நூலக சேவை யாழ்ப்பாணம்.

அடித்தளங்களிலும் உண்டு. இந்தக் குறை மட்டும் எம்மிடம் இல்லை யென்று எவரும் இறுமாந்து கூற முடியாது. இப்படி ஒரு குறை உள்ளதே என்று எவரும் வெட்கப்பட வேண்டியதுமில்லை.

அனைத்திற்கும் முதல்வரான கிறிஸ்துவே இரக்கத்துக்காக இரந்த சம்பவமும் உண்டு. அவரது மரணத்துயரின் இறுதிக் கட்டத்தில் ஒரு மணி நேரம் தம்மோடு விழித்திருக்கும்படி தமது சீடரை அவர் கெஞ்சிக் கேட்கவில்லையா?

என்றைக்குமே நாம் தன்னிறைவு உள்ளவர்களாக எமது தேவைகளை நாமே கவனிக்கக் கூடியவர்களாக இல்லை. எமது மகிழ்ச்சிக்காகப் பிறரை நாம் என்றும் எதிர்நோக்குகின்றோம். வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ நாம் எப்பொழுதும் உதவிக்குரல் எழுப்பிக் கொண்டேயிருக்கிறோம். எமது அன்றாட வாழ்க்கையில் பல தடவைகள் இது நடைமுறையில் நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது.

### நமக்குத் தேவை பிறர் உதவி !
### பிறருக்குத் தேவை நமது உதவி !

எங்களின் அன்பும் உதவியும் அடுத்தவருக்கு அவசியமாக விருக்கின்றது. எமது மகிழ்ச்சிக்காக நாம் பிறரை எதிர் பார்ப்பது போல பிறர் தம் மகிழ்ச்சிக்காக நம்மை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அனுபவ ரீதியான தேவைக்கு தகுந்ததோர் முடிவு எடுக்கப்படல் வேண்டும்.

மற்றவர்களிடம் இருந்து எதிர்பார்ப்பதை நாமும் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும். மற்றவர்கள் நம்மை மதிக்க வேண்டும், நேசிக்க வேண்டும், நேர்மையோடு நம்முடன் உறவாட வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள் தம்மாலும் மற்றவர்களுடன் அப்படி வாழ முடியும் என்ற தீர்மானத்துக்கு வரவேண்டும். இது அனுபவ ரீதியினால் ஆய்வுக்குப் பின்னர் பலர் சேர்ந்து எடுத்த முடிவாகும்.

பிறரிடம் நாம் எதிர்பார்ப்பதை நாமும் பிறருக்குச் செய்ய அன்பு எம்மைத் தூண்டிக்கொண்டிருக்கிறது.

துக்கத்திலும் பயங்கரத்திலும் அன்பின் தேவையை நாம் உணருவதே நமது வாழ்வில் அன்பின் சிறப்பு அம்சமாகும்.

தற்பெருமை, அதிகார மனப்பான்மையுடன் செய்யும் பணிகள் வீணாகி விடுகின்றன. தற்பெருமையோடு அன்றேல் பிரதிபலனை எதிர்பார்த்துச் செய்யும் அன்புச் செயல்கள் பிறருக்குத் துணை செய்வதற்குப் பதிலாக துன்பமளிப்பவையாக உருவெடுக்கின்றன. நமது குணக் குறைவே நமது அன்பில் காணப்படும் கரும்புள்ளியாகும்.

இந்த உலகம் விசித்திரமானது—

தன்னல உரிமைகளுக்காக வாதிடுகிறவர்களை உலகம் ஆதரிக்கிறது—

வேண்டாத கோரிக்கைகளுக்கு பொறுமையுடன் செவி சாய்க்கிறது—

பொய்யர்கள் புரட்டுக்காரர்களுக்கு இணங்கி நடக்கிறது—

ஆனால்,

தன் உரிமைகளை விட்டுக் கொடுத்து மரியாதையுடன் ஒதுங்கி நடப்பவர்களை உலகம் ஐயக்கண் கொண்டு நோக்குகின்றது. பைத்தியங்கள் என்று பரிகசிக்கின்றது.



# என் மொழி 3

## பிறர் அன்பின் மறைபொருள்

எத்தனையோ எதிர்ப்புக்கள் —

எத்தனையோ தடைகள் —

எத்தனையோ முணு முணுப்புக்கள் —

நாம் செய்யும் பிறரன்புச் செயலுக்கு முட்டுக்கட்டைகளாக எழுகின்றன. எனினும் நமக்குச் சரியெனப்பட்ட காரணத்தால் எதையும் பொருட்படுத்தாதவராக, இரக்க சிந்தையினராயும், பெருந்தன்மை மிக்கவராயும் எடுத்தகாரியத்தைச் செய்யத் துணிகின்றோம். ஆனால் நாம் செய்ய முனைந்த அந்த நற்பணியானது எதிர்பாராத விதத்தில் தோல்வியடைகின்றது!

தோல்வியடையக் காரணம் என்ன? ஏதோ தவறான விதத்தில் நாம் செய்து விட்டோம்.

அந்தத் தவறு என்ன?

நாம் காட்டிய அன்பில் படிந்த கறையாது?

அன்பும் அறிவும் கொண்ட கெம்பிஸ் அதற்கு விடை தருகின்றார். அது விடையென்று கூறுவதைவிட விளக்கம் என்று கொள்ளலாம். அது "சிலர் தம்மை அறியாமலே தமது பணியில் சுயநலத்தைத் தேடுகிறார்கள்" என்பதே.

தமக்குக் கிடைத்த உதவிகள், கொடைகள், அறிவுரைகள் மட்டில் நாம் பெற்றவை போன்ற அனுபவங்களையே கெம்பிசும் பெற்றிருந்தார். ஆனால் இது பற்றி ஆய்ந்து வேண்டுதல் செய்ததின் பயனாகவே அன்பின் இரகசியத்தைக் கண்டு பிடித்தார் அவற்றை கிறிஸ்து அனுசாரத்தில் கூறியுள்ளார்.

அன்பு எத்தகைய தன்மைகளைக் கொண்டிருக்க வேண்டும். அது தவிர்த்துக்கொள்ள வேண்டியவை எவை என்பதையெல்லாம் நற்செய்தி நமக்கு நன்கு எடுத்துரைக்கின்றது.

நாம் செய்யும் செயல்கள் விளம்பரத்துடன் அமையக் கூடாது என்றும், வலது கை செய்வதை இடதுகை அறியாது இருக்கவேண்டும் என்றும் எமக்குச் சொல்லப்பட்டிருக்கின்றது.

அன்பானது ஆரவாரமற்றதாக அமைதியானதாக இருக்க வேண்டும். நமது கைகளின் செயல்களையும், உதடுகளின் அசைவுகளையும் மற்றவர்கள் தெரிந்து கொள்ளாத அளவுக்கு அன்பு அமைதியும் எளிமையும் கொண்டு விளங்கவேண்டும். நமது நற்செயல்களை மற்றவர்கள் அறிய வேண்டும், புகழ வேண்டும் என்ற நோக்கோடு பணியாற்றுவோமாகில் அதனை அன்பின் பணி என்பதற்குப் பதிலாக செருக்கின் செயல் என்று கூறலாம்.

பிறர் அன்பின் இரகசியம் என்னவென்று கேட்பின்—

பெருந்தன்மை, தயக்கமின்றி அள்ளிக் கொடுப்பது என்று சிலர் சொல்லுவர். வேறு சிலர் இரக்கமும் பிறரைப் புரிந்து கொள்ளுதலும் என்பர். இன்னும் சிலர் சுயதேவைகளைக் கவனிக்கும் முன்னர் பிறர் தேவையை நிறைவு செய்தல் என்பர். ஆனால் இந்த மூன்று பதில்களுமே சரியானவை என்று கொள்ள முடியாது.



தியாகம், பெருந்தன்மை, அனுதாபம் என்பன அன்பின் அடையாளங்களாக விளங்கலாமே ஒழிய பிறர் அன்பின் அடிப் படையாகத் திகழ முடியாது.

ஏனெனில் இந்த சிறப்பு அம்சங்களைக் கொண்டிருப்பவர் களிடம் கூட, மிக அவசியமான அந்த அடிப்படைப் பண்பு இல்லாதவிடத்து இவையெல்லாம் மற்றவர் மனதைப் புண்படுத் தும் காரணிகளாக அமைந்து விடுகின்றன. ஆமாம், நட்புக் குப் பதில் பகைமைக்கு வித்திடுகின்றன.

எமது கொடைகளை அடுத்தவர் ஏற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் எப்படிக் கொடுக்க வேண்டும்?

பிறரை நாம் மன்னிக்க வேண்டுமாயின் எம்மிடம் இருக்க வேண்டிய பெருங்குணம் என்ன?

மற்றவரை நாம் மரியாதை செய்வதற்கும் அவர்களுக்கு அறிவுரை பகர்வதற்கும் எம்மிடம் குடிகொண்டிருக்க வேண்டிய சிறப்பம்சம் என்ன?

அடுத்தவருக்குத் தீர்ப்பிட்டு அவதியுறச் செய்யாமல் அன்பின் பொருட்டு தூய தொண்டாற்ற எமக்குத் துணை நிற்க வேண்டிய இணையற்ற தகைமை என்ன?

இத்தனை கேள்விகளுக்கும் கிடைக்கக்கூடிய ஒரே விடை தாழ்ச்சி......

அன்புக்கு அடிப்படையாக இருக்க வேண்டிய பண்பு அதுதான்—

எமக்குத் தகுதியில்லை எனும் மனப்பான்மையில் எம்மில் நாம் கொண்டிருக்க வேண்டிய கொள்கையே அன்பின் அடித் தளமாகின்றது, உண்மை அன்பின் ஊற்று தாழ்ச்சியிலேயே சுரக்கிறது.

"வீண் புகழ்ச்சிக்காக எதையும் செய்யாதீர்கள். ஆனால் தாழ்ச்சியுடன் மற்றவர்களை உங்களிலும் மேலானவர்களாக மதியுங்கள்" என்று அன்பின் சின்னமாக விளங்கிய புனித சின்னப்பர் எச்சரிக்கை செய்கிறார்.

இதே கருத்துக்கு விளக்கம் அளிக்கப் போந்த தோமஸ் கெம்பிஸ் ''மற்றவர்களிடம் மிக்க நன்மை உண்டு என நாம் நினைத்தால் அனைவரிலும் கீழானவனாக நீ உன்னைத் தாழ்த்திக் கொள். அதனால் உனக்குக் கேடு எதுவுமில்லை. ஒரு மனிதனுக்குத்தானும் மேலானவனாக நீ உன்னை உயர்ந்தவனாகக் கொண்டால் அதனால் பெருந்தீமையுண்டு என்று கூறுகின்றார்.

எது எப்படியிருப்பினும் உலகப் பற்றுதல் மிக்கவர்களால் உண்மையின் மாண்பையும், தாழ்ச்சியின் அழகையும் உணர முடியாது. கெம்பிஸின் கருத்தின்படி'' ஒருவன் தன்னை உள்ளபடி மதித்துத் தாழ்த்திக் கொள்ளுவதே உயர்ந்த பலன் மிக்க வேதமாகும்'' இந்த அறிவுரையை உலகோர் எளிதில் புரிந்துகொள்ளமாட்டார்கள்.

''தன்னை நன்றாக அறிந்திருப்பவன் கண்களுக்கு தானே ஒரு அற்பப் பொருளாகத்தான் காட்சியளிக்கின்றான்'' என்பது கெம்பிஸ் வழங்கும் மற்றுமொரு கருத்தாகும். இதனை விளங்கிக் கொள்வதற்கு தூய மனம் வேண்டும்.

அன்பு வாழ்வு ஒரு புதிய வாழ்வாகும் அந்த வாழ்வை அடையும் வழிக்கு தேவையான புண்ணியம் தாழ்ச்சி. அந்த தாழ்ச்சியை ஏற்றுக் கொள்வதற்கு வேண்டியது நிறைந்த விசுவாசமும் பரிவுமாகும்.

தாழ்ச்சி—அன்பு இரண்டிற்கும் உள்ள நெருக்கத்தைக் கேள்விப்பட்டதும் சிலருக்கு அது விசித்திரமாகப் படலாம். தாழ்ச்சியில்லாமல் என் அயலவனுக்கு இரங்கி, உதவி செய்து, மரியாதை காண்பித்து, அவர்கள் தம் தவறுகளை வெளிப்படுத்தாமல் இருக்க என்னால் முடியும் என்று இவர்கள் சொல்லக் கூடும்.

தாழ்ச்சியைப் புறக்கணித்து - தங்கள் போக்கின்படி நடக்கிறவர்கள் என்ற பெயரெடுக்கக் கூடும். ஆனால் இப்படிப் பட்டவர்கள் பிறருடைய கருத்துக்களில் குற்றம் கண்டு பிடித்து தங்களது திட்டங்களை மட்டும் செயற்படுத்தவும் பின்பற்றவும் செய்வார்கள். இத்தகையோரை வழிக்குக் கொண்டு வருவது சிரமமான காரியம்தான்.



இத்தகையோரின் போக்கு பிரிவினைக்கு வித்திடுகிறது. தமது அறிவு, அனுபவங்களை மட்டுமே இவர்கள் பெரிதாக மதிக்கின்றார்கள். இவர்கள் மற்றவர்கள் மீது குற்றம் காணும் முறையும் தீர்ப்பிடும் தன்மையும் வெளிப்படையாகத் தோன்றாது விடினும் இது அநீதியாகும்.

''மற்றவர்களின் குறை குற்றங்களுக்கு எதிராகத் தங்களை அடக்கி வெற்றி பெற இவர்கள் பழகிக் கொள்வதில்லை, ஏனெனில் தங்கள் மீதும் இவர்கள் எந்தக் குற்றத்தையும் காண்பதில்லை'' என்று இத்தகையோர் பற்றிய தமது கருத்தை தோமஸ் கெம்பிஸ் கூறுகிறார்.

தற்பெருமை மிக்கவன் ஒரு குருடன். ஒரு குருடனால் மற்றவர்களுக்கு அதிகம் உதவி செய்ய முடியாது' அது போன்றே தாழ்ச்சி இல்லாமல் அறப்பணி ஆற்ற முடியும் என்று நினைப்பவன் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறான். இறை பணிக்கெனப் பலரின் அறக்கொடைகளைப் பெற்றுக் கொண்ட எனது அனுபவத்தின்படி நான் நினைப்பது என்னவெனில் பெற்றுக் கொள்கிறவனின் மனதைப் புண்படுத்தாத விதத்தில் தருமம் செய்வதற்கு உண்மையான தாழ்ச்சி அதிகம் வேண்டும். கொடையானது எப்பொழுதும் பெற்றுக் கொள்ளுகிறவருக்கும் கொடுப்பவருக்கும் வாழ்த்தாக இருப்பதில்லை.

'ஏழையை நிந்தித்தல்' என்ற தலைப்பின் கீழ் புனித யாகப்பர் ஒரு காட்சியை எமக்கு வடித்துக்காட்டுகின்றார்.

'உன்னுடைய வீட்டிற்கு பட்டுடுத்த பணக்காரன் ஒருவனும் கந்தை கட்டிய ஏழையும் வருகிறார்கள். நீ பணக்காரனுக்கு மேலான ஒரு இருக்கையைக்காட்டி ''அங்கே மகிழ்ச்சியாக இருந்து கொள்ளும் என்றும் ஏழையைப்பார்த்து ''அடே அங்கே போய்த் தாழ்வாரத்தில் உட்கார்'' என்றும் சொன்னால் நீ அநீதியின் பாதையில் செல்கின்றாயல்லவா'' என்கின்றார்.

இது நாம் ஏழைகளுடன் முரட்டுத்தனமாக நடந்து கொள்வதை சித்தரிக்கின்றதல்லவா? இச்சம்பவத்தின் மூலம் ஏழைகள் மட்டில் நாம் நடந்து கொள்ளும் விதம்பற்றி ஏற்பட்ட மனத்துயரம் வெளிப்படுகிறது.

## பிரான்சிஸ்கன் துறவிகள் ஒரு உதாரணம்

நமது இந்த அகந்தையான போக்கிற்கு மாறுன செயலை பிரான்சிஸ்கன் சபைத் துறவிகளின் வாழ்வில் கண்டு பாவிக்க வேண்டும். அவர்கள் தம் சாந்தமும், தாழ்ச்சியும், தொண்டு புரிவதில் உள்ள எளிமையும் மென்மையும், செருக்கின்றி அடுத்தவரை மதிக்கும் நடைமுறைகளும் எமக்கு முன்மாதிரிகளாகும்' இன்னும் சொல்வதானுல் அவர்கள் தாங்கள் பணிபுரியும்போது தங்களைப்பற்றி நினைப்பதில்லை, அவர்களது செயல்கள் பிறரைத் துன்பப்படுத்துவதில்லை. தாங்கள் தரும் கொடைகள் தங்களுடையவையல்ல உங்களுடையதே என நீங்கள் நினைக்கும் வகையில் அவர்கள் தானம் செய்கிருர்கள் தம்மிடம் இருப்பதெல்லாம் தமக்குத் தானமாகக் கிடைத்தவைகளே என்பதை வெளிப்படுத்துகின்ருர்கள். அனைத்தையும் தர்தவர் கடவுளே என அவர்கள் தாழ்ச்சியுடன் ஒத்துக்கொள்ளுவதன் மூலம் பணச்செருக்கு அற்றவர்களாக விளங்குகின்ருர்கள்.

குறையுள்ளவர்களுக்கே கொடுக்கின்ரேம் என்ற காரணத்தால் எம்மிடம் தாழ்ச்சி காணப்படுவதில்லை. நாம் தயக்கமின்றி உதார குணத்துடன் அனைவருக்கும் அள்ளிக் கொடுக்கின்ரேம். எனினும் நாம் அதுபற்றிப் பெருமைப்பட்டுக் கொள்கின்ரேம். சில சமயங்களில் எமது ஆடம்பரப் பேச்சால் மற்றவர் மனதைப் புண்படுத்தி பகைமையைத் தேடிக் கொள்கிரேம்.

உலகில் நாமே கொடை வள்ளல்கள், அறம் எங்களாலேயே வாழ்கின்றது. நாமே பெரும் புள்ளிகள், பணக்காரர்கள் என்று எம்மை நாமே விளம்பரம் செய்து கொள்கின்ரேம். இத்தகைய செய்கையானது மற்றவர்கள் மனதில் ஏளனத்தையும் கண்டனங்களையும் கிளப்பிவிடும் ஒவ்வொரு தனிமனிதனிடமிருந்தும் எதிர்ப்புக்களை உருவாக்கும். எனவே எமது அறச் செயல்களை அனைவரையும் ஏற்றுக் கொள்ளச் செய்வதாயின் செய்பவர் தாழ்மையெனும் ஆடையை அணிந்திருத்தல் அவசியமாகும்.



நம்மிடம் செருக்கும், தற்பெருமையும் உள்ளவரை மற்றவர்கள் நம்மைப் பகைப்பார்கள். நம்மில் நம்பிக்கை வைக்க மாட்டார்கள். போலி நினைவுகளே நமக்கு வழிகாட்டுகின்றன என்பதை அவர்கள் அறிவார்கள். ஏனெனில் தன்னை உள்ளபடி உணர்ந்து மதிப்பதே மேலான ஞானம் என்பதை எமது அந்த நிலையில் நாம் அறியாதிருக்கிரேம்.

அன்புக்கும் தன்னடக்கத்துக்கும் உள்ள தொடர்பை— கிறிஸ்து நாதர் அனுசாரம், மூன்றும் பாகம் 23-ம் அதிகாரத்தில் உள்ள நான்கு விதிகள் நமக்கு உணர்த்தி நிற்கின்றன. அவை நான்கும் உண்மைக்கும் அன்புக்கும் வழிகளாய்த் திகழ்கின்றன. பிறர் அன்புக்கும், தாழ்ச்சிக்கும் கூட இவைகள் தான் விதிகளாகும்.

* உன் சித்தத்தையல்ல, மற்றவர்களுடைய சித்தத்தையே நிறைவேற்று.
* அதிகம் அல்ல சொற்பமாக வைத்திருப்பதையே விரும்பு.
* எல்லோரிலும் கீழான தாழ்ந்த நிலையில் இருக்க விரும்பு.
* இறைவனின் சித்தம் உன்னில் நிறைவேறும்படியாக விரும்பி மன்ருடு.

உண்மை அன்புக்கு இருக்க வேண்டிய குணங்கள் இவையாகும். இரக்ககுணம் உள்ளவன் மற்றவர்களின் விருப்பங்களுக்கு இணங்கி நடக்கிருன். மற்றவர்களுக்கு மேலான இடமும், சிறந்த பொருட்களும் கிடைப்பதை விரும்புகிருன். பெருமைகளைத் தேடுவோருக்கு அதைக் கொடுத்துவிட்டு தான் மறைந்து கொள்கிருன். அத்தகையோன் கடவுள்முன் தனக்கிருக்கும் கடமையை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாய் இருக்கிருன்.

சிறந்தவை யாவும் தன்னுடையதாக இருக்க வேண்டும் தனக்கு எப்பொழுதும் முதலிடமே கிடைக்க வேண்டும். தனது விருப்பப்படியே யாவும் நடக்க வேண்டும். என்ற தற்பெருமைக்காரனின் விதிகளுக்கு எதிராக தாழ்ச்சியுள்ளவனின் விதிகள் எதிர் நீச்சலிடுகின்றன.

கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைகின்றது தாழ்ச்சி— அடுத்தவனின் தேவைக்கே முதலிடம் அளிக்கின்றது அன்பு— அடுத்தவனின் விருப்பத்தில் உள்ள நியாயங்களை பொறுமையோடு ஆய்வு செய்து பார்க்கின்றது அது.

அன்பின் விதிகள் நான்கினையும் அனுசரித்து நடப்பதாயின் அது மிகவும் சிரமமான காரியம்தான். ஆனால் அந்த விதிகளின்படி நடப்பவன் அமைதியின் எல்லைக்குள் அடியெடுத்து வைக்கின்றான். வாழ்வில் முழுமையான நிறைவைச் சுவைக்கின்றான்.

அன்புக்கும் தாழ்ச்சிக்குமிடையே காணப்படும் ஒற்றுமை வெறும் போதனையல்ல. அதுபற்றி எழுத்தில் வடித்துள்ள கெம்பிஸ் தாமே அப்படி வாழ்ந்து காட்டினார்.

வறியவர்களுக்கு அதிக இரக்கம் காட்டினார் என்பதற்காக மடத்தின் நிர்வாக அலுவல்களில் இருந்து அவரை நீக்கி விட்டார்கள். ஆனால், எவனிடம் இரக்கம் இருக்கிறதோ அவனிடம் தாழ்ச்சி இருக்கின்றது. எவனிடம் தாழ்ச்சி இருக்கின்றதோ அவனிடம் இரக்கம் இருக்கின்றது எனும் அடிப்படை உண்மையை அவர்கள் உணரத் தவறிவிட்டனர்.

ஐக்கிய அமெரிக்காவில் நான் கற்ற கல்லூரியில் ஒரு ஆசிரியர். அவர்தான் அருட்திரு. ஜோண். மாணவர்களின் எந்தப் பொருட்களையும் திருத்திச் செப்பனிட்டுக் கொடுப்பவர். கடிகாரங்களோ, மிதி வண்டிகளோ, வேறு எதுவோ பழுதடைந்து விட்டால் மாணவர்கள் அவரிடம்தான் கொண்டு ஓடுவார்கள். அவரும் புன்னகை தவழும் முகத்தினராய் மறுப்பு எதுவுமின்றி தன்னைத் தேடிவந்தவர்களின் தேவையை நிறைவேற்றுவார்.

இத்தனைக்கும் அவர் பெரிய கல்விமான். கல்லூரியின் ஆசிரியர்களில் மிகவும் முக்கியமான இடத்தை வகிப்பவர். அந்த நிலையிலும் அவர் எல்லோருக்கும் நல்லவராக விளங்கினார். புன்னகை தவழும் அவர் உதடுகளுக்கு பொல்லாத முரடர்களையும் கவர்ந்திழுக்கும் காந்த சக்தியிருந்தது. ஒவ்வொரு மாணவனையும், அவர்களது பெயர்களையும் நன்கு அறிந்திருந்தார்.



ஒரு துறவியாகவும், ஆசிரியராகவும் அவர் இருந்தும் கூட பக்தியைப் பற்றி மாணவர்களோடு ஒரு நாளும் பேசியதில்லை. தனது பக்தியைத்தானும் வெளிப்படுத்தியதுமில்லை. ஆனால் சனி வாரங்களில் பாவசங்கீர்த்தன வேளைகளில், உதவாக்கரைகள் என்று குறிப்பிட்டுக் கூறக் கூடியவர்கள் யாவரும் ஜோண் அடிகளாரின் பாவசங்கீர்த்தனத் தொட்டியை முற்றுகையிடுவதையே காணக் கூடியதாகவிருக்கும். காரணம், எல்லோருடனும் தாழ்ச்சியுடன் பழகும் குருவானவரிடம் தனது பாவ அறிக்கையை வெளியிட எவருமே பின்னிற்க மாட்டார்கள். தன்னடக்கமும் தாழ்ச்சியும் கொண்ட இருதயமுள்ளவர்கள் மற்றவர்களுக்கு எதுவித துன்பத்தையும் கொடுக்கமாட்டார்கள்..

# என் மொழி 4

## அன்பினால் விளையும் ஆதாயம்

''நான் செலவழித்தவை யெல்லாம் வீணாகி விட்டன—

நான் தேடியவையெல்லாம் பிறருடையதாகிவிட்டன—

நான் செய்த தருமங்களே என்னுடன் இருக்கின்றன.''

இந்த வாசகங்கள் இங்கிலாந்தில் உள்ள கல்லறை ஒன்றில் பொறிக்கப்பட்டிருப்பதாக யோசவ் அடிசன் என்பவர் கூறுகின்றார். இந்தக் கல்லறையின் வார்த்தைகள் கருத்தாழம் மிக்கவை. கருத்தில் கொள்ளத்தக்கவை.

அன்பின் மிகப்பெரிய சாதனை ஆன்மீகமானது—அதன் வெளிப்பாடு, திருப்பலி வேளையில் சிறப்பாக அமைகின்றது.

''யேசுவின் மரணப் படுக்கையின் அருகில் எமது அன்பு துலங்க வேண்டும், அத்தகைய செயலிலே அதிக நன்மையுண்டு'' என்கிறது ஐரிஷ் பழமொழி ஒன்று.

அன்பு எல்லா வழிகளிலும் மனிதனைப் பேறுடையவனாக்குகிறது.



அன்புத் தொண்டுக்குப் பிரதிபலனாக பணத்தையோ, புகழையோ நாம் எதிர்பார்க்கக் கூடாது. அன்புள்ளம் கொண்டவன் தனது நற்செயல்களை தன்னால் முடிந்தமட்டும் மறைத்துக் கொள்கின்றான்.

அன்பு செய்பவனுக்கு அன்பே வேண்டிய பலனை வழங்குகின்றது. ஏனெனில் மற்றவர்களுக்குச் செய்யப்படும் நன்மைகள் எல்லாம் வேறு உருவத்தில் மீண்டும் செய்பவர்களிடமே வந்து சேருகின்றன.

அறம் செய்பவன் ஆண்டவனுக்குக் கடன் கொடுப்பவன். அவன் கொடுத்த கடனையெல்லாம் ஆண்டவன் வட்டியும் முதலுமாக மீண்டும் கொடுத்தவனுக்கே கொடுத்து விடுகின்றான். இந்நிலையிலேயே அந்தக் கல்லறை வாசகங்களின் கருத்தினை நாம் புரிந்துகொள்ள முடிகின்றது.

மற்றவர்தம் துன்ப வேளையில் உதவிடும்போது நமக்குக் கிட்டும் மன நிறைவானது புனிதத் தன்மை நிறைந்ததாகும். செயற்கரிய சேவையை செய்துவிட்ட திருப்தி எம்முள் ஏற்படுகிறது.

குருடன் ஒருவனுக்கு, அல்லது வறிய குடும்பம் ஒன்றின் நோயாளிக்கு உதவியது. இன்னும் இதுபோன்ற அன்புப் பணிகள் செய்ததைத் தொடர்ந்து வரும் சில மணி நேரங்கள் எமது அன்றைய நாளையே புனிதப்படுத்தியது போன்ற மன நிறைவையும் அந்த நாளை தகுந்த விதத்தில் கழித்துவிட்ட உணர்ச்சியையும் உள்ள மகிழ்ச்சியையும் கொடுக்கின்றன.

பிறர் அன்புப் பணிகளில் ஈடுபடுவதால் நாம் முக்கியமாகப் பெறக்கூடிய பலன்கள் மூன்று என்று கூறலாம்

* மனப் பண்பாடு வளர்ச்சியடைகிறது.
* நெஞ்சத் தூய்மையும் தன்னடக்கமும் ஏற்படுகிறது
* மற்றவர்களின் அன்பும் நன்றியும் நமக்குக் கிடைக்கின்றன

பிறர் அன்பானது நம்மை மதிப்பு மிக்கவர்களாகவும், மற்றவர் நன்மைகளில் பற்று உள்ளவர்களாகவும் மாற்றுகிறது' ஆகையில் உள்ளத் தூய்மையினுல் நாம் வளர்ச்சியடைகின்ருேம்.

மற்றவர்களின் தேவை என்ன? அவர்களுக்கு நாம் செய்யக் கூடியது என்ன? என்று நாம் சிந்திப்பதன் காரணத்தால் நாம் எதிலும் சரியானதைக் கண்டு பிடிக்கிருேம். எனவே மனம் பண்பட்டு வளர்ச்சியடைகின்றது.

சிறந்த நாகரீகத்தைக் கொண்டவன் யார் எனில் இரக்க சுபாவமுடையவனே. ஏனெனில் முரட்டுத் தனமும், தன்னலமும் அவனிடம் காணப்படாது. உயர்ந்த பதவியையோ, சிறந்த பங்கையோ அவன் வேண்டி நிற்பதில்லை. தனது வழிகளில் தடங்கல்கள் ஏற்படும்போது அது பற்றி அவன் கவலைப்படுவதில்லை. மற்றவர்களுக்காகத் தான் ஒதுங்கி நிற்பதில், வழிவிட்டுக் கொடுப்பதில் பூரிப்படைகின்ருன்.

''நீங்கள் முதலில் மகிழுங்கள்'' என்பதே அவன் உள்ளத்திலிருந்தும் உதட்டில் இருந்தும் வெளிவரக் கூடிய வார்த்தைகளாகும்,

உண்மையிலேயே பரந்த மனப்பான்மையைப் பெற்றிருக்கும் ஒருவனுக்கு வழுவா நீதி வழங்கும் தன்மை ஏற்படுகிறது ஒழுங்கைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஒரு பக்கம் சாய்தல், மூட வழக்கங்களில் மூழ்குதல் போன்ற குருட்டாட்டக் குழிகளில் வீழாது விலகிக் கொள்கிருன். ஏனெனில் அவனது குறிக்கோள் மிகவும் பரந்தவை.

''தன் உடன் மனிதர்களையும் அவர்களின் செயல்களையும் விளங்கிக் கொள்ளத் துடிப்பவனுக்கு வாழ்வு இன்பபுரியாகக் காட்சி தருகின்றது. குறுகிய மனப்பான்மை, பழைய அச்சங்கள் நீங்கி விடுகின்றன. அவன் சுதந்திரமாக உண்மையை விளங்கிக் கொள்ள வழிபிறக்கிறது'' என்கிருர் சார்ல் டெஸ்குவிநைற்ஸ்.



அன்பு கற்பனைகளின் நிறைவேற்றமாய் இருப்பதுடன் மனிதனின் மனத்தையும் இயல்பையும் செம்மைப் படுத்துகின்றது. இவை யாவும் பிறர் அன்புப் பணியில் ஈடுபடுவதனுல் ஏற்படக்கூடிய முக்கிய மூன்று நன்மைகளில் முதலாவது நன்மையாம் ''மனப்பண்பாடு வளர்ச்சியடைகின்றது'' என்பதில் அடங்குகின்றது.

இரண்டாவது நன்மையான ''நெஞ்சத் தூய்மையும் தன்னடக்கமும்' பற்றி தொடர்ந்து ஆய்வோம்.

மனம், ஒழுக்கம், நரம்பு சம்பந்தமான நோய்கள் அனைத்திற்கும் தன் நினைவே காரணமாகின்றது. தங்கள் உடல் நலம், தனிப்பட்ட நன்மைகள், உண்மையான அல்லது கற்பனையான கவலைகள் பற்றி மக்கள் உணர்ச்சிவசப்படுகிருர்கள், பரபரப்படைகிருர்கள். தம்மைப்பற்றியே நித்தமும் கவலைப்பட்டுக்கொண்டிருப்பதால் தமது நெஞ்சைத் தாமே அரித்து விடுகின்ருர்கள் தம்மைச் சுற்றியே வட்டமிட்டுத் தங்களுக்குள்ள இன்னல்களை மேலும் பெருக்கிக் கொள்கிருர்கள். பிணம் தின்னும் கழுகு போன்று. 'நான்' எனும் அகந்தை அவர்களைப் பிடுங்கித் தின்று விடுகிறது. இந்த நிலையில் அவர்களுக்கு உள்ள ஒரே வழி 'நான்' எனும் அந்தக் கழுகின் பிடியில் இருந்து தம்மை விடுவித்துக்கொள்வதே.

மனிதர்கள் தங்களைப் பற்றியே எண்ணுவதை விடுத்து தமது சிந்தனைகளை பிறர் பக்கமாய்த் திருப்பிக் கொண்டால்— மற்றவர்க்குப் பணி புரிவதையே மகத்தான பணி என்று கொண்டால் கொடுங்கோன்மையின் பிடியிலிருந்தும், துன்பங்களின் சுமையில் இருந்தும் எவ்வளவோ மக்கள் காப்பாற்றப் படுவார்கள்.

தன்னைப் பற்றிய அளவுக்கு மிஞ்சிய கவலையானது— துன்பத்திற்கும் விரக்திக்கும் வழிகாட்டுகிறது. இதைத் தவிர்ப்பதற்கு உள்ள ஒரே வழி அன்புத் தொண்டுகளில் தம்மை அர்ப்பணித்துக் கொள்வதுதான்.

நியூயோர்க் நகரத்தில் ஒருவன் இருந்தான். இவன் தீ அணைக்கும் படையில் சேவையாற்றி ஓய்வுபெற்றவன். அவனுக்கு

ஒரு அன்பு மனைவி பிள்ளைகள் இல்லை எதிர்பாராத விதத்தில் அவன் மனைவி ஒருநாள் இறந்துவிட்டாள், அது அவனுக்குப் பேரதிர்ச்சியாகவிருந்தது. ஏனெனில் அவன் செய்த எல்லாக் காரியத்திலும் மனைவி பங்கு வகித்திருந்தாள் எதற்கும் அவளையே நம்பியிருந்தான்,

இப்பொழுது அவளில்லாமல் அவன் வாழ்வு இருளடைந்துவிட்டது. தான் தனித்துவிட்டதை உணர்ந்தான். அவளில்லாத வாழ்க்கை அவனுக்கு சூனியமாகப்பட்டது. வாழ்க்கையில் வெறுப்பு, விரக்தி குடிகொண்டது. எங்கும் எதிலும் அவனுக்கு வேண்டிய அமைதி கிட்டவில்லை. தனது கவலைகளை மறந்து அமைதி பெற வழி எது எனத் தேடினான். அவனுக்கு ஒரு வழி தோன்றியது.

முன்னர் தான் தீயணைப்புப்படையில் பணியாற்றியபோது தீயணைக்கும் வாகனத்தை வேகமாக ஓட்டிச் சென்றது நினைவுக்கு வந்தது. அதுபோன்று தனது மோட்டார்வண்டியில் ஏறி நியூயோர்க் வீதிகளில் வேகமாக ஓட்டிச்செல்லத் தொடங்கினான் தொடர்ந்து தினமும் அப்படியே செய்து வந்தான்.

ஒருநாள் வேகமாகச் செலுத்திச் சென்ற அவனது மோட்டார் வண்டியை யாரோ தடுத்து நிறுத்தினார்கள். தீராத நோயினால் மருத்துவ மனையில் இருக்கும் தனது மருமகளைப் பார்க்க வரும்படி வண்டியை மறித்தவர் கேட்டுக் கொண்டார்.

வேண்டா வெறுப்புடன் கேட்டுக் கொண்டவரின் கோரிக்கைக்கு இணங்கி வைத்திய மனைக்குச் சென்றான் அங்கே, அந்த நோயாளி மீண்டும் ஒரு முறை அங்கு வரும்படி அவனிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். அவளது வேண்டுகோளுக்காக அவன் மீண்டும் ஒருமுறை மருத்துவமனைக்குச் சென்றான். மீண்டும்......

நாளடைவில் அவளைப் பார்க்கச் செல்வது அவனுக்கு பழக்கமாகிவிட்டது. அவளுக்காக அவன் மலர்களையும், அன்பளிப்புக்களையும் கொண்டு செல்லத் தொடங்கினான். நாளடைவில் தனது மோட்டார் வண்டியில் அவளை ஏற்றி உலாவுவதற்கு அழைத்துச் செல்லத் தொடங்கினான்.



அவன் வாழ்க்கையிலே மாற்றம் ஏற்படத் தொடங்கியது வாழ்வை வெறுத்த அவனுக்கு வாழ்க்கையில் மீண்டும்பற்று ஏற்படத் தொடங்கியது.

தன்னைப்பற்றிய சிந்தனை எனும் வட்டத்தள் இருந்து தன்னைவிடுவித்து பிறர் துன்பத்தில் பங்குகொள்ள விழைந்ததின் பயன் புத்தொளியை வழங்கியது. தன்னலம் எனும் நரம்பு நோயை குணப்படுத்தும் வழியை அவன் கண்டு கொண்டான். கிறிஸ்தவ அன்பு எனும் மருந்து அவனைக் குணப்படுத்தியது

பிறருக்கு நாம் காட்டும் அன்பு, செய்யும் தொண்டுகள் ஆபாசங்களின் ஆக்கிரமிப்பிலிருந்தும், நோய்களின் கொடுமைகளில் இருந்தும் நம்மைக்காப்பாற்றுகின்றன.

ஆபாசங்களுக்கும், குடிவெறிக்கும் அடிமையாகியிருப்பவர்கள் பற்றோடு மற்றவர்களுக்குப் பணிபுரியத்தொடங்கினால் நம்மிடமுள்ள தீயபழக்கங்களையே வெற்றி கொள்ளலாம்.

பேருண்டிப்பிரியம், கோபம், பொறாமை, காமம் போன்ற தீய பண்புகள் எல்லாம் தன்னலம் எனும் நோயின் உருவங்களேயாம் 'நான்' என்பதன் தீய பண்புகளையே இவைகள் காட்டுகின்றன.

பிறர் தொண்டுக்காக தன்னை அர்ப்பணிக்கும் ஒருவர் தனது சுய இச்சைகளை அடக்கிவிடுகின்றார். அன்றேல் தனது வாழ்க்கைப் படகின் சுக்கானைச் சீராகப்பிடிக்கும் திறனையாவது பெற்றுக்கொள்கின்றார். அவர்களது மனம் உறுதி பெறுகின்றது. புனித சின்னப்பர் கூறுவதுபோல்—

'அன்பு பொறாமைப்படுவதில்லை. தன்னை நினைப்பதில்லை, சினம் கொள்வதில்லை, அநியாயத்தில் மகிழ்ச்சிகொள்வதில்லை. அன்பு பற்றுக்களின் எதிரியாகும்''.

அன்பினால் பெறும் மூன்றாவது நன்மை; இது எப்பொழுதும் கிடைப்பதொன்றல்ல. ஆனால் கிடைக்கும்பொழுது, இன்பத்தையும் ஆறுதலையும் தருகிறது. மற்றவர்கள் நமக்குக் காட்டும் நன்றியறிதலே இந்தப்பரிசாகும்.

மற்றவர்களின் அன்பும், நன்றியும், எமக்குக் கிடைக்கும் என எதிர்பார்த்து நாம் பிறருக்குத் தொண்டு செய்வதில்லை. இறைவனைப் பிரியப்படுத்த வேண்டும் என்பதே நமது நோக்க மாகும். எனினும் மற்றவர்களுக்காக நாம் அனுபவிக்கும் இன்னல்களை அவர்கள் உணர்ந்து பாராட்டா விட்டால், நம்மால் ஊக்கமுடன் தொண்டாற்ற முடியாது என்பது உண்மை.

நன்றியறிதல் என்பது ஒரு அழகிய புண்ணியச்செயலாகும். நன்றியைக் காண்பிக்கும் பொழுதுதான் ஒரு உதவியைச் செய்தவரும், உதவியைப் பெற்றுக் கொண்டவரும் பெற்றுக் கொண்ட பேறுகளின் பயனை நாம் காணமுடிகின்றது.

காலத்துக்குக் கட்டுப்படாது, கடலை எல்லையென்று கொள்ளாது, மரணத்துக்கும் வேதனைக்கும் அஞ்சாது, நன்றி தெரிவிக்கப்படும்போது நாம் செயல் மறந்து பரவசமடைகின்றோம்.

ஒரு சமயம் ஒரு இளம் பெண் தன் மனத்துயரங்களின் பொருட்டு ஆலோசனை பெறுவதற்காக என்னிடம் வந்தாள். அவளுக்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறி அனுப்பினேன். இது நடைபெற்றது இருபது ஆண்டுகளுக்கு முன்னர். அவள் வந்ததும் சென்றதும் என்னைப் பொறுத்தவரை என்றோ நடந்த ஒரு சம்பவம்.

ஒருநாள் அவளிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. இத்தனை ஆண்டுகளாகியும் தான் திருப்பலி காணும் வேளையில் எனக்காகச் செபிப்பதற்கு தான் ஒருபோதும் மறந்ததில்லை என்று அதில் எழுதியிருந்தாள்.

நன்றியறிதலானது நமக்குக் கிடைக்கும்போது நம்மை நெகிழச் செய்துவிடுகிறது. மற்றவர்களுக்கு அதனை நாம் காண்பிப்பதில் அசட்டை செய்வது விசித்திரம்தான்.

ஸ்பெயின் தேசத்திலுள்ள பார்சலோனா எனும் நகரில் சில வாரங்கள் வாழும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. அந்நாட்களில் அங்கு வாழ்ந்த ஏழை மீனவன் ஒருவனுக்கு ஏதோ சற்று உதவி செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவன் சற்று கடுகடுப்பானவன் என்றாலும் நல்ல இதயம் படைத்தவனாக



இருந்தான் என்பதை நான் பின்பு அறிந்தேன். ஏனெனில் அவன் செய்நன்றி மறவாதவன் என்பதைத் தன் செயல் மூலம் வெளிப்படுத்தினான்.

நான் அந்த நகரினை விட்டு வெளியேறும் நாள், நடுக் கடலில் நங்கூரமிட்டு நின்ற கப்பலில் நான் இருந்தேன். கடல் கொந்தளிப்பான நிலையில் பேரலைகளை எழுப்பிக் கொண்டிருந்தது. அந்த வேளையில் சிறு தோணிகளில் செல்வது ஆபத்தான காரியம். ஆனால் கடலை நோக்கிக் கொண்டிருந்த என் கண்களில் பயங்கர அலைகளையும் மீறி ஒரு சிறு தோணி கப்பலை நோக்கி வந்து கொண்டிருந்தது தெரிந்தது. நான் இருந்த கப்பல் அசைந்து ஆடி நகரத் தொடங்கியது. அதற்குள் அச்சிறு தோணி கப்பலை அணுகி விட்டது.

கப்பலின் படிக்கட்டுகளில் நின்று கொண்டிருந்த நான் அத்தோணியில் வந்த மனிதனை உற்று நோக்கினேன். அவன் வேறு யாருமல்ல. என்னிடம் உதவிபெற்ற அர்த மீனவன் தான் கப்பலண்டை வந்ததும் அவன் மேலே நோக்கினான் அங்கே என்னைக் கண்டதும் அவன் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. உயிருள்ள பெரிய வீச்சு இறால் ஒன்றை என்னிடம் வீசினான். அதே வேளையில் "உங்கள் பணிகள் தொடரட்டும்" என்று அவன் மொழியில் என்னை வாழ்த்தினான். பின்னர் ஏதோ சாதனையைச் செய்து விட்ட திருப்தியுடன் என்னிடமிருந்து விடை பெற்றுச் சென்றான். வியப்பு மேலிட்டவனாக நான் அவன் போவதையே பார்த்துக் கொண்டு நின்றேன்.

ஓர் அற்ப உதவிக்குக் கிடைத்த பெரிய வெகுமதியாக என் கைகளில் இருந்த உயிர் எனக்குத் தோன்றியது. குமுறும் அலைகளின் நடுவே தன் நன்றியைத் தெரிவித்து வாழ்த்திட வந்தானே என் மனம் எவ்வளவு மகிழ்ந்திருக்கும் என்பதை நீங்களே எண்ணிப்பாருங்கள்.

வியப்பளிக்கும் விதத்தில், வினோதமான விதத்தில் எத்தனையோ நன்மைகள் அன்பினால் கிடைக்கின்றன அவற்றையெல்லாம் இங்கு விளக்குவது எளிது அல்ல. அன்பானது எப்படி அன்பை வளர்க்கின்றது என்று காண்பதில் தனி இன்பம் உண்டு.

நம்மிடம் அன்புச் செயல்களைக் காண்பவர்கள் நம்மைக் கண்டு பாவித்து நம்மையும் மிஞ்சி விடுகிறுர்கள். நம்மைப் பகைப்பவர்களை அன்பினுல் ஆட்கொள்ளுவது என்பது இன்பம் கொடுக்கின்றது அன்பின் செயல்களால் ஆன்மாக்களை இறைவன்பால் திருப்புவதில் தான் அனைத்திலும் மேலான இன்பம் கிட்டுகின்றது.

''ஒருபாவி தன்னுடைய தீய வழிகளை விட்டுக் கடவுளிடம் வரும்படி செய்கிறவன் அவனுடைய ஆன்மாவை மரணத்தில் நின்று காப்பாற்றுவதுடன் பல பாவங்களையும் மறைத்து விடுகிருன்'' என்று புனித யாகப்பர் கூறுகின்ருர்.

அன்பின் பலனை விளக்கும் சம்பவம் ஒன்று நினைவுக்கு வருகின்றது.

சில காலங்களின் முன்னர் எனக்குத் தெரிந்த ஏழைப் பெண்ணெருத்தி ஹியூஸ்டனில் (Texas U. S. A.) உள்ள மருத்துவ மனையில் இருந்தாள். அவளுடைய உடலில் அரைவாசிப் பகுதிக்கு கட்டுப் (Plaster) போடப்பட்டிருந்தது. அதனுல் அவள் நாள் முழுவதும் பெருவேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

அதே மருத்துவ மனையில் இன்னுமொரு பெண் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தாள். அவளுடைய கணவனே புறமதத்தவன். தனது காலத்தின் பின்னர் தன் கணவன் பிள்ளைகளை சமயத்தை அனுசரிக்க விடமாட்டான் என்ற அச்சம் அவள் மனதை அரித்துக் கொண்டேயிருந்தது. இவளைப் பற்றிய இச் செய்தியை அங்கு கடமையாற்றிய கத்தோலிக்க தாதி ஒருத்தி கட்டுப்போட்டுக் கொண்டிருந்த பெண்ணுக்குக் கூறினுள்.

இதைக் கேள்வியுற்ற இப்பெண் சாகும் நிலையில் கிடந்த அப்பெண்ணுக்குச் செய்தி ஒன்றைச் சொல்லி அனுப்பி வைத்தாள். அது— ''அவளுக்காகவும், அவள் குடும்பத்தினருக்காகவும் தன் வேதனைகளை ஒப்புக் கொடுக்கிறேன்'' என்பதே அந்தச் செய்தியாகும்.



அவளது அந்த உயரிய அன்புக்குக்கிட்டிய பலனை நம்புவது கடினம்தான். ஆனுல் அது உண்மையாக நடைபெற்றது. சில நாட்களின் பின்னர் உயிர் பிரியும் நிலையில் இருந்த பெண்ணின் கணவன் எனக்குத் தெரிந்த அந்தப் பெண்ணைக் காணவந்தான், அவள் காட்டிய அன்பைக் கண்டு தன் மனம் மாறிவிட்டது என்றும், தன் மனைவி உயிரோடு இருக்கும்போதே தான் திருமறையில் சேர்ந்துகொள்ள முடிவெடுத்திருப்பதாகவும் அவளுக்குத் தெரிவித்தான்.

# என் மொழி 5

## அன்பு தேர்ந்துபெறும் பேறு

மற்றவர்களின் துன்பங்களில் உதவிசெய்ய நீங்கள் மறுக்கலாம் —

இருப்பவர்களுக்கு நீங்கள் இல்லை என்று கூறலாம் —

ஆபத்து வேளையில் ஒருவருக்கு அபயமளிக்காது விடலாம் —

''நான்'' எனும் மமதையின் வழியில் நீங்கள் நடந்து கொள்ளலாம் —

உங்கள் தேவைகளை மட்டும் நீங்கள் கவனித்துக்கொண்டு மற்றவர்கள் தம்மைத் தாமே கவனிக்கட்டும் என்று விட்டு விடலாம் —

நீங்கள் விரும்பினுல் மட்டும் அவர்களை அன்பு செய்யலாம், அதன் நிமித்தம் யாரும் உங்களைக் கட்டுப்படுத்தமுடியாது.

இம்முறைகளில் நீங்கள் வாழ்வதால் உலகின் கண்களுக்கு அறிஞர்களாக விளங்குகிறீர்கள். நீங்கள் திறமையாக நடந்து கொண்டால் உங்கள் இதயம் மரத்துப்போய் இருக்கும் தன்மையை மற்றவர்கள் கண்டுபிடிக்காத வண்ணம் தந்திரமாக



நடப்பீர்கள் பிறரின் பார்வைக்கு நீங்கள் ஒருவிதபோலி இரக்கத்தைக் காட்டுவீர்கள். இதன் மூலம் தன்னல வாதிகளுக்குக் கிடைக்கக்கூடிய கேலிகள், நிந்தைகளில் இருந்து தப்பித்துக் கொள்வீர்கள்.

''நான்முதல்'' என்ற உங்கள் கொள்கையால் உங்கள் பணத்துக்கும், வேலைகளுக்கும், நேரத்துக்கும் ஏற்படக்கூடிய தொல்லைகளைத் தவிர்த்துவிடலாம் ஆயிரமாயிரம் பிரச்சனைகளில் இருந்து விடுதலைகிடைக்கும் துயரக் கதைகளைக் கேட்டுத் துடிக்கவேண்டிவராது — இரக்கம் காட்டி இளைக்க நேரிடாது. தியாகங்கள் செய்யவேண்டிய தொல்லைகளில் நீங்கள் மாட்டிக் கொள்ள நேரிடாது. அயலவரை நேசிப்பதால் விளையக்கூடிய பொருள் இழப்புக்களுக்கு ஆளாகமாட்டீர்கள்.

ஏனெனில் அன்புசெய்பவனிடம் ஒருவித அறியாமையும் பைத்தியக்காரத் தன்மையும் இருக்கின்றது. உலக நோக்கின்படி இரக்கம் உள்ளவனிடம் தெளிவான அறிவு இருப்பதில்லை.

அன்பின் ஆக்கிரமிப்பால், நீங்கள் உங்கள் இயல்பான குணத்தை இழந்து விடுகிறீர்கள். உங்கள் தேவைக்கே போதாமல் இருக்கும் போதும் மற்றவர்களுக்குக் கொடுக்கிறீர்கள். கூலியை எதிர்பாராமல் அவர்களுக்குத் தொண்டு செய்கிறீர்கள். நீங்கள், பசியுடன் இருந்தாலும் முதலில் மற்றவர்கள் பசியாறி இளைப்பாறும்படி செய்கின்றீர்கள். மற்றவர்களுக்குச் சிறந்த இடமும் பெரிய இடமும் கிடைக்கச் செய்து நீங்களோ குறைவானதும் வெறுமையானதுமான பங்கோடு திருப்தியடைகின்றீர்கள்; ஏனெனில் உங்களிடம் ''நான் முதல்'' எனும் தத்துவம் இல்லை. இரண்டாம் இடமே போதும் என் தாழ்ச்சியின் நிறைவு உங்களிடம் குடிகொண்டிருக்கிறது. இதனுல் மற்றவர் கண்களுக்கு மிலேச்சனுகத் தோற்றமளிக்கின்றீர்கள் —

தனது மோட்டார் வண்டியில் அலுவலகத்தை நோக்கி விரைவாகச் சென்றுகொண்டிருக்கும் ஒருவன் தனதுவாகனத்தை திடீரென நிறுத்துகின்ருன். அங்கே பழுதடைந்து வழியில் நிற்கும் இன்னுமொரு மோட்டார் வண்டிக்காரனுக்கு உதவி செய்கின்ருன் அவன் செய்தது ஒன்றும் தீரச் செயல் அல்லவெனினும் அன்பு எனும் தத்துவத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்ருன்.

தனது அயலவர்களின் அலுவல்களில் அவனுக்கு அக்கறை இருக்கிறது. தன்னுடைய தேவைகளுக்கு முன்னர் அடுத்தவன் தேவைகளைக் கவனிக்கின்றான் — வீதியிலே வழிதவறி நிற்கும் நாய்க்குட்டியைத் தானும் சிறுவனொருவன் சன்மானம் பெறும் நோக்கமின்றி உரியவர்களிடம் கொண்டுபோய்க் கொடுப்பானேயாகில் அது கூட அன்பின் அடையாளச் செயல்தான்.

பிறர் அன்புச் செயல்களில் எத்துணை பார்வைக்கு மடமைத் தன்மை காணப்படுகிறதோ அத்துணை அழகும், வியப்பும் காணவே செய்யும்.

அன்பின் தெரிவு எப்பொழுதும் தன்னலம் கருதாது மற்றவர் நலனுக்காக தன்னை அர்ப்பணிப்பதே. இதனை இதற்கு முன்னரும் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளேன்.

நீங்கள் வீதியிலே சென்றுகொண்டிருக்கும் போது யாரோ உங்களை மறித்து, தான் செல்ல வேண்டிய இடத்திற்குப் போகும் வழியைக் கேட்கின்றார் நீங்கள் என்ன செய்வீர்கள்? ஒன்றில் அதே இடத்தில் நின்றுகொண்டு வலப்புறம் இடப்புறம் என்று திருப்பங்களையும், சந்திகளையும் கூறி அதன்படி செல்லச் சொல்வீர்கள். அன்றேல் பெருந்தன்மையோடு வீதியின் திருப்பு முனைவரை சென்று அவர் செல்லவேண்டிய இடத்தையே காட்டுவீர்கள் —

உங்கள் பூந்தோட்டத்தின் அழகைப் பார்த்து ஒருவர் புகழ்ந்துவிட்டு உங்களிடம் அவர் மலர் ஒன்றைக் கேட்கின்றார், நீங்கள் கொடுக்க மனமில்லாதவராக மட்டரகமான இரண்டு மலர்களைப் பறித்துக் கொடுக்கலாம். அல்லது நேர்த்தியான மலர்களைப் பறித்து ஒரு மலர்ச்செண்டாகவே கொடுக்கலாம் —

இவை இரண்டு சம்பவங்களிலும் அன்புக்கு உரிய பண்பு எது? நீங்கள் உதார குணத்துடன் அவர் கேட்டதற்கு மேலாக வழங்கியமையே.

நல்ல அயலவர்களாக விளங்குபவர்கள் பலரைக் காண்கின்றோம். இவர்களிடம் இயல்பிற்கு மேற்பட்ட நோக்கங்கள் எதுவும் இல்லாவிடினும் இயல்பாகவே தருமசிந்தை உள்ளவர்களாக விளங்குகின்றார்கள்.



இவர்களது பணிக்கு ஞான ஒளி எதுவுமில்லை. ஆனால் இவர்களது தொண்டு பிறருக்கு இன்பமளிக்கின்றன மற்றவர்களின் வாழ்க்கைக்கு உரியதாகின்றது. அதே வேளை இவர்களது செய்கை இறைவனுக்கு உவப்பானது என்பதிலும் ஐயமில்லை.

இவர்கள் தவிர இன்னுமொரு சாரார் இருக்கின்றனர். இவர்களது செயல்கள் எதுவும் அருள் ஒளியின்றிச் செய்யப்படுவதில்லை. இவர்கள் இயேசுவை மையமாகக் கொண்டே அனைத்தையும் செய்கின்றார்கள். இவர்கள் செய்பவையெல்லாம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ இயேசுவுக்காகவே செய்யப்படுகின்றன.

அயலவர், அந்நியர், நண்பர்கள், எல்லாரிடத்திலும் இவர்கள் இயேசுவையே காண்கின்றனர். அவரின் பொருட்டே நேசிக்கின்றனர். இவர்களது விசுவாசம் அன்பு செய்ய துணிவையும் வலிவையும் கொடுக்கிறது. எனவே அன்பு செய்வதும் இரக்கம் காட்டுவதும் எளிதான செயல்களாக விளங்குகின்றன.

அறிவீனர், பாவிகள், ஊனமுற்றவர்கள் மீது இவர்களுக்கு பெரும் பரிவும் பாசமும் உண்டு. ''இவர்களுள் மிகச் சிறியவராகிய ஒருவனுக்கு நீங்கள் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள்'' எனும் எமது ஆண்டவரின் வாக்கியத்தை இவர்கள் நினைவு கூர்ந்து கொள்கிறார்கள்.

ஆரம்பத்தில் நாம் கூறியிருப்பதுபோல் மிகவும் அற்பமான தொண்டுகளுக்குத்தானும் அன்பு மிகவும் அவசியமானதாகும். ஆனால் சில தருணங்களில் பிறருக்காக நாம் பெரும் ஆபத்துக்களையே எதிர்நோக்க வேண்டி வரும். இப்படியான இரண்டொரு சம்பவங்களை நம்மிற் பலர் சில சந்தர்ப்பங்களில் கண்டுமிருக்கிறோம், என் சிந்தைக் கெட்டியவரை எனது சொந்த அனுபவமொன்றை இங்கு குறிப்பிடுகின்றேன். அன்பானது தனக்கென்று தேர்ந்தெடுக்கும் பங்கு எது என்பதற்கு இது உதாரணமாக விளங்குகின்றது.

ஐக்கிய அமெரிக்காவில் நியூஸ்டன் நகரின் தென்பகுதி. அங்கு கற்பாறை நிறைந்த பகுதியில் இருக்கிறது நாற்பது அடிப்புற்று எனும் அந்தத்தடாகம். அன்றொருநாள் காற்றுக்

கடுமையாக வீசிக்கொண்டிருந்தது. அன்றைய தினம் நான் அந்தத் தடாகத்திற்குச் சென்றிருந்தபோது அத்தடாகத்தைச் சூழப் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தார்கள். அவர்கள் முகங்களில் பரபரப்பும், திகைப்பும் காணப்பட்டது. கூட்டத்தோடு சேர்ந்து நானும் அந்தக் காட்சியைப் பார்த்தேன். அங்கு —

அலைகளுக்கும், கற்பாறைகளுக்கும் மத்தியில் இளைஞன் ஒருவன் இன்னுமொரு மனிதனின் உயிரைக் காக்கப் போராடியபடி நீந்திக்கொண்டிருந்தான். கடலில் கற்பாறைகளோடு ஏற்பட்ட மோதலில் இருவர் உடலிலும் காயங்கள். இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. உயிர்காக்க உதவிக் கொண்டிருந்த அந்த இளைஞன் சிறந்த நீச்சல்காரன் அல்ல. எனினும் அவனுக்கு இருந்த துணிவும், நம்பிக்கையும் கைகொடுத்தன. மற்றவரின் தலையை நீர் மட்டத்துக்கு மேலே இருக்கும்படி செய்து அவரை இறுகப் பிடித்தபடி கரையை நோக்கி நீந்தி வந்து கொண்டிருந்தான். ஒருபடியாகக் கரையை அடைந்தனர். அக்காட்சியைக் காணும்போது எனக்கு உடல் சிலிர்த்தது.

ஆரவாரங்கள் ஓய்ந்த பின்னர் நான் நீரில் மூழ்கியவனைக் கவனித்தேன் அவன் தன்னை மரணத்தின் பிடியில் நின்று மீட்டு வந்தவனின் முகத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். இத்தனைக்கும் காப்பாற்றியவன் அவனுக்குத் தெரிந்தவன் அல்ல. யாரோ அந்நியன். ''நீங்கள் மிகவும் நல்லவர். நீங்கள் மிகவும் நல்லவர்'' என்று தன்னைக் காப்பாற்றியவரை நோக்கி அவன் உதடுகள் அசைந்து கொண்டிருந்தன. அவன் சொல்வதில் உள்ள உண்மையை நானும் அங்கு கூடி நின்ற ஏனையோரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டோம் ஆம், அன்று அன்பு அவனிடத்தில் குரல் எழுப்பியது, அடுத்தவன் பொருட்டு தான் துன்பத்தை தெரிவு செய்து கொண்டது. அதன் பலனையும் அது பெற்றது.

நாம் சற்றும் எதிர்பாராத நேரத்தில் அன்பின் அழைப்பு எமக்குக் கிடைக்கக் கூடும். அதன் அழைப்பினுக்கு எத்தகைய பதிலை நாம் கொடுக்கப் போகின்றோம்?



காலையிலே நமக்கு வந்த கடிதங்களைப் பார்க்கின்றோம். அவற்றில் ஒன்று—அதிகம் அறிமுகமில்லாத ஒருவரால் எழுதப்பட்டிருக்கிறது. கடிதம் முழுவதும் ஒரே சோகக் கதையாக வடிக்கப் பட்டிருக்கிறது. முடிவில் உள்ளத்தை உருக்கும் விதத்தில் உதவி கோரப்பட்டிருக்கிறது.

கடிதம் எழுதியவரின் குண நடைகளை நாம் அறிவோம். அவர் அவ்வளவு நேர்மையானவர் அல்ல. ஆனால் தற்பொழுது தொல்லைகள் அனுபவிக்கின்றார் என்பது மட்டும் உண்மை.

நாம் இருப்பதும் பணமுடையில்தான். ஒரு காரியத்தின் பொருட்டு பணத்தைச் செலவழித்து அது கைகூடாத நிலையில் நட்டமடைந்திருக்கிறோம். இந்தச் சந்தர்ப்பத்தில் இப்படி ஒரு கடிதம் வந்திருக்கிறது. நாமே தோல்வி கண்டு, துயர் கொண்டு விரக்தியோடும் கசப்போடும் நிற்கும் கட்டம் இந்தச் சந்தர்ப்பத்தில்தான் அன்பு அறைகூவல் விட்டிருக்கின்றது. அதே வேளையில் ''இந்தப் பாவி மனிதனுக்கு உதவி செய்ய முடியாதா?'' என்று எமது ஆத்மாவின் குரல் வேறு ஒலிக்கின்றது

இது பதில் பகரவேண்டிய கட்டம், நாம் செய்யக் கூடியது?

ஒன்று இதயத்தைக் கல்லாக்கிக்கொண்டு அந்தத் துயரக் கடிதத்தை தூள் தூளாகக் கிழித்துவிடலாம். அல்லது ''என்னால் இயன்ற மட்டும் ஆறுதல் கூறி நான் ஒரு கடிதம் எழுதுவேன் ஏனெனில் இது யேசுவுக்கு நான் எழுதும் கடிதமாகும்.'' என்று நமக்கு நாமே சொல்லிக்கொண்டு கடிதம் எழுதத்தொடங்கலாம்.

ஓர் ஏழை நம்மிடம் எதிர்பார்க்கும் எல்லா உதவிகளையும் எம்மால் செய்யமுடியாது என்பது உண்மைதான் ஆயினும் எம்மால் முடிந்த உதவிகளை இன்முகத்துடன் செய்வதுடன் அவன்மட்டில் எமக்கு அன்பும் மரியாதையும் உண்டு என்று காட்டவேண்டும்.

உங்கள் வீட்டிற்கு, அல்லது அலுவலகத்திற்கு உங்களைத் தேடி ஒருவர் வருகின்றார். அவரைப்பற்றி உங்களுக்கு நன்றாகத்

தெரியும். பல வருடங்களின் முன்னர் அவர் உங்களைப்போன்று நல்லநிலையில் வாழ்ந்தவர். ஏன் உங்களது நண்பராகவே விளங்கியவர் ஆனால் இன்று —

முற்றிலும் மாறுபட்ட நிலை. வறுமையின் பிரதிநிதியான அவரது தோற்றம் உங்களுக்கு அதிர்ச்சியைக் கொடுக்கின்றது. அவர் போதையில் இருக்கின்றார் என நீங்கள் நினைக்கின்றீர்கள் அவர் முகம் சிவந்து குழிவிழுந்திருக்கின்றது. அவர் உங்கள் முன்னே நாணிக்கோணி நிற்பதைப் பார்க்கின்றீர்கள்.

உங்கள் வேண்டுதலின் பேரில் நீங்கள் காட்டிய இருக்கையில் அவர் அமர்ந்து தனது துயர வரலாற்றை சொல்லத் தொடங்கின்றார்

தான் தொழில் இழந்தது, மீண்டும் அதைப் பெறப் போராடியது. ஆனால் அது மீண்டும் கிடைக்கும் என்ற நம்பிக்கையின்மையில் நிற்பது —

நல்ல உடைக்கோ. உணவுக்கோ. நோய்க்கு மருந்து செய்யவோ, பிள்ளைகளின் படிப்புக்கு செலவழிக்கவோ வீட்டு வாடகை கட்டவோ பணமில்லாத நிலையில் பரிதவிப்பது —

அனைத்தையும் விபரிக்கின்றார். அந்த வேளையில் அவர் கண்கள் கலங்குகின்றன. குரலில் கரகரப்பு ஏற்படுகின்றது.

இதைக் கேட்டுக் கொண்டிருக்கும் உங்கள் எண்ணத்திலே.

''உதவாக்கரைகள் வாழத் தெரியாமல் வாழ்ந்துவீட்டு வாசலுக்கு வாசல் கை நீட்டி நிற்குதுகள். இதுகளுடைய கதையையும் கேட்டுத் தொலைக்க வேண்டியது நமக்குத் தலைவிதியாய் இருக்கிறதே'' என்று முணுமுணுத்துக்கொள்கின்றீர்கள். ஒருகாலத்தில் உங்களுக்கு நண்பராக விளங்கியவர் என்பதை நீங்கள் உணர்ந்திருந்தும்கூட அவ்விடத்தைவிட்டு துரத்தியடிக்கவேண்டும் என்றும் நினைக்கின்றீர்கள்.

இதோ கவனியுங்கள் —

உங்கள் உடலின் சூடு ஆறுகின்றது —



படிப்படியாகக் குறைந்த சூடு முற்றாக ஆறியவுடன் சாவோடு சங்கமிக்கின்றீர்கள்

இப்பொழுது —

உங்கள் முன் இருக்கையில் இருந்துகொண்டு கண்ணீர் வடிக்கும் மனிதனை மீண்டும் ஒருமுறை பாருங்கள்.

நீங்கள் ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாது விட்டாலும் அவர் உங்கள் உடன்பிறப்புத்தான்.

அவரது அந்த நிலைமைக்கு அவரே பொறுப்பாளியாக இருக்கலாம், அல்லது பொறுப்பாளி இல்லாமல் இருக்கலாம் ஆனால் அவருக்கு உதவி தேவைப்படுகிறது என்பது மட்டும் உண்மை.

அவருக்கு ஒருவேலை தேடிக் கொடுப்பது உங்களால் முடியாத காரியமாக இருக்கலாம்—

அன்றேல் அவருக்குக் கொடுப்பதற்கு வேண்டிய புது உடைகள் உங்களிடம் இல்லாமல் இருக்கலாம் ஆனால் அத்தருணத்தில் உங்களால் ஏதோ சொற்ப உதவியேனும் செய்ய முடியும்.

அவரைச் சற்று நேரம் இளைப்பாறும்படி கேட்கலாம்—

ஒருநேர உணவையாவது கொடுக்கலாம்—

ஒரு சிறிய பையில் அவருக்குத் தேவைப்படும் இரண்டொரு பொருட்களைப் போட்டுக் கொடுத்து விடலாம்.

வழிச் செலவுக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து விடலாம்.

நீங்கள் இவ்விதம் செய்வதால் அவருடைய துயரச் சுமைகளில் இருந்து அவருக்கு தற்காலிக ஓய்வு கொடுக்கிறீர்கள்— இது உங்கள் தகுதிக்கு மேற்பட்ட செயல் அல்ல.

உங்கள் ஆத்மா எழுப்புக் குரலான ''இந்தப் பாவி மனிதனுக்கு உதவி செய்ய முடியாதா?'' என்ற வார்த்தை

களுக்குச் செவிகொடுங்கள். உங்கள் கண்களை சற்று மூடி, உங்கள் முன்னால் இருப்பது கிறீஸ்து என்று உருவகப் படுத்திப் பாருங்கள்.

நம் வாழ்வை நாம் காப்பாற்ற வேண்டுமாகில் அதை நாம் பிறருக்காக இழக்க வேண்டும். அன்பு தனக்கென்று தெரிந்தெடுக்கும் பங்கு இதுவே.

"It took me all of fity years,
To reach this sure conclusion;
There is no heaven but charity,
No hell but in confusion."

*(W. B. Yeats)*

---



# என் மொழி 6

## கொடுத்த வாக்குறுதியை நிறவேற்ற வேண்டும்

ஒருவர் ஏமாற்றப்படுகின்றார்—

அவர் திட்டங்கள் யாவும் தோல்வியடைகின்றன—

அவர் மற்றவர்களின் பழிப்புக்கு இலக்காகின்றார்—

அவர் வேதனையடைகின்றார்—

விரக்தி நிலைக்கு ஆளாகின்றார்.

காரணம் ?

நீங்கள் கொடுத்த வாக்குறுதியை கூறியதன்படி நிறை வேற்றாததனால் ஏற்பட்ட விளைவு. இதன் மூலம் நீங்கள் ஒரு பகைவரையே தேடிக்கொள்கிறீர்கள்!

பிரமாணிக்கமும் கொடுத்த வாக்கை நிறைவேற்றும் தன்மையும் அன்பிற்கு மிக அவசியமானவை. நம் நாட்டிற்கு இன்று தேவை கொடுத்த வாக்கை நிறைவேற்றும் கொள்கை கொண்டவர்களே. எனவே கொடுத்த வாக்கை நிறைவேற்று வதில் உறுதியாய் இருந்த உத்தமர்களின் வாழ்க்கை வரலா

றுகளை நாம் தேடிப் படிக்க வேண்டும். அவை நாட்டின் நல்ல குடிமக்களை உருவாக்கத் துணை செய்யும்.

மற்றவர்களுக்கு நாம் காண்பிக்கும் நன்மனமே பிரமாணிக்கமாகும். பிரமாணிக்கம் அன்பின் மறு உருவமாகும்.

## என் வாழ்வில் ஒரு பாடம்

கொடுத்த வாக்கை நிறைவேற்ருமை என்பதன் பொருளை அதன் தாக்கத்தை என் இளமைப் பருவத்தின் ஒரு கசப்பான சம்பவம் எனக்கு விளக்கியுள்ளது.

எனக்கு ஒரு வீணை (வாயில் வைத்து ஊதுவது) வேண்டும் என நான் அப்பொழுது ஆசைப்பட்டேன். அது எனக்கு ஒரு ஏக்கமாகவே இருந்தது. நாள் முழுவதும் அதை என்னேடு வைத்திருந்தால் அதினின்று எழும்பும் ஓசை எனக்கு இன்பம் ஊட்டும் என நான் கனவு கண்டேன். என்னுடைய இந்த ஆவலை எவரேனும் நிறைவு செய்வார்கள் என்று நம்பிக் கொண்டிருந்தேன்.

## உறவினள் வந்தாள் உறுதிமொழி தந்தாள்

ஒருநாள் எனது நெருங்கிய உறவினர் ஒருவர் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். அவர் வசதியாக வாழ்பவர். எனக்கு என்ன வேண்டும் என்று அவராகவே கேட்க நானும் ஆவலுடன் எனது ஆசையை வெளியிட்டேன். எனக்கு வீணையின்மேல் இருக்கும் ஆசையைக்கண்டு சிரித்துவிட்டு ''நல்ல வீணை ஒன்று வாங்கி அனுப்புகிறேன்'' என்று கூறினர். அவர் கூறிய அந்த வார்த்தைகள் என்னை எவ்வளவு தூரம் மகிழ்வித்தன என்பதை இப்பொழுதும் நான் நினைத்துக் கொள்கின்றேன். வீணை கிடைக்கும் என்ற மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தேன்.



## என்னை ஏமாற்றி விட்டாள்

அவர் சென்று விட்டார். ஒவ்வொரு இரவும் படுக்கும் போதும் நாளைக்கு வீணை வரும் என்று நினைத்துக் கொண்டு படுப்பேன் மறு நாள் காலைமுதல் ஆவலோடு வீதியைப் பார்த்துக் கொண்டிருப்பேன். நாட்கள் சென்றுகொண்டிருந்தன அன்று என் சின்ன இதயம் இந்த ஏமாற்றத்தால் எத்துணை தூரம் துடித்தது?

நாட்கள், வாரங்கள், மாதங்கள், வருடமாகியும் வீணை வரவில்லை ஆனல் அதன் பின்னருங்கூட அவர் கொடுத்துச் சென்ற வாக்குறுதியை நான் நம்பினேன் வீணை வாசிப்பதில் இன்பம் காணும் சிறுவனுக இருக்கும்வரை நான் எதிர்பார்த்தேன். ஆனல் ஏமாற்றப்பட்டேன்.

நாளடைவில் என் வளர்ச்சி அதன் தேவையை படிப்படியாக மறக்கச் செய்தது. பின்னர் அது எனக்குத் தேவையற்றதாகப்பட்டது. இதனல் நான் அடைந்த துன்பம் சொல்லும் தரமன்று

நான் ஏமாற்றப்பட்டேன் — அதனல் வீண் நினைவுகள் என்மனத்தை அலைக்கழித்தன. என் மனம் புண்பட்டது. என் ஏமாற்றம் எனக்கு அவமானமாகப்பட்டது.

அந்தப் பெண் பொய் உறுதிமொழி தந்து சிறிதுகாலம் என் அகத்தில் இருள் படிந்த தன்மையை உருவாக்கிவிட்டிருந்தாள். அப்படிப்பட்ட அவள் எனக்கு ஏன் உறுதிமொழி கொடுக்கவேண்டும்?

வாக்குறுதி கொடுத்துவிட்டு ஏன் அதன்படி நடக்கவில்லை.

ஏதற்காக எனக்குப் பொய் சொல்ல வேண்டும்?

என்னிடமிருந்த புனிதமான நம்பிக்கைக்கு ஏன் ஊறு விளைவிக்க வேண்டும்?

இவை அன்றும் இன்றும் என் இதயத்தில் ஒலித்துக் கொண்டிருக்கும் கேள்விகள்.

## உறுதி அளித்தது சிறுவருக்கென்றாலும்
## உரைத்தபடி செய்யத் தவறில் குற்றம்தான்

முக்கியமான காரியங்களில் பெரியவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அவற்றை நிறைவேற்றாமல் விடுவது பெரும் அநீதியும், பாவமுமாகும். அதே போல சிறு பிள்ளைகளுக்குக் கொடுக்கும் வாக்குறுதியை நிறைவேற்றாமல் விடுவதும் குற்றம்தான்,

அவர்களுக்கு நாம் கொடுத்த வாக்குறுதி அற்பமானதாகவிருக்கலாம் ஆனால் சிறு பிள்ளைகளை ஏமாற்றுவதும் அதன் மூலம் அவர்கள் இதயத்தில் ஏக்கத்தையும், தாக்கத்தையும் ஏற்படுத்துவது அருவருப்பிற்குரிய செயலாகும்.

ஒரு முறை மஹாத்மாகாந்தியோடு ஒரு சிறுமி தான் தனிமையில் பேசவேண்டும் என்று கேட்டாள். அதற்கு அவர் ஒரு நேரத்தைக் குறிப்பிட்டு அப்பொழுது வரும்படி கூறியிருந்தார். பின்னர் அவர் கூறிய நேரத்திற்கு அவள் வந்தபொழுது காந்தி பிரமுகர்கள் சிலரோடு முக்கிய பிரச்சினை பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். ஆனால் சிறுமியைக் கண்டவுடன் பிரமுகர்களிடம் சிறிது நேரம் அவகாசம் கேட்டு விட்டு அச்சிறுமியோடு சென்று சிறிது நேரம் உரையாடினார். அவள் ஏதோ குழந்தைத் தனமாகக் கேட்டதற்கெல்லாம் அவர் பதிலளித்துக் கொண்டிருந்தார். காரணம் சிறுமி என்றாலும் அவளுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பதில் அவர் கருத்துடையவராகவிருந்தார்.

## இப்படியும் செய்யலாமா ?

ஒருவன் வேலையின்றி அலைகின்றான்—பல விண்ணப்பங்கள் செய்தும்—பல இடங்களுக்குப் போய் வந்தும் பலவிதமாக முயற்சித்தும் பலன் கிட்டவில்லை. தோல்வி, தோல்வி கொடுத்த துயரம், துயரம் கொடுத்த விரக்தி—



நாட்கள் நகருகின்றன. வறுமை, வேலையற்றதன் மூலம் ஏற்படும் அவமானம் அவன் தோற்றத்திலேயே மாற்றத்தைக் கொண்டு வருகின்றது களையிழந்து, அழகிழந்து கவலை நிறைந்த முகத்தினனாய் அவன் உங்களிடம் வருகின்றான். வேலைக்கான ஏதோ ஒரு ஒழுங்கைச் செய்து தரமுடியுமா என்று கெஞ்சி நிற்கின்றான். நீங்கள் செய்து தருவதாக உறுதி மொழி கொடுக்கின்றீர்கள்.

வாடியிருந்த அவன் முகத்தில் இப்பொழுது நம்பிக்கை ஒளி பிரகாசிக்கின்றது. உங்கள் உடன்பாட்டின் மூலம் தன் வாழ்வில் உதயம் தோன்றுகின்றதாக அவன் மகிழ்கின்றான் உங்கள் முகத்தில் தெய்வதரிசனம் கிடைத்தது போன்று புளகாங்கிதமடைகிறான்

சொன்னதின்படி நீங்கள் செய்திருந்தால் அவன் வாழ்வின் பெரும் பேறு கிட்டியிருக்கும். ஆனால் நீங்களோ...! அவனை ஏமாற்றிவிட நினைக்கின்றீர்கள். ''எனக்கிருக்கும் தொல்லைகளுக்குள் இவனுக்காக அலைவது யார்?'' என்று தீர்மானிக்கின்றீர்கள். அதன்படியே கொடுத்த வாக்குறுதியைக் காற்றில் விட்டுவிடுகிறீர்கள்.

அப்படியென்றால் எதற்காக நீங்கள் உறுதிமொழிகொடுத்தீர்கள்?

ஏன் போலிநம்பிக்கைக்கு வித்திட்டீர்கள்?

அதன்மூலம் எதற்காக அந்த ஏழையின் துக்கத்தை ஒருபடி கூட்டிவிட்டீர்கள்?

ஏன் உங்களுக்கு இத்தகைய இரக்கமற்ற முரட்டுக்குணம்?

## மறைநூலைப் படிக்கும் நீங்கள்
## மனதிலே நினைப்பதுண்டா?

நம்மில் மறைநூலைப் படிப்பவர்களில் பலர் உண்மை பேசுவது பற்றி மனிதருடன் நேர்மையாக நடக்கவேண்டியது பற்றி அதிற் கூறப்பட்டிருக்கும் போதனைகள் பற்றிச் சிந்திப்பதில்லை

''அன்பிற்கும், பாசத்திற்கும் பிரமாணிக்கம் இன்றியமையாதது'' என்கிறார் அப்போஸ்தலர்.

''பொய்பேசாதீர்கள், பொய்யை விலக்கிவிட்டு ஒவ்வொருவனும் தன் அயலவனுடன் உண்மை பேசுவானாக ஏனெனில் நாம் எல்லோரும் ஓர் உடலின் உறுப்புகளாக இருக்கின்றோம்'' என்கிறார் புனித சின்னப்பர்:

இரட்டை மனம் கொண்டவர்களை புனித யாகப்பர் கண்டிக்கிறார். ''இரட்டை மனது உள்ளவன் தன்வழிகளில் நிலை இல்லாதவன்''.

இரட்டை நாக்கு உள்ளவர்களை புனித சின்னப்பர் கண்டிக்கின்றார். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் விடுகிறவன் இரட்டை நாக்குள்ளவனாக இருக்கின்றான். இத்தகையவனின் நெஞ்சில் அன்பு குடியிருக்கமாட்டாது.

## சொற்காத்தல் பெரும் புண்ணியம்

கொண்ட கருமத்தின் மட்டில் பிரமாணிக்கமாக இருப்பது உண்மையிலேயே பெரும் புண்ணியமாகும். அளவோடு உண்பவர்கள் ஆயிரம்பேர் இருந்தால், கற்பு நெறி காப்போர் ஆயிரம் பேர் இருந்தால், பெருந்தன்மையும், வீரமும் மிக்கவர்கள் ஆயிரம்பேர் இருந்தால், அவர்களுள் சொன்ன சொல்லைக் காப்பாற்றும் புனித குணமுள்ள செயல்வீரர் எத்தனைபேர் இருப்பார்கள்?

எமது கடந்த காலத்தை நின்று நிதானித்துத் திரும்பிப் பார்ப்போம் எமக்குக் கொடுத்த வாக்குறுதியை ஒருவர் நிறைவேற்றாமல் விட்டபொழுது நாம் நிலை தடுமாறியதில்லையா?

கையில் அடித்துரைக்கப்பட்ட வாக்குறுதிகள் — வாயளவில் கூறப்பட்ட வாக்குறுதிகள் — எழுத்தின் மூலம் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் — நண்பர்கள், உறவினர்கள் கொடுத்த வாக்குறுதிகள் இப்படியாகக் கொடுக்கப்பட்ட பல்லாயிரக்கணக்



கணக்கான உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமல் விடப்பட்ட பொழுதெல்லாம்; சினவாமல், சலிப்படையாமல், நிலை தடுமாறாமல் இருந்தவர்கள் எம்மில் எத்தனைபேர்? சொன்னதைக் காத்து வாழும் ஒருவனை நாம் அறிந்த பலரில் ஒருவரைத்தானும் 'இதோ' என்று சுட்டிக்காட்ட எம்மால் கூடுமா?

## இருக்கத்தான் செய்கிறார்கள் இரண்டொருவர் எதிரும் புதிருமாய்

எப்படித்தான் இருப்பினும் இத்தகையோர் இரண்டொருவர் இருக்கவே செய்கிறார்கள். இவர்கள் சொன்னால் சொன்னது தான். கடுமழையோ, காற்றோ, பனியோ வருவேன் என்றால் வந்தே தீருவார்கள்.

'கென்ட்' (Ghent) நகரில் இருந்து நல்ல செய்தியைக் கொண்டு வந்த குதிரை வீரனைப்போல். மரணம் ஒன்றுதான் இவர்கள் கொடுத்த வாக்குறுதியில் இருந்து இவர்களைத் தவறச் செய்யலாம் பெறற்கரிய நல்ல நண்பர்கள் இவர்கள்தான். இவர்களுக்கு இரட்டை நாக்கோ இரட்டை மனமோ கிடையாது.

எனக்குத் தெரிந்த ஒரு சிறுவன். சலவைக்குப் போட்ட எனது உடைகளை கடையில் இருந்து பெற்று வருபவன் அவன் தான். தொழிலில் நேர்மையும் பிரமாணிக்கமும் மிக்கவன். ஒரு நாள் அவன் என்னிடம் 'நீங்கள் எனக்கு கொஞ்சம் பண உதவி செய்தால், உங்கள் பணத்தை பின்னர் தருவேன்'' என்றான் நானும் மறுபேச்சின்றி அவனுக்குத் தேவையான பணத்தைக் கொடுத்தேன்.

அவன் போகவிருந்தது கண்டி நகருக்கு. அதற்கே அவன் என்னிடம் பணம் தேவை என்று கூறியிருந்தான்

கண்டி நகருக்குச் சென்ற அவன் சில ஆண்டுகளின் பின்னர் திரும்பி வந்தான். வந்ததும் அவன் செய்த முதல் அலுவல் என்னைத் தேடி வந்து என்னிடம் பெற்றுச் சென்ற பணத்தை திரும்பவும் தந்ததுதான் அப்படி அவன் செய்த பொழுது அவன் கண்கள் ஒளிர்ந்தன. தனது வாக்கைக் காப்பாற்றி விட்டேன் என்ற பெருமிதம் அதில் மிளிர்ந்தது.

## சீடர் பிரமாணிக்கத்தை சின்னப்பர் புகழுகின்றார்

தம்முடைய சீடராகிய தீத்து என்பவரின் பிரமாணிக்கத்தைப் பற்றி புனித சின்னப்பர் அழகாகப் புகழுகின்றார். அவரைப் பற்றி சின்னப்பர் கூறுகையில், "என் சகோதரன், உடன் பணியாளன், உடன் போர்வீரன்" என்று வர்ணிக்கின்றார். அவரைக் கனம்பண்ணும்படி பிலிப்பியருக்கு எழுதுகிறார். புனித சின்னப்பருக்கு பொருட்களைக் கொடுத்து அனுப்புவதற்காகத் தீத்து என்பவரையே பிலிப்பியர் நியமித்திருந்தனர். இக்கடமையைப் புரிவதற்கு அவர் தம் உயிரைத்தானும் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. ஏனெனில் அவர் சாவுக்கு ஏதுவான நோய்க்கும் பலியானார்.

"கிறிஸ்துவுக்காக இந்தப் பணியை மேற்கொண்டபடியால் தான் அவர் மரணப் படுக்கையில் விழுந்தார் நீங்கள் எனக்குச் செய்யும் தொண்டுகளில் குறைவு படுவதை ஈடுசெய்யும் பொருட்டே அவர் தன் உயிரைத் தியாகம் பண்ணியிருக்கிறார்.", என்று பிலிப்பியருக்கு எழுதிய சின்னப்பர் கூறுகிறார்.

இந்தப் பிரமாணிக்கமுள்ள சேவைக்காகப் புனித சின்னப்பர் என்றும் நன்றி காட்டி வந்தார். "எனக்கு எல்லாம் மிகுதியாக இருந்தன. அன்பின் நறுமணம் கமழும் உங்கள் கொடைகளை தீத்துவிடம் பெற்றுக் கொண்டபோது நான் மிகவும் திருப்தியடைந்தேன். உண்மையாகவே இது இறைவனுக்கு உவப்புள்ள பலியாக இருக்கிறது. இறைவன் உங்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் தந்தருள்வாராக." என்று மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வாக்கைக் காக்காதவன் ஏமாற்றுப் பேர்வழி

கொடுத்த வாக்குறுதியை அலட்சியம் செய்கிறவர்களும், அதன் மட்டில் செயற்பட சோம்பேறிகளாக உள்ளவர்களும் தங்கள் தொழில் சம்பந்தமான செயல்களிலும் நேர்மையாக



நடக்கமாட்டார்கள். இவர்களே நம்பிக்கை மோசடிக்காரர்கள். இதனால் இவர்களது தன்மானத்துக்குக் களங்கம் ஏற்படுகின்றது. தங்கள் தொழிலில் இவர்கள் திருட்டு, தந்திரம் ஆகிய இழி வழிகளைக் கையாளுகின்றார்கள். தாங்கள் கையாளும் இவ்வழிகளை தொழில் உத்தி, தந்திரம் என்று பாராட்டியும் கொள்கிறார்கள். ஆனால் தெரிந்தோ தெரியாமலோ தமது இச்செயல்களினால் மற்றவர்களை இவர்கள் முட்டாள்களாக்கி விடுகின்றார்கள், இத்தகையோர் இறைவனால் பழிவாங்கப்படுவார்கள் என்பதை புனித சின்னப்பர், "எந்த மனிதனும் தன் சகோதரனை தொழில் பற்றி ஏமாற்றாமலும், மோசடி பண்ணாமலும் இருப்பானாக. ஏனெனில் இப்படிப்பட்டவர்களை இறைவன் கண்டிப்பாகப் பழிவாங்குவார்" என்று கூறுவதன் மூலம் எச்சரிக்கின்றார்.

தொழில்துறைகளில் மோசடி செய்யும் இந்த இழிகுணம் பற்றிப் புனித யாகப்பரும் தனது கண்டனத்தைத் தெரிவிக்கின்றார், "உங்கள் வயலை அறுவடை செய்தவர்களின் கூலிகளை நீங்கள் வஞ்சித்தீர்கள். இதோ அவர்களின் அழுகைக் குரல் வானம் மட்டுமாக எழும்பி ஓய்வு நாளின் இறைவனுக்கு முன் ஒலமிடுகின்றன" என்று நயம்படக் கூறும் அவர் வார்த்தைகள் நம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றன.

## வாக்கினைக் காக்காவிடில் வரும் கேடு

நாம் நிறைவேற்றத் தவறும் வாக்குறுதிகளால் தனிப்பட்ட ஒரு நபர் அல்லது ஒரு குடும்பம் மட்டுமல்ல ஒரு சமூகமே பாதிக்கப்படும் நிலை ஏற்படுகின்றது. மண வாழ்வில் பிரமாணிக்கம் இல்லாவிடில், மணமுறிவு ஏற்படுகிறது.

பொதுத் தொழில் நிலையங்களில் பிரமாணிக்கம் இல்லாவிடின் பதுக்கல், கையாடல், கையூட்டு முதலான ஊழல்களுக்கு வழிவகுக்கிறது. இதன் மூலம் அரசிற்கு நம்பிக்கைத் துரோகம் செய்கிறோம்.

நம் நாட்டில் உள்ள பெரிது, சிறிதான பிறநாட்டு நிறுவனங்களுக்கு பிரமாணிக்கம் காட்டாமை போர் நெருக்கடிகளை உருவாக்கும் தலையிடிகளாக அமைகின்றன.

நாட்டின் பாதுகாப்புக்கென்று படைகளையும், படைக் கலங்களையும் சேகரிக்கின்றோம். எதிராடி வெல்ல ஏற்பாடுகள் செய்கின்றோம் — ஆனால் நாட்டின் பாதுகாப்பானது பிரமாணிக்கத்திலேயே தங்கியுள்ளது. நம்மவர்களிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளிலேயே அடங்கியுள்ளது.

## நலனை உறிஞ்சும் நஞ்சு

ஏமாற்றுத்தனம், பொய், தொழில் துறைகளில் ஏற்படும் மோசடிகள், அரசியல் — குடும்பவாழ்வுகளில் உள்ள நேர்மையின்மை யாவும் மோசடிகளே. இவைகளே நாட்டின் நலனை உறிஞ்சும் நச்சுச் சக்திகள். நாட்டின் வலிமையைப் பாழடிக்கும் நாசகாரிகள். இன்று எமக்குத் தேவைப்படுவது படைகளும், படைக் கலங்களும் அல்ல — துப்பாக்கிகளும், ஏவுகணைகளுமல்ல பதிலாக செய்து கொண்ட ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் நேர்மையுடன் பேணும் அரசும் குடிகளுமே.

தன் உடன் மனிதனை மதித்து, உதவி செய்து பணி புரிய விரும்பும் ஒவ்வொரு நல்ல கிறிஸ்தவனும், தன் வாக்குறுதியை நிறைவேற்றுதல் எனும் புண்ணியத்தை அறிய வேண்டும். அதில் தன்னைப் பழக்கிக் கொள்ள வேண்டும்.

## எளிதான செயலா?

பிரமாணிக்கம் எனும் இப்புண்ணியத்தை ஒழுகி வாழ்வது என்பது எளிதான விடயமா? நம்மால் முடியுமா?

முடியும், நம்மால் முடிந்த செயல் மட்டுமல்ல மிகவும் எளிதானதுமாகும். இதற்கு கொஞ்சம் மன்றாட்டும் தேவை.



"எம் உள்ளங்களில் அன்பைப் பொழிந்தருளும்" என்று தூய ஆவியானவரிடம் நாங்கள் மன்றாடவேண்டும். ஏனெனில் மற்றவர்கள் மட்டில் எங்களுக்கு இருக்கும் ஆழமான உயிருள்ள அன்பே பிரமாணிக்கமாகும். அனைத்து மனிதரையும் கனம் பண்ணுவதே பிரமாணிக்கம் எனப்படும்.

உங்கள் வாக்குறுதிகள் மட்டில் நேர்மையாக நடக்க விரும்புகிறீர்களா?

ஒரு கடதாசியை அல்லது குறிப்புப் புத்தகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். உங்களை நீங்களே சத்திய சோதனை செய்து பாருங்கள். நீங்கள் இதுவரையில் பெரிதாகவும், சிறிதாகவும் கொடுத்துள்ள வாக்குறுதிகள் எத்தனை? அவற்றில் நீங்கள் நிறைவேற்றாமல் விட்டவை எவை என்பதையெல்லாம் குறித்துக் கொள்ளுங்கள். அவற்றில் உண்மையிலேயே உங்கள் சக்திக்கு அப்பாற்பட்டது என நீங்கள் கருதும் விடயங்களைத் தவிர மற்றவைகள் அனைத்தையும் உடனடியாக நிறைவேற்ற முயற்சியெடுங்கள். போதிய மனத்தெளிவும், நன்நோக்கமும், நம்பிக்கையும் அற்ற நிலையில் வாக்குறுதி அளிப்பது அறிவுடைமையல்ல. எந்த வாக்குறுதியும் கட்டுப்பாடு, அல்லது திட்டவட்டமுள்ளதாக இருக்க வேண்டும்.

நீங்கள் ஒருவருக்கு வேலை தேடித்தருவதாகச் சொல்லுகிறீர்கள் "எனக்குத் தெரிந்த இரண்டொரு பெரியவர்களைச் சந்தித்து உங்கள் அலுவலை அவர்கள் கவனிக்கும்படி செய்கிறேன்!" என்று அவருக்கு நேர்மையுடன் விளக்குங்கள். இதற்கு மேலும் உங்களால் செய்யக் கூடியது எதுவும் இல்லை என்பதை தெளிவுபடுத்துங்கள். முடிந்தால் அதற்கு மேலும் உங்களால் முடிந்ததை நீங்கள் செய்யலாம் ஆனால் அதையிட்டு வாக்குறுதியளிக்காதீர்கள்.

## பங்குக் குருவும் கிறீஸ்தவர்களும்

சில பங்கின் மக்கள் தமது ஆலயக் கட்டிட நிதிக்காக மாதாந்தம் பத்துரூபாய் கொடுப்பதாக பங்குத் தந்தையிடம்

உறுதிமொழி கொடுப்பார்கள். இரண்டொரு மாதங்களின்பின் எதுவுமே கொடுக்கமாட்டார்கள். பதிலாக மாதாந்தம் ஐந்து, அல்லது மூன்று ரூபாய் தருவதாகக் கூறியிருக்கலாம். அச்சிறு தொகையைக் கொடுப்பதில் சிரமமிராது. அது பத்து ரூபாய் தருவதாகக் கூறி பின்னர் கொடுக்காது விடுவதை விட நேர்மையானதும் கௌரவமானதுமாகும்.

எப்பொழுதும் சொற்ப வாக்குறுதிகளையே கொடுங்கள். வாக்குக்கொடுக்குமுன்னர் அதுபற்றி பல தடவைகள் சிந்தியுங்கள். அப்படிக் கொடுத்தபின்னர் உங்களின் வாக்குறுதிக்கு தடை ஏற்படாவண்ணம் கவனமாயிருங்கள் ... அப்பொழுதுதான் மற்றவர்கள் உங்களை மதித்து அன்பு கொள்ளுவார்கள் உங்களில் நம்பிக்கை கொள்ளுவார்கள்.

உங்கள் அயலவரை ஏமாற்ருது நீங்கள் அன்பு செய்ய வேண்டுமாகில் — பிறரன்பை இயல்பாகவே உங்களில் வளர்த்துக் கொள்ள வேண்டுமாகில் — துன்பப்படுவோரின் துணைவர்களாக விளங்க வேண்டுமாகில் நாட்டின் நலனைப் பேணும் நற்குடிமகனுக வாழவேண்டுமாகில் கொடுத்த வாக்கினை நிறைவேற்ற வேண்டும் என்பது உங்கள் அடிப்படைக் கொள்கையாகத் திகழட்டும்.



# என் மொழி 7

## பொறுமை

இனத்தால் வேற்றுமைகள் —

குலத்தால் வேற்றுமைகள் —

தொழிலால் வேற்றுமைகள் —

நிறத்தால் வேற்றுமைகள் —

மொழியால் வேற்றுமைகள் —

நாட்டால் வேற்றுமைகள் —

எங்கும் எதிலும் வேற்றுமைகள் —

பல இனமக்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ்வது என்பது சிரமமான விடயம்தான். எல்லா இனத்தவரையும் எல்லா நிறத்தவரையும் மதித்து மரியாதைசெய்யும் ஒரு மனிதனுக ஒருவர் இருந்திருக்கின்ருர். எந்த மனிதன் மட்டிலும் அவருக்கு எதுவித பேதமும் கிடையாது — வெறுப்புக்கிடையாது. எந்தவித காழ்ப்பு உணர்வுகளுக்கும் இவர் அடிமையில்லை. அந்த மனிதன் யார்? சின்னப்பர் அதற்கு விடை பகர்கின்ருர்.

''யூதனும் இல்லை புறசாதியானுமில்லை. விருத்தசேதனமும் இல்லை விருத்தசேதனம் இல்லாமையும் இல்லை, அரசனும் இல்லை அடிமையும் இல்லை. ஆனால் கிறிஸ்துவே எல்லாவற்றிலும் எல்லாமாக இருக்கிறார்''. எனவே எல்லா வேற்றுமைகளையும் கடந்த ஒருவர் கிறீஸ்து இயேசுதான்.

எனவே பல இன மக்கள் பொறுமையுடன் இணங்கிவாழும் பொழுது சீனன், இந்தியன், தமிழன், சிங்களவன், தன்னாட்டவன், அந்நியன் எனும் வேறுபாடுகள் காண்பிக்காது எல்லோரும் ஐக்கியமாகின்றார்கள். அவனிடையே இருந்த வேற்றுமைகள் வேரறுக்கப்படுகின்றன.

## பல சமய மக்களும் இணங்கி வாழுதல்

வெவ்வேறு சமயக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கும் மக்கள் பொறுமையுடன் இணங்கி வாழுவதும் புகழ்ச்சிக்குரிய செயல்தான். அனைத்து மனிதரையும் அனைத்து மரியாதை செய்கின்றான் என்பதை இது காட்டுகிறது. தனது சொந்தச் சமயக் கோட்பாட்டின் உண்மைகளை ஒருவன் தெளிவாக அறிந்து கடைப்பிடிக்க வேண்டும். அதே சமயம் தாம் விரும்பும் சமயங்களை வழிபடும் உரிமையையும் அவன் பிறருக்கு அளிக்க வேண்டும். பிற சமயங்களை அனுசரிக்கும் மக்கள் தனது சமயத்தைக் கடைப்பிடிப்பவர்களை விடப் பிரமாணிக்கமாய் உள்ளனர் எனும் எண்ணம் அவனிடம் இருக்கவேண்டும். ''விண்ணுலகில் இருந்துவரும் ஞானம் அல்ல உலகம் கொடுக்கும் அஞ்ஞானம் தான் ஆபாசமும் பேய்த்தனமும் கொண்டதாக இருக்கிறது'' என்பது புனித யாகப்பரின் கருத்தாகும்.

எல்லாச் சமய மக்களுடனும் பொறுமையுடன் உறவாடும் மனிதன் சாத்தானுக்குரிய ஆபாசமான மனத்தைத் தோற்கடிக்கிறான். எம்மதமும் சம்மதம்தான் என்ற கொள்கையை மனிதர் ஏற்றுக்கொள்ளாவிடினும் எல்லா மதத்தவர்களும் இறைவனுக்கே வணக்கம் செலுத்துகின்றனர் எனும் உண்மையை



ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்தகைய மனிதன் அதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் பிற சமயத்தவர் அனைவருடனும் அன்புடனும் சமாதானத்துடனும் வாழுகின்றான்.

பல இன, சமய மக்களிடையே நிலவும் பொறுமை சிறந்தது எனினும் இவைமட்டும் போதுமானவை அல்ல. ஏனெனில் முழு உலகினிலும் நிலவவேண்டிய பொறுமையோடு ஒப்பிட்டு நோக்கின் அவை ஒரு துளி எனவே கொள்ளவேண்டியிருக்கின்றது.

## அமைதியின் அடிப்படை பொறுமை

அனைத்துக்கும் அடிப்படையாக விளங்கும் பொறுமை ஒன்று உண்டு. அதி முக்கியமானதும் இதுதான். பிறரின் குற்றங்களையும் குறைகளையும் பொறுப்பதிலேயே இது அடங்கியிருக்கின்றது. பிறருக்குத் தீர்ப்பிடுவதையும் தண்டிப்பதையும் இது விலக்குகின்றது. பொறுமையின் புதல்வனாகக் கொள்ளக்கூடிய புனித சின்னப்பர் இதனைப்பற்றிக் கூறுகையில் ''நீ ஏன் உன் சகோதரனுக்குத் தீர்ப்பிடுகிறாய்? அல்லது உனது சகோதரனைப் புறக்கணிப்பது ஏன்? எல்லோரும் கிறிஸ்துவின் நீதி ஆசனத்தின்முன் நிற்கவேண்டியவர்களே'', என்றார்.

அவரவருக்குள்ள இயல்பின்படி நமக்கு வெறுப்பு உண்டாக்குவோருடனும், கருத்துக்களாலும் வாழ்க்கை முறைகளாலும் வேறுபாடு உள்ளவர்களோடும் நாம் மனத்திருப்தியோடும் மகிழ்ச்சியாக வாழுகிறோம் என்பதை எமக்கு இந்தப் பொறுமை காட்டுகின்றது. தத்தமது விருப்பு வெறுப்புகள், கொள்கைகளுக்கேற்ப பிறர் தமது உரிமைகளை அனுபவிப்பதற்கு நாம் தடையாய் இருத்தல் கூடாது. பிறரிடம் உள்ள அகந்தை, அறியாமை, நாகரீகமின்மை, தீயபண்புகள், குற்றங் குறைகளையிட்டு நாம் அவர்களை ஒதுக்கி நடத்துதலும் கூடாது. இரக்கம் காட்டி அவர்களோடு பொறுமையுடன் உறவாடுதல் வேண்டும்.

இவ்வாருக பழகுவதே அனைத்திலும் தலைசிறந்த பொறுமைப் பண்பின் இலக்கணங்களாகும்.

"ஒருவர் ஒருவரைச் சகித்து, மன்னியுங்கள், உங்களுக்குள் ஏதாவது குறைபாடு இருந்தால் நம் ஆண்டவர் உங்களை மன்னிப்பது போன்று நீங்களும் பிறரை மன்னித்துவிடுங்கள்" என்கிருர் புனித சின்னப்பர்.

## தீய தீர்மானங்களையும் தீவிர முடிவுகளையும் தவிர்க்கவேண்டும்

சாதி, சமய வேற்றுமைகளை எதிர்த்துப் பலர் மனத்துணிவோடு கண்டனக் குரல் எழுப்புகிருர்கள். ஆக்கிரமிப்புக்கள் சித்திரவதைகளுக்கு முற்றுப்புள்ளியிடவேண்டும் என்று அஞ்சாமல் அலுக்காமல் எழுதிக் குவிப்பார்கள் ஆனுல் அவசரமுடிவுகளையும், அநீதியான தீர்ப்புகளையும் தவிர்த்து நடப்பதற்கு வேண்டிய சகிப்புத் தன்மை இவர்களிடமில்லை.

இவர்களின் எழுத்திலும் சொல்லிலும் கனல்பறக்கிறது ஆனுல் கசப்பும் சுரக்கிறது. வெளிப்படையாகத் தீர்ப்பிடும் இந்த நீதிபதிகள் தமது கர்வத்தாலும், வன்முறைச் செயல்களாலும் மெய்யான பொறுமையை மாசுபடுத்துகின்றனர் ஒருவன் உண்மையான பொறுமைசாலியெனில் அவனிடம் தாழ்ச்சி இருக்கவேண்டும். பிறரிடம் உள்ள தவறுகளை, குறைகளை அவன் அறிந்து இருப்பது போன்று தன்னிடமுள்ள குறைகளையும், தவறுகளையும் அவன் அறிந்திருக்கவேண்டும். பொறுமையற்றவன் எனத் தான் கருதும் மற்றவனிடம் உள்ள குறையை மிகைப் படுத்திக் கூறுவது உண்மையான பொறுமைசாலிக்கு அழகல்ல.

பிறர் அன்பை நம் வாழ்வின் வழியாகக் கொள்வதற்கு பொறுமையைப் பற்றி நாம் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். பொறுமையைக் கடைப்பிடிக்க முடியாத அளவில் குணவியல்புகளைக் கொண்டுள்ளவர்களோடும். அன்போடு பழகுவதற்கு நாம் அறிந்திருக்க வேண்டும். அதுமட்டுமல்ல நற்குணம்



வாய்ந்தவர்களுக்கு நாம் தயக்கமின்றி உதவ முன்வருவது போன்று இவர்களுக்கும் ஆர்வமுடன் பணிபுரிய வேண்டும். பொறுமைக்கே உரிய விதிகளில் எம்மை நாம் நிறுத்தி செம்மையாக நடந்திடல் அவசியமாகும்.

## பொறுமையின் பண்புகள்

எந்த உரிமைகள் எமக்கு வேண்டும் என நினைக்கின்ருேமோ அதே உரிமைகளை அடுத்தவனுக்குத் தாராள மனத்துடன் கொடுக்க வேண்டும்.

தனக்கு விருப்பமில்லாத கருத்தை மற்றவர் வெளியிடும் போது பொறுமை உள்ளவன் அவன் கூறுவதை அவதானிக்க வேண்டுமே ஒழிய உணர்ச்சி வசப்படவோ, கோபிக்கவோ எதிர்த்து மொழியவோ கூடாது. ஏனெனில் தனது சொந்தக் கருத்தை வெளியிடும் உரிமை அவனுக்கு உண்டு. அவன் சொல்பவையை ஆராய்ந்து பார்க்கும் மனப்பக்குவம் வேண்டும், அப்படிச் செய்வதன் மூலம் நான் அறிந்திராத எதையாவது அவனிடம் இருந்து அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டலாம்.

பொறுமையற்றவன், மற்றவன் தனக்குப் பிடிக்காத கருத்தினைக் கூறும்போது சீற்றமடைந்து போராடக் கிளம்பி விடுகிருன். தானே அறிவாளி எனும் அகந்தை அவனிடம் குடிகொண்டு விடுகிறது. இதன் பயன் பிறன் தன் கருத்தை விளக்கிக் கூற உள்ள வாய்ப்பையும் இல்லாது செய்து விடுகின்ருன்.

பிறரைத் திருத்த விழைபவனுக்கு கொதிப்பும், கோபமும் எதற்கு? இவற்ருல் பயனற்ற குழப்பங்களும், பகைமைகளுமே விரிகின்றன. இத்தகைய வாய் வீச்சுக்களால் ஆகப்போவது எதுவுமில்லை.

புனித சின்னப்பர் தனது அனுபவத்தைக்கொண்டு "வாய்ப் போரில் ஈடுபடாதீர்கள். ஏனெனில் இவற்ருல் ஒரு பயனும் இல்லை" என்றும்.

"விவேகமற்ற விசாரணைகள், குலவரலாறுகள். சட்டங்கள் ஒழுங்குகள் பற்றிய தர்க்கங்கள் பிரிவினைகளை விட்டுவிடுங்கள் ஏனெனில் இவையெல்லாம் வீணானவை, இவற்றால் ஒரு நன்மையும் ஏற்படுவது இல்லை" என்றும் கூறுகிறார்.

## உன்னைப்போல் பிறனையும் நினை

விவாதங்களில் கலந்துகொள்ளும்போது உங்களை நீங்கள் நினைப்பது போல் பிறரையும் நினைவு கூருங்கள். உங்களின் இனிய பண்பாலும் விரிந்த மனப்பான்மையாலும் அந்தவிவாதம் மற்றவர்களுக்கு இன்பம் கொடுக்கும்படி நடவுங்கள் உங்களின் கருத்துக்களைப் பிறர்மேல் திணிக்கவேண்டாம். நீங்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் சரியானவையாக இருந்தும்கூட கையாளும் முறைகள் பிழையானவையாக இருக்கலாம்.

## பொறுமைக்கு வேண்டிய இன்னுமொரு பண்பு

எதனையும் அதற்கே உரிய குண இயல்புகளுடன் ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவம் வேண்டும், அதை இன்னுமொரு விதமாகக் கூறுவதாகில் தெய்வபராமரிப்பு அனுமதிப்பது எதனையும் நன்மனதோடு ஏற்றுக்கொள்ள வேண்டும்

பண்பாட்டால் இழிந்தவர்களாயும், பழக்கவழக்கங்களால் தாழ்ந்தவர்களாயும் வாழும் பலர் அந்த நிலையில் இருந்து திருந்த முடியாதவர்களாக இருப்பர். அவர்கள் நடுவே வாழவேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டிருக்கலாம். அவர்களில் பலரை நம்மால் மாற்றியமைக்க முடியாத நிலையிலும் அவர்கள் வழியில் அவர்களைப் போகவிட்டு அவர்களோடு வாழ வேண்டும்.

இந்த இடத்தில் காட்டவேண்டிய பொறுமையானது இதுவரையில் காட்டியதைவிட இக்கட்டானதாகும். மாறுபட்ட சாதி சமய கோட்பாடுகள் உள்ளவர்கள் மத்தியில் கடைப்



பிடித்ததைவிட வேறுபட்டதாகும். ஒருவரின் இதயத்தில் இருக்கும் அன்புக்கு கடுமையான சோதனை இந்த இடத்திலேதான் நிகழ்கின்றது.

இப்படி உங்கள் பொறுமையைச் சோதிப்பது நீங்கள் இயக்கும் ஒரு இயந்திரமாக இருக்கலாம். அல்லது உங்கள் அலுவலகத்தின் ஒரு சிற்றூழியனாக—தொழிலாளர் தலைவனாக—உடன் ஆசிரியனாக—எமது வீட்டில் உள்ள ஓர் உறவினராக—நம்மை அடுத்து வாழும் ஓர் அயலவனாக—தீய இயல்பு, அசந்தை, சோம்பல், பேராசை, முரட்டுத்தனம், ஏமாற்றுக் குணங்கள் கொண்ட ஒரு பொய்யனாகக்கூட இருக்கலாம். அல்லது உங்கள் முன்னேற்றத்துக்கும் மதிப்புக்கும் களங்கம் விளைவிக்கக் கூடிய பகைவனாகத்தானும் இருக்கலாம். ஆனால் நீங்களோ எவரையும் தள்ளி வைத்துவிடக் கூடாது. அனைவருக்கும் நீங்கள் மரியாதை காண்பிக்கவே வேண்டும். இத்தகையோரோடும் நீங்கள் அன்புடன் உறவாட வேண்டும். இவர்களுக்கு உதவி செய்யக்கூடிய வாய்ப்புக்களுக்காகக் காத்திருக்க வேண்டும்.

## தாழ்மையும் பொறுமையும் அற்றவழி தவறான வழி

நீங்கள் தாழ்மையும் பொறுமையும் அற்றவர்கள் என்பதை உங்கள் வார்த்தைகள் காட்டிக் கொடுக்கும்; நீங்கள் தாழ்மையும் பொறுமையும் அற்றவராகில் ஒருவர் உங்களுக்குப் பிடிக்காத விடயம் ஒன்றைச் செய்யும் பொழுது 'அவர்களை ஒன்றும் செய்யமுடியாது. அவர்கள் சேட்டைகள் எனக்குப் பிடிக்காது'' என்று கூறுவீர்கள்.

எதிர்மாறாக அவ்வினிய இயல்புகள் உங்களிடம் குடிகொண்டிருக்குமாயின் ''நான் அவனை விரும்பி என் உடன் பிறப்பாகப் பாவிப்பேன்'' என்பீர்கள்.

எனவே பொறுமையின் இரகசியம் இதுதான். தீயவர்களையும் அன்பு செய்ய வேண்டும்; அவர்களுக்கு அன்புக்கரம் நீட்டவேண்டும். அவர்களை எம் உடன்பிறப்புகளாக ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் இவை எப்படி முடியும்?

வெற்றி கிட்டும் என்ற நம்பிக்கையோடு நாம் போராட வேண்டும். அத்தகைய சந்தர்ப்பங்களில் அன்பும் பண்பும் இல்லாதவர்களாக நாம் நடவாதபடிக்கு எம்மைக் கண்காணித்துக் கொள்ள வேண்டும் மற்றவர்கள் தொல்லைகள் தரும் சமயங்களில் நாம் நிலை தடுமாறாதவர்களாக மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு எம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் அவர்களைக் கடிந்து உரைக்கவும் கண்டிக்கவும் பின் நிற்ற வேண்டும். அவர்கள் தரும் இன்னல்கள் இடையூறுகளை நாம் தாங்கிக் கொள்பவர்கள் என்பதை எப்பொழுதும் மறந்து விடலாகாது.

இதயமற்ற அவர்களுடன் பழகுவதற்கு நாம் விருப்புள்ளவர்களாக அவர்களுக்கு தேவைப்படும் உதவி என்ன? அவர்களுக்கு உள்ள தொல்லைகள் என்ன? என்பவை பற்றி ஆய்வு செய்தல் வேண்டும். அவர்களது சினம் நீங்க நாம் துணைபுரிய வேண்டும். இத்தனைக்கும் எம்மிடம் இருக்க வேண்டியது பொறுமையும், பிறரைப் புரிந்து கொள்ளும் தன்மையுமாகும். இவை எம்மிடம் இருக்குமாயின் எத்தகைய தீயோனையும் நாளடைவில் நாம் நம் வசப்படுத்தி விடலாம்.

## கோபிக்கக் கூடாதவர்கள்

அறியாமையின் நிமித்தம், பண்பாட்டின்மையின் காரணத்தால் தவறிழைப்பவர்கள் மீது நாம் சினங்கொள்ளக் கூடாது. இதேவிதமான தவறுகளை நாமும் சில சந்தர்ப்பங்களில் செய்கிறோம் என்பதை மறந்து விடலாகாது. பிறர் செயலைக் கண்டு திகைப்படைவதும்; துயரடைவதும் எமது சகிப்புத்தன்மையின் பால் உள்ள குறைபாட்டையே காண்பிக்கிறது.

எனக்கு ஒரு அனுபவம் ஏற்பட்டது. பத்திரிகை ஒன்றிற்கு விளம்பரம் கொடுக்க குறிப்பிட்ட பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு விளம்பரப் பிரிவில் இருந்த பெண் ஒரு கல்லூரி மாணவி. ஆனால் அவளுடைய போக்கில் அதிகப்பிரசங்கித்தனம் அதிகமிருந்தது. எனது விளம்பரத்தில் SURE என்று நான் சரியாக எழுதிக் கொடுத்திருந்ததை அவள்



தான் கீறிவிட்டு SHURE என்று திருத்தியெழுதிய போது நான் பொறுமையிழந்துவிட்டேன். எனது சகிப்புத்தன்மை என்னிடமிருந்து விடை பெற்றுக் கொண்டது. அச்சம்பவத்தை நான் பெரிது படுத்தாமல் விட்டிருக்கலாம். ஆனால் நானே கொதிப்படைந்து ஆர்ப்பாட்டம் செய்து விட்டேன். அன்று நான் நடந்து கொண்ட விதம் தவறுதான் என்று இன்று மனவருத்தப்படுகிறேன். அவளது அறியாமையை நான் அவ்வளவு தூரம் அம்பலப்படுத்தியிருக்கக் கூடாது.

## பொறுமையா ? அடக்கமா ?

சில வேளைகளில் பெரும் சகிப்புத்தன்மையுடன் நடப்பதாக நாம் நினைக்கின்றோம். ஆனால் நாம் அவ்வேளையில் கடைப்பிடிப்பது பொறுமையல்ல. எம்மை நாம் அடக்கிக் கொண்டிருக்கிறோம் அவ்வளவுதான்.

கிறிஸ்தவப்பாதிரியான எனது நண்பர் ஒருவர், ஒருமுறை எனக்குக் கடிதமெழுதியிருந்தார். அவர் எனக்கு எழுதிய கடிதத்தில் அங்குள்ள கத்தோலிக்க குருவானவரைப்பற்றி குறிப்பிட்டிருந்த வரிகளில் ''நானும் என் மனைவியும் அந்தக் குருவானவருக்கு விருந்துகொடுப்பது வழக்கம், அவர் உணவு அருந்தும் முறைகள் விசித்திரமானவையாக இருந்த போதிலும் எங்களுக்கு அவரை மிகவும் பிடித்திருக்கிறது'' என்று கூறியிருந்தார்.

சிலரைப்பற்றி நாம் பேசும் பொழுது 'என்றாலும்' என்ற சொல்லை அடிக்கடி உபயோகிக்கின்றோம். நம்மிடம் சகிப்புத் தன்மை உண்டு என்று நாம் நினைப்பினும் எம்மிடம் அது இல்லை என்பதை வெளிக்காட்டிக்கொள்ளுகின்றோம். எனவே எம்மிடம் சகிப்புத் தன்மையெனும் பெருங்குணம் தேவைப்படுகிறது என்பது தெளிவாகிறது.

ஒருவரைப் பற்றி நாம் பேசிக்கொள்ளும்போது 'சரி, சரி ஆனல் அவர் ஏன் அப்படிக் கத்துகிருர்?' என்போம். நாம் சகிப்புத்தன்மையுள்ளவர்களாயின் நம்மிடம் இருந்து ஏன் இத்தகைய வார்த்தை வெளிவரவேண்டும். அவர் சத்தமிட்டுப் பேசுவதை இப்படி இடித்துரைக்க வேண்டியதில்லையே! அது ஏதும் நல்ல காரணத்தால் அவருக்கு ஏற்பட்ட பழக்கமாக இருக்கலாம், அல்லது பரம்பரையாக அவரிடமுள்ள குறைபாடாகவோ — அன்றேல் அவர் வாழும் சூழலில் செவிப்புலன் குறைந்தவர்கள் உள்ளவர் இருப்பதனுலோ ஏற்பட்ட பழக்கமாக இருக்கலாம்.

## தீவிர முடிவுகளுக்குக் காரணம் பொறுமையின்மையே

எமது அவசரமுடிவுகளுக்குக் காரணம் பொறுமையின்மையே. நாம் பல சமயங்களில் அத்தகைய முடிவுகளுக்கு வந்திருக்கின்றேம் அவற்றுள் சில உடனடியாக மற்றவர்களால் இனங்காணப்படுகின்றன. வேறு சில இலகுவில் கண்டுகொள்ள முடியாதவை.

தீவிரமுடிவுகள் நம்மைக் குருடர்களாக்கி எங்களின் நல் வழியில், முன்னேற்றப் பாதையில் முட்டுக்கட்டையிடுகின்றன. இத்தீவிர முடிவுகளால் பின்னர் நாம் அடையக்கூடிய கேடுகளை முன்கூட்டியே நாம் ஆலோசனை செய்வது எமக்குப் பலனளிக்கும்.

இக்கேட்டினைத் தவிர்ப்பதற்கு தெளிவான வழியாது?

இதுபற்றி நாம் தனித்திருந்து ஆராயவேண்டும். நீதிக்கு முரண்பாடான எமது விருப்பு வெறுப்புக்களை ஒரு குறிப்பாக எழுதுதல் வேண்டும்

எமக்குப் பிடிக்காதவர்கள் — நாம் வெறுக்கும் வகுப்பினர் நாம் எதிர்க்கும் பொதுவான எண்ணங்கள், கருத்துக்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் எழுதவேண்டும். இந்த வெறுப்புகளையும் கடந்து நிற்கும் ஓர் அசட்டு உணர்வு யாதெனில்;



படித்துப் பட்டம் பெற்றவர்கள். அனுபவசாலிகளிடத்தில் முதலாய்க் காணப்படும் சலிப்பு, மனக்கசப்பு, சோர்வு என்பவைதான். இந்த உணர்வுகள் கூட ஒருவித தீவிர முடிவுகள்தான் இந்த உணர்வுகளையும் மனத்தில் இருந்து அகற்றிவிடுதல் நமக்கு அவசியமானதாகும்.

## இயல்பான வெறுப்புகள் களையப்படல் வேண்டும்

பொறுமையை அடைவதற்கு இயல்பாக நம்மிடமுள்ள வெறுப்புகளை முளையிலேயே கிள்ளியெறியவேண்டும். "சகோதர அன்புடன் ஒருவர் ஒருவரை நேசியுங்கள். எல்லா மனிதருடனும் சமாதானமாக வாழுங்கள்" என்கிருர் புனித சின்னப்பர்.

ஒருவன் தன் உடன் மனிதனை, அல்லது ஒரு சமுதாயத்தைப் பகைக்கும்போது தனது மதிப்பை இழந்துவிடுகிருன். பொறுமையில்லாதவனையும் மதித்து மரியாதை காண்பிப்பதே மிகவும் கடினமான ஒரு செயலாகும்.

அன்பிற்கு மிகவும் அவசியமான விதிகளில் பிரமாணிக்கமும், பொறுமையும் இன்றியமையாதவை

# என் மொழி 8

## இனியவை கூறல்

இன்சொல் வழங்கும் ஒருவனிடம்—

கூறும் வணக்கத்தில் அன்பு கலந்திருக்கும்—

அவன் விருந்தோம்பலில் நேர்மையும் பணிவும் மிளிரும்—

அவன் கூறும் புகழுரையில் பூரிப்பு ஒளிரும்—

அவன் காட்டும் நன்றியில் உளக்கனிவு தெரியும்—

அவனை நமக்கெல்லாம் அருமையானவனாக்கி அவன் மட்டில் நாம் மரியாதை செலுத்தும்படி நம்மைத் தூண்டும் சக்தி அவனது உதடுகளில் இருந்து பிறக்கும் இன்சொற்களுக்கு உண்டு.

மற்றவர்களிடம் உள்ள திறமைகளை சலிப்பின்றி அவன் சுவைப்பான், பாராட்டுவான். ஒரு விவாதத்தின் பொழுது உங்களை எதிர்த்துப் பேச நேரிடினும் மென்மையான முறையிலேயே வார்த்தைகள் வெளிவரும். சுடுசொற்கள், கிண்டல் மொழிகள் அவனிடம் இருந்து வரமாட்டா. அவன் சொல்லும் ஆறுதல் மொழிகள் போலியானவை அல்ல, அவன் எவரையும் மனம் நோகச் செய்யமாட்டான். எவருடைய நடத்தையைப் பற்றியும் அவன் தீர்ப்பிட மாட்டான். ஒருவனைப் பற்றி நன்மையாகக் கதைக்க முடியாவிட்டால் தீமையாகவும் பேசாதே என்பதுவே அவனது கொள்கையாக விருக்கும்.

நீங்கள் அவனுக்குத் தொல்லை கொடுத்தபோதும் அவன் உங்களைத் திட்டவோ, பழிசுமத்தவோ போவதில்லை. மட்டமானது என்று ஒன்றுமில்லை—அனைத்தும் மோசமானதுதான் என்பதே அவன் சலிப்போடு கூறக்கூடிய இறுதிச் சொற்களாக விருக்கும்.

இன்சொல் சொல்பவனுக்கு "தேன் ஒழுகும் ஒரு புனிதமான நாக்கே இருக்கிறது. இதயத்தின் நன்மைத்தனத்திற்கு எல்லை காண முடியாததற்கு உதாரணமாக விளங்கும் அரும் பெரும் மனிதருள் இவனும் ஒருவன். அதிகமான அன்பு கொண்டவனே உண்மையான பெரிய மனிதன்" என்பது தோமஸ் கெம்பிஸ் கூறும் கருத்தாகும்.

### மனிதனின் பிறவிக்குணம்

பிறரைப்பற்றி நன்மையாக நினைப்பதைவிட, அவர்களைப் பற்றிக் கேடாக நினைத்துக் குறைகூறுவதே எமக்கு இயல்பான குணமாகும். இஃது அப்பழுக்கற்ற உண்மை. ஆயினும் இந்த கவலைக்குரிய உண்மையை நாம் கண்டுகொள்வதோ ஒத்துக் கொள்வதோ இல்லை. நாக்குகள் ஆபத்தானவை என்பதை நாம் உணருவதுமில்லை.

"நாக்குகள் சமாதானத்தை அழிக்கும் கேடுகள், உயிரை உறிஞ்சும் நஞ்சுகள்" என்கிறார் புனித யாகப்பர். நாம் அறிவாளிகளாக இருந்தால் அதிகமாகப் பேச விரும்பமாட்டோம். மௌனமாக இருப்பதையே பெரிதும் விரும்புவோம். "மனிதருள் அதிகம் பேர் வீண்பேச்சுகளையே விரும்புவதால் அவர்களில் நம்பிக்கைவைக்கமுடியாமல் இருக்கிறது" என்கிறார் தோமஸ் கெம்பிஸ் வம்பு அளக்கும் எமது மட்டித்தனம், நமது மதிப்பைக் குறைக்கிறது.

## எதிர்மாறான மனிதன்

இன்சொல் பேசுபவன் எமக்கு எதிர்மாறானவன், மௌனத்திலேயே அவன் இன்பம் காண்கின்றான். ஏனெனில் மௌனத்தைக் கடைப்பிடிக்க முடியாதவன் ஆபத்தில்லாமல் பேசுவதில்லை. பேசுவதில் எல்லை மீறுவதைவிட பேசாது மௌனம் காப்பது மேலானது என்பதே அவனது மௌனத்திற்குக் காரணமாகும்.

தனக்குச் சம்பந்தமில்லாத விடயங்களில் அவன் தலையிடுவதில்லை. அவற்றின் மட்டில் அறிவுரையோ, ஆலோசனையோ கூற அவன் தயங்குவான். பிறருடைய விடயங்களில் அத்துமீறி அனுமதியின்றித் தலையிட்மாட்டான். ''ஆலோசனை கொடுப்பதிலும். ஆலோசனை கேட்பதில் நன்மையுண்டு எனும் தோமஸ் கெம்பிஸின் மொழிகள் இவனுக்கு வழிகாட்டிகள்.

## மௌனம் ஒரு பெரியகலை

நம்வாயை மூடிவைப்பது பெரியகலையாகும். அன்பிற்கும் பாசத்துக்கும் இக்கலை மிக மிக அவசியமானதாகும். எமது நாக்கை வர்ணிக்கும் புனித யாகப்பர் ''அடங்காப்பிடாரி, நெருப்பு, தீமையின் உலகம்'' என்றெல்லாம் பெயரிட்டிருக்கிறார். நாக்கை அடக்க உள்ள ஒரேவழி, எளியவழி வாயை இழுத்து மூடிக்கொள்வதுதான். எப்படியோ எமது வாயை மூடிவைத்திருக்க நாம் பயிற்சிசெய்யவேண்டும். ஏனெனில் அன்புக்கு வேண்டிய மிக அவசியமான பண்பு இதுவாகும்.

''நான் பேசிய சமயங்களில் எல்லாம், ஐயோ மௌனம் சாதித்திருக்கக் கூடாதா? என்று ஏங்கினேன்.'' இவ்விதமாக தோமஸ் கெம்பிஸ் அடிக்கடி கூறுவார். அவரது விழிப்பு மிக்க காவலையும் மீறிச் சில சமயங்களில் சுடுசொற்கள் அவருடைய வாயில் வந்திருக்கின்றன.

'ஓயாமல் அலட்டிக் கொண்டிருப்பதால் பிறருக்கு மகிழ்ச்சி ஏற்படும் என்று நாம் நினைக்கின்றோம். சில சமயங்களில் அது பொருத்தமாக இருக்கலாம். ஆனால் இவ்விதம்



நாம் நடந்து கொள்வதால் பெரும்பாலும் மற்றவர்களுக்குத் தொல்லையே கொடுக்கிறோம். எம்மிடமுள்ள தீய குணங்கள், பழக்க வழக்கங்களை பிறர் கண்டிக்கும் அளவுக்கும், அவர்கள் நம்மை வெறுக்கும் படியும் செய்கின்றோம்'' என்று மீண்டும் தோமஸ் கெம்பிஸ் கூறுகின்றார்.

## தேவைக்கு அதிகமாகவே நாம் பேசுகின்றோம்

நமக்கு நன்மை பயக்கும் விடயங்களில் கூட நாம் தேவைக்கு அதிகமாகவே பேசுகின்றோம். ஒருவரை சந்திக்கும் முதற் தடவையிலேயே அவரை முழுதாக நம்பி விடுகின்றோம். இதனாலேயே ''உங்கள் மனதை எவருக்கும் திறந்து காட்ட வேண்டாம்'' என்கிறார் தோமஸ் கெம்பிஸ். பிறர் அன்பின் பொருட்டு எமது நாவைக் கட்டுப்படுத்த எம்மால் முடியாவிடினும் எமது சொந்த நன்மையின் பொருட்டெனிலும் எமது வாயை நாம் கட்டுப்படுத்துவது அவசியமாகும்.

## அறிவு புகட்டும் நீதி

ஒரு கல்லறைக்கு மேலே ஒருகண்ணாடிப் பேழை. அதனுள்ளே உண்டு கொழுத்தது போன்ற ஒரு பொம்மை மீன். ''என்னுடைய வாயை மூடிக் கொண்டிருந்திருந்தால் நான் இங்கே வந்திருக்க மாட்டேன்'' எனும் வாசகங்கள் கீழே பொறிக்கப்பட்டிருக்கிறன. இதில் இருக்கும் படிப்பினையை நாம் நன்கு மனதில் பதித்துக் கொள்ள வேண்டும்.

''இறந்தவர்களைப் பற்றி நன்மையாகவே பேசவேண்டும். தீமையாகப் பேசுதல் கூடாது'' என்று பெரியோர்கள் கூறுவர். ஆனால் என்னைப் பொறுத்தவரை இந்தத் தத்துவம் முற்றிலும் சரியென்று கூறமாட்டேன்.'' வாழ்வோரைப் பற்றியோ, இறந்தவர்களைப் பற்றியோ நன்மையைத் தவிர வேறு எதையும் பேசாதே'' என்று நாம் திருத்திக்கொள்ள வேண்டும்.

அன்பின் விதி கடினமானது. மிகமிகக் கடினமானது. ஆனால் மிகவும் அவசியமானது. பிறரைப் பற்றி தவறாகத் தீர்மானிப்பவர்கள், குறை கூறுபவர்கள் எல்லோரும் நல்ல அயலவர்கள் அல்ல. பிறரைப்பற்றி எப்பொழுதும் நன்மையாகக் கதைப்பதே நாங்கள் அவர்களுக்குச் செய்யக் கூடிய சிறந்த சேவையாகும். நாம் சிறந்த பிறர் தொண்டனாக, ஊக்கம் மிக்க சமூக சேவையாளனாக இருக்கக்கூடும். ஆனால் பேச்சில் பிழை விடாத மனிதனே பெரியவனாவான்.

## பிரிவினையின் காரணி பிழையான தீர்ப்புகளே

நாங்கள் பிறரைத் தூற்றித் தீர்ப்பளிக்கும் போதுதான் பிரிவினைகள் உதயமாகின்றன. பிறரைப் பற்றித் தீர்மானிப்பதற்கு நமக்கு உரிமையில்லை. அது எமது அறியாமையும் பாவமுமாகும். இதுபற்றிக் குறிப்பிடும் தோமஸ் கெம்பிஸ் "பிறரைப் பற்றித் தீர்ப்பிடுவதில் மனிதன் வீணாக உழைக்கிறான். பெரும்பாலும் திசை மாறிப்போய் பாவம் கட்டிக் கொள்கிறான். ஆனால் தன்னைப்பற்றி ஆய்ந்து தீர்ப்புச் செய்யும்போது அதனால் அதிக ஆதாயம் பெறுகிறான்" என்கிறார்.

நீதியின்படி தீர்ப்பு வழங்குவதற்கு வேண்டிய நடுவு நிலைமை, மன்னிக்கும் மனப்பாங்கு, தன்னறிவு மனத்துணிவு எனும் பண்புகள் நம்மிடத்தில் இல்லை. "எமது மனச்சார்புக்கு ஏற்றபடிதான் நாம் எதுவிடயத்திலும் தீர்மானிக்கிறோம். நமது தன்னலம் நீதியான தீர்ப்பை நம்மிடமிருந்து சூறையாடி விடுகின்றது." என்பது தோமஸ்கெம்பிசின் கருத்து.

எமது செயல்களை நாம் நிறுக்கும்போது நாம் விரும்புவதின் படியே அளவையை உபயோகிக்கின்றோம். ஆனால் பிறரின் செயலை நிறுக்கும்போது அவர்கள் விரும்பாத அளவையையே பயன்படுத்துகின்றோம், அல்லது தந்திரங்களைக் கையாளுகின்றோம். ஒரே அளவையைக் கொண்டே நம்மையும் நம் அயலவரையும் நாம் நிறுவை செய்ய வேண்டும்.



## நாம் தீர்ப்பிடும் விதம்

நம்மிடம் வாங்கிய கடனை பிறர் திருப்பித் தருவதற்கு அலட்சியமாய் இருந்தால் "அவர்களுக்குத் தர மனமில்லை. தராமல் விடப் பார்க்கிறார்கள்" என்கிறோம். அதே வேளையில் பிறருக்குக் கொடுக்க வேண்டியதை நாம் தாமதப் படுத்துவோமானால் "எங்களிடம் கபட எண்ணம் எதுவுமில்லை மறதிதான் காரணம்" என்கிறோம்.

நேர்மையின் பாதையில் அவர்கள் சரியாக நடப்பதில்லை என்று நாம் பிறரில் குற்றம் சாட்டுகிறோம்; ஆனால் எல்லா ஒழுங்குகளையும் சரிவரக் கடைப்பிடிப்பது எளிதான காரியமல்ல என்பதனை அனுபவவாயிலாக உணர்ந்திருக்கிறோம் அல்லவா?

"நீங்கள் விரும்புவதுபோல் எல்லா ஒழுங்குகளையும் சரிவரக் கடைப்பிடிக்க உங்களாலேயே முடியாமல் இருக்கும்போது பிறர் அவ்வாறு நடக்கவேண்டும் என்று நீங்கள் எதிர்பார்ப்பதெப்படி?" என்ற கேள்விக்கணையை நம் எல்லோரையும் நோக்கி எறிகிறார் தோமஸ் கெம்பிஸ்

பிறரைப்பற்றித் தீர்ப்பிடுவதில் உள்ள அறிவீனத்தையும் ஆபத்தையும் இன்சொல்பேசும் ஒருவன் அறிந்து உணர்ந்து தப்பிக்கொள்கிறான். தனது கடமைகளை மட்டும் கவனிப்பதோடு நின்று பிறரைப் பற்றி நன்மையாக நினைப்பதையும், பிறரைத் தூற்றுவதில் தன்னைத் தாழ்த்துவதையுமே பெரிதும் விரும்புகின்றான். இத்தன்மையைப் பற்றிக் கூறுகையில் "எங்களைப் பற்றி எதுவும் நினைக்காது மற்றவர்களைப்பற்றி நல்மையாகவும் உயர்வாகவும் நினைப்பதே பெரிய ஞானம்" என்கிறார் தோமஸ் கெம்பிஸ்.

## சமாதானத்தின் வாழ்வு எப்போது தொடங்குகிறது

பிறரைத் தூற்றித் தீர்ப்பிட்டு பகைக்கும் இழிவானபண்பு எங்களிடம் இருந்து மறையும்பொழுதுதான் உண்மையான சமாதானத்தின் வாழ்வு, அன்பின் வாழ்வு ஆரம்பிக்கின்றது.

சமூக வாழ்வின் வெற்றிக்கு நாம் செய்யும் தொண்டினையும் நம் நாக்குச் செய்யும் தொண்டினையும் ஆய்ந்து பார்க்க வேண்டும். மனித குலத்தின் அழிவுக்கு நமது நாவே காரணம் என்பதனைக் கண்டுபிடிப்போம். நாக்கானது சிறிய உறுப்பாக இருப்பினும் அது பெரும் புரளிகளை அவிழ்த்து விடுகிறது. அது செய்யும் தீங்குகளுக்கு அளவில்லை. பகைமையும், அழிவையும் நம் நாக்கே உருவாக்கிப் பரப்புகின்றது.

## பொதுமக்கள் விரோதி

கட்டிக் காக்கப்படாத நாக்கு பொதுமக்கள் விரோதியாகும். குடும்பத்தில், மடத்தில், மறைமாவட்டத்தில் அல்லது வேறு எந்தப் பொது இடத்தில்தான் இருந்தாலும் அருவருப்பை உண்டாக்கி அநீதியைப் பரப்பிவிடும்.

அடக்கப்படாத நாக்கு பக்திக்கும் தூய மனத்திற்கும் விரோதி ''தான் பக்திமான் என்று எண்ணிக்கொண்டு தன் நாக்கை அடக்கி ஆளாது விடுகிறவனின் பக்தி வீண்'' என்கிறார் புனித யாகப்பர். தான் பொதுமக்கள் தொண்டன் சமூக சேவையாளன் என்று சொல்லும் எந்த மனிதனும் தனது நாக்கை அடக்கி ஆளவேண்டும். இல்லாவிடில் அவன் மக்களுக்குக் காண்பிக்கும் அன்பு போலி அன்பாகும்.

நாவினை கட்டுப்படுத்தி நாம் அதனை ஆளவேண்டும் என்பதையே வள்ளுவப் பெருந்தகையும் ''யாகாவாராயினும் நாகாக்க'' என்ற கட்டளையை குறள் மூலம் இட்டிருக்கின்றார். அன்றியும் நாவில் இருந்து புறப்படும் சுடுசொல்லானது மிகப் பயங்கரமானது என்பதையும், தீயைவிடக் கொடுமை செய்யக் கூடியது என்பதனை விளக்குமுகமாகவே.

''தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு'' என்று அழுத்தம் கொடுத்துக் கூறியுள்ளார்.



சுடுசொற்கள் வசைச் சொற்கள் பகையையும் குழப்பங்களையுமே விளைவிக்கின்றன. இதனை உலகில் உள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும், சிறுவர் சிறுமியரும் தெரிந்துவைத்திருக்கின்றனர். நாடுகளுக்கும், வெவ்வேறு இன மக்களுக்கிடையேயும் சமயங்களுக்கிடையிலும் உள்ள பகைமைப்பேச்சுக்களே பிளவுகளை ஏற்படுத்துகின்றன. தலைவர்களும் பொதுமக்களும் இன்சொல் பேச அறியாதவரை பலுகிவரும் பகைமைகளை வேரறுக்கவே முடியாது.

உலகெங்கணும் ஓங்கி வளர்ந்துவரும் பகைமைகளையும், போட்டிகளையும், போர்களையும் கண்டு நெஞ்சம் குமுறுகின்றோம். அழிவுகளையும், பிரிவுகளையும் கண்டு அழுது வடிக்கின்றோம், ஆனால் சொந்த இதயங்களில் பகைமையும் வெறுப்பும் இருக்கும் வரை. உதடுகள் உக்கிரமமான வார்த்தைகளை உதிர்த்துக் கொண்டிருக்கும்வரை பகைமையைக் கண்டு நாம் பரிதவித்து அழுவதெல்லாம் வெறும் பாசாங்குதான்.

## பகைமைக்குக் கல்லறை

பகைமைக்குச் சமாதிகட்ட வேண்டுமெனில் என்றும் எமது உதடுகளில் நல்ல சொற்களே பிறக்கவேண்டும்.

ஒரு எலி இறந்து கிடப்பதைக் காண்கின்றோம். அதைக் காண்பவர் முகங்களில் ஒரு சுளிப்பு, அருவருப்பு, மூக்கைப் பிடித்துக் கொள்கின்றனர். சிலர் காறி உமிழ்கின்றனர். அக்காட்சியைப் பார்த்த பலரில் ஒருவன் மட்டும் ''என்ன அழகான பற்கள்'' என்று கூறுகின்றான் என்றால், எத்தகைய சூழ்நிலையிலும் நல்லதைக் கண்டு இன்சொல் வழங்கும் தன்மை உள்ள மனிதன் இவனே எனக் கூறலாம்.

பகைமை, விரோத உணர்வுகள் உள்ளத்துக்கும் உடலுக்கும் ஊறு விளைவிப்பனவாகும். மனோதத்துவ நூல்களைப் படித்தவர்களுக்கு இது விளங்கும். பகை நமது உள்ளத்தைக் கெடுக்கிறது, சிதைக்கிறது. நம்மை நோயாளிகளாக்குகிறது. நெஞ்சத்திற் பகையுள்ளவன் எப்பொழுதும் மனக்கொந்தளிப்

புடனேயே காணப்படுவான். அவனது முகம் விகாரமாய் இருக்கும். அவனது உடலின் சுரப்பிகள் ஒழுங்காக இயங்க மாட்டா, நினைவுகள் நிம்மதியை அழித்து விடும், நித்திரை வர மறுக்கும். அன்றாட நிகழ்ச்சிகளில் ஆர்வமோ, மகிழ்வோ இருக்காது. பற்றுக்களால் பற்றி எரியும் அவன் ஒழுக்கம் பட்டு வீடுகிறது அன்பும் நம்பிக்கையும் அற்ற நிலையில் அவன் தோற்றம் தான் ஒரு கொலைகாரன் என்று கூறுவது போற் றேன்றும். 'சகோதரனைப் பகைப்பவன் கொலைபாதகன்'' எனும் அருளப்பரின் சொற்களுக்குச் சான்று பகர்பவனாக அவன் காட்சியளிப்பான்.

நம்மிடமுள்ள பகைமை உணர்வானது அற்பமானதாக, ஆவேசங் கொண்டதாக இல்லாமல் மனித இயல்புகளுக்கே உரிய சாதாரண மன எரிச்சலாக மட்டும் இருக்கலாம். அது எத்தன்மையானதாக இருந்தாலும் அது நமது உடலுக்கும் உள்ளத்திற்கும் தீங்கு செய்வதே. அன்பின் பொதுவிதியானது அற்ப வெறுப்பை முதலாய் அனுமதிப்பதில்லை.

## அகத்தையும் முகத்தையும் கெடுப்பது பகை

மனச்சாந்தி மறைந்து விட, மகிழ்ச்சியெல்லாம் கரைந்து விட, இயற்கையாக எம்மிடமுள்ள கவர்ச்சிகள் யாவும் கலைந்து போக, உள்ளமும் உருவமும் விகாரமாக, உணர்வுகளால் ஆட் கொள்ளப்பட்ட அடிமைகளாக நிற்கின்றேம் என்றுல், எம்மிடம் பகை குடிகொண்டு விட்டது என்பதே பொருள். சிறு பகைக்கு முதலாய் இப்படிச் சீரளிக்கும் சக்தியுண்டு.

நாம் ஒருவரிடம் பகைமை பாராட்டுவதன் காரணம் எமது மன உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட விடயமாக இருக்க லாம். ஒருவர் நமக்குச் செய்த தீமை காரணமாக இருக்கலாம் இதனைப் பரிகரிப்பதற்கு உள்ள ஒரே மருந்து ஆன்மவைத்திய ராம் கிறிஸ்து பெருமான் கொடுத்த மன்னிப்பு ஒன்றே. ஆம் 'விரோதிகளை நாம் மன்னிக்க வேண்டும்'' நாம் தயக்கமின்றி முழு உள்ளத்தோடும் அவர்களை மன்னிக்க வேண்டும்,



இதனை புனித சின்னப்பர் இன்னும் தெளிவாகக் கூறுகிருர்,

''நீங்கள் ஒருவருக்கு ஒருவர் இரக்கம் காண்பித்து எங்கள் ஆண்டவர் உள்ளங்களை மன்னிப்பதுபோல், நீங்களும் பிறரை மன்னித்துவிடுங்கள்''

எமக்குத் தீமை செய்தவர்களை நாம் மன்னிக்கும்போது அவர்களைப் பகைப்பதற்குப் பதிலாக அன்புசெய்யத் தொடங்குகிறேம்.

பிறரை நாங்கள் பகைப்பதின் காரணம். எங்களின் இயல்பு வெறுப்பாக இருக்கலாம் அல்லது பொருமை சினம் என்பனவால் எழுவதாகவும் இருக்கக் கூடும். இதனை நாம் எளிதாக வெற்றிகொள்ளமுடியும். மனதைப் பலவந்தப்படுத்து வதனுல் இப்பழிக்குரிய பகையை வெற்றி கொள்ளமுடியாது, ஏனெனில் இயல்பாகவே உள்ள வெறுப்புக்கு எப்பொழுதும் நிலைத்திருக்கும் தன்மையுண்டு. எனவே நாம் கையாளக்கூடிய முறை இதுதான் — நாம் வெறுக்கிறவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும். மனந்துணிந்து ஒருமுறை இவ்விதம் செய்யத் தொடங்கி விட்டோமாகில் பின்னர் எளிதாக முன்னேறி விடுவோம்.

நாம் வெறுப்பவர்களுடன் அன்பாகக் கதைக்கவேண்டும் அவர்கள் இல்லாத இடங்களில் அவர்களைப்பற்றி தூற்றிப் பேசாது நன்மையாகவே பேசவேண்டும், இந்தவிதமான போராட்டத்தை இயல்பு வெறுப்புக்கு எதிராக நாம் நடத்தி வருவோமானுல் அது நாளடைவில் வேரறுந்து அழிந்துவிடும்.

## சிறுமியின் வழி சிறந்த வழி

யானறிந்த ஒரு சிறுமி இருந்தாள். இயல்பாகவே அவள் கூச்சப்பட்டவள். அவள் தனிமையாக வெளியே செல்லும் சமயங்களில் தன்பாட்டில் உரக்கப்பேசிக்கொண்டே போவாள். அவளைப்பார்த்தவர்கள் அவளுக்கு சித்தப்பிரமை ஏற்படப்

போகின்றது என்று பேசிக்கொண்டார்கள். அவள் கூச்சம் உள்ளவளாக இருந்தபோதும் அவளிடம் நுண்ணிய உணர்வுகள் இருந்தன. அவளிடம் இதுபற்றி வினவிய பொழுது அவள் சொன்னாள் ''மக்கள் கூடியிருக்கும் இடங்களில் ஒரு வார்த்தை கூட என்னால் துணிந்து பேசமுடியவில்லை. கூட்டங்களில் பேசுவதற்கு எனக்குத் துணிவு ஏற்படவேண்டுமென்பதற்காக இப்படி பயிற்சி செய்துகொள்ளுகிறேன்'' என்றாள்.

இந்தச் சிறுமியிடம் பெரும் திட்டமிருந்தது. இது போன்ற பயிற்சி முறைகளைக் கையாண்டு நாமும் இன்மொழிபேசும் வழக்கத்தை எம்மிடம் ஏற்படுத்தலாம்.

மனிதனிடம் உள்ள கீழான உணர்வுகள் அன்பிற்கு அல்ல பகைமையே சார்ந்து உள்ளன. நம்மை எதிர்ப்பவர்களுக்கு பதில் தாக்குதல் செய்ய எப்பொழுதும் சுடுசொற்களை நாம் ஆயத்தமாக வைத்துள்ளோம். அதற்கான வாய்ப்புக்கள் எப்பொழுது வரும் என்று காத்திருக்கின்றோம். பகை பிரிவினைகளுக்கு என்றும் தயாராகவுள்ளோம். பிறரால் எமக்கு ஏற்படக் கூடிய சிறுமைகளை நாம் வரவேற்கும் வகையே இப்படித்தான்.

## ஒருத்திக்கு மற்றவள் சளைத்தவள் அல்லள்

ஒருநாள் பேருந்து வண்டியொன்றில் இரு பெண்கள் ஒருவரை ஒருவர் எடைபோடுபவர்கள் போல உட்கார்ந்து இருந்தனர்.

ஒருத்தி மற்றவளைப் பார்த்து ''உன் தாலி கோணலாய் இருக்கிறது'' என்றாள்.

மற்றவள் ''உன் மூக்கில் கரும்புள்ளி உள்ளதே'' என்றாள் இப்படிப் பதிலுக்குப் பதில் வார்த்தைகள். இந்த சாதாரண வார்த்தைகள், விட்டுக்கொடுக்காத வாய் வீச்சுக்கள் பகைமைக்கு வித்திட்டு விட்டன.



அந்த முதலாவது பெண் ஏன் வாயைத் திறந்தாள் அவள் மௌனமாக தனது விடயத்தைப் பார்த்துக் கொண்டிருந்திருக்கலாமே.'' ஆலோசனை கொடுப்பதிலும் பார்க்க ஆலோசனை பெறுவதே மேல்' என்று சொன்ன கெம்பிஸின் வார்த்தைகள் தான் எத்தனை விவேகமானவை!

வாழ்வின் உதயம் அன்பிலேயே தோன்றுகின்றது. எல்லோர்க்கும் நாம் அன்பு உள்ளம் காட்டும் பொழுது வாழ்வு ஆரம்பிக்கின்றது. தாழ்ச்சியுடனும் நேர்மையுடனும் மற்றவர்களுக்குச் சேவை செய்யும்போது நம் வாழ்வில் புதுப்பொலிவு தோன்றுகின்றது. மற்றவர்களைப் பற்றி நன்மையாகவும், உயர்வாகவும் எண்ணி அவர்களுக்கு இன்சொல் வழங்கும்போது நமது வாழ்வு பொருள் பொதிந்த வாழ்வாகப் பரிணமிக்கின்றது. நம் வாழ்வில் மனச்சமாதானமும் உள்ளரங்க மகிழ்ச்சியும் பெருமளவில் கிடைக்கின்றன. அப்பொழுதே நாம் பெற்ற வாழ்வை பயனுள்ளதாக ஆக்குகின்றோம்.

# என் மொழி 9

## பிறர் நலன் பேணல்

நீங்கள் உங்கள் வாழ்க்கையை தொடங்குகின்றீர்கள் —

உங்களுக்கு என்று ஒரு குறிக்கோள் இருக்கிறது —

உங்களுக்கு என்று ஏதோ இலட்சியம் இருக்கிறது —

உங்கள் நலனை மட்டுமே கருதிய போக்கு அது —

உங்கள் முன்னேற்றத்தை மட்டுமே மையமாக வைத்த வாழ்வு அது —

ஆனால் அத்தோடு சேர்ந்து —

பிறருடைய தேவைகளைப்பற்றியும் சிந்திப்பீர்களேயாயின் நீங்கள் இரண்டுவிதமான வாழ்க்கையைத் தொடங்குகின்றீர்கள். உங்கள் வாழ்வு பன்மடங்கு பயன் உள்ளதாக மாறுவதுடன் மற்றவர் வாழ்விலும் பங்கு கொள்ளும் பேறு உங்களுக்குக் கிட்டுகின்றது.

உங்கள் வீடு முழுவதும் ஒரே குப்பையாகக் கிடக்கின்றது. மேசை நாற்காலி எல்லாம் தூசுபடிந்துபோய் இருக்கிறது. வீட்டில் ஒருவரும் இல்லாதசமயம் நீங்கள் மட்டும் தனியே நிற்கின்றீர்கள். வெளியேபோய் இருந்தவர்கள் வருமட்டும் ஏதோ செய்ய நினைக்கின்றீர்கள். துடைப்பத்தை எடுத்து கூட்டித்துப்பரவுசெய்து, மேசைநாற்காலிகள் அனைத்தையும் துடைத்துவைக்கிறீர்கள். இப்பொழுது எல்லாம் பளபளப்புடன் 'பளிச்' என்று இருக்கின்றது. வெளியே சென்றிருந்த அம்மாவோ, அப்பாவோ, சகோதரர்களோ வீடு இருக்கும் அழகைப் பார்த்து மகிழ்வு கொள்கின்றனர். அவர்கள் முகம் மலர்வதைப் பார்த்து உங்கள் உள்ளமும் பூரிக்கின்றது.

உங்களுக்குத் தெரிந்த ஒருவருக்கு நல்ல வேலை ஒன்று கிடைத்திருக்கிறது — அல்லது பரீட்சை ஒன்றில் சித்தியடைந்துள்ளார் — அன்றேல் முக்கியமான சேவை ஒன்றிற்காக அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று அறிகின்றீர்கள். நீங்கள் தொலைபேசியில் அவரை அழைத்து வாழ்த்துக் கூறுகின்றீர்கள் உங்களின் நன்மனதைக் கண்டு அவன் உளம் பூரிக்கிறார். அவருடைய மகிழ்ச்சியில் உங்களுக்கும் பங்குகிடைக்கிறது.

புனித சின்னப்பர் அனைத்திலும் எமக்கு முன்மாதிரியாகவும், தூண்டுதலாகவும் விளங்கியவர். நாம் நம்மை மற்றவர்களின் மிதியடிகளாக நினைத்துக்கொள்ள வேண்டும் என்பதே அவரது போதனை. "தொல்லைப்படுவோருடன் நீங்களும் தொல்லைப்படுவது போலவும் வருந்தி உழைப்பவர்களின் உயிர் உங்களின் உடலில் இருப்பது போலவும் உங்களை நினைத்துக் கொள்ளுங்கள்!'' என்கிறார் அவர்.

### பூனை எலியுடன் வந்தது

அன்று என் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சி அதிசயமானதுதான். இன்றுவரை அதை எண்ணும்போது இதயத்தே ஒரு நன்றிப் பெருக்கு சுரக்கவே செய்கின்றது. அந்த அற்ப பிராணியின் அறிவான செயலை அன்பினுக்கும் பிறர் நலன் பேணலுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக எண்ணுகிறேன்.

அப்பொழுது எனக்கு ஐந்து வயது. எங்கள் வீட்டில் ஒரு பூனை இருந்தது. அது அழகிய பெரிய தாய்ப்பூனை. எனக்குப் பிரியமான விளையாட்டுத் தோழி. அதன் பெயர்

'தியாகி' ஒரு முறை எனக்கு ஏற்பட்ட நோயின் காரணமாகப் பல நாள் படுக்கையில் விழவேண்டியதாயிற்று. நான் படுக்கையில் கிடந்தவரை அதுவும் என் காலடியிலேயே சுருண்டு படுத்துக்கிடந்தது. அதன் செய்கை என்மீது அதிக அக்கறைப் படுவதுபோல் தெரிந்தது.

எனக்கு ஒருநாள் வருத்தம் சற்று அதிகமாகவே இருந்தது. சுவாசிப்பதற்குக் கூட மிகவும் சிரமப்பட்டேன். நான் மூச்சு விடுவதற்கு படும் சிரமத்தை 'தியாகி' கண்டுபிடித்து விட்டது. மனிதருக்கு ஏற்படக் கூடிய இத்தகைய மூச்சுத்திணறல் நோய்களை நாய் பூனை போன்ற மிருகங்களுக்கு கண்டுபிடிக்கக் கூடிய ஆற்றல் இருக்கின்றது போலும்!

'தியாகி' வெளியே போய் சிறிது நேரத்தில் திரும்பி வந்தது. அதன் வாயில் ஓர் எலி இருந்தது. வடிவான சிறிய வெள்ளை எலி என்று கூறலாம். 'தியாகி' எனது தலையணை வரை ஏறிவந்து அந்த எலியை நான் சாப்பிடக் கூடியதாக தலையணையில் என் வாய்க்கு அண்மையில் வைத்துவிட்டு காலடியில் போய் நின்று கொண்டது.

தனது அறிவுக்கு எட்டியவரையில் எனது நோய் தீர்க்கும் மருந்தாக ஒரு எலியை 'தியாகி' கருதியதுபோலும். தான் அரும்பாடுபட்டுக் கொண்டுவந்த அந்த உணவை நான் சுவைத்து உண்கிறேனா? அதன்மூலம் எனக்குச் சுகம் கிடைக்கின்றதா என்று கவனிப்பதுபோல் இருந்தது அதன் செய்கை. பிறர் நலனில் அக்கறை கொள்ள வேண்டியதின் அவசித்தைக் கற்பிக்கும் ஆசானாக அது தோன்றியது.

## நாகரிகத்தின் மறைபொருள்

நம்முடைய வாழ்வில் நாம் கொண்டிருக்கும் சிறு சிறு உறவுகளைப்பற்றியெல்லாம் நாம் ஆழமாகச் சிந்திக்கவேண்டும். நமது சிந்திக்கும் பண்பே இவ்வுறவுகளையெல்லாம் தாங்கி நிற்கிறது.



பிறரோடு நாம் கொண்டிருக்கும் தொடர்புகளின்பொருட்டு நாம் செய்யும் பணியில் 95 வீதமானவை வீண்பணிகளாகும். எமது நண்பர்களை நாம் சந்திப்பதும் வாழ்த்துவதும், தினமும் அவர்களோடு உண்பதும் உறவாடுவதும் வெறும் இயந்திரம் போன்றே அமைகின்றது. இந்த இயந்திர உறவுடைய வாழ்வு பயனற்ற மலட்டு வாழ்வாகும்.

பதிலாக சிந்தித்து பிறருக்கு உதவிசெய்து அவர்களை மகிழ்விக்கக்கூடிய வாய்ப்புகளை நாம் தேடிக்கொண்டிருப்போமாகில் உலகினில் ஒருமாற்றத்தை எம்மால் ஏற்படுத்தமுடியும்.

சிந்திக்கும் ஆற்றலை உண்டாக்குவதும், வளர்ப்பதும் எளிதான செயல்களாகும். இதற்கு பெருமுயற்சிகள் எதுவும் செய்யவேண்டிய அவசியமில்லை. இதற்குத் தேவைப்படுவதெல்லாம் கொஞ்சம் சிந்திப்பதுதான்.

எம்மிடமுள்ள சிந்திக்கும் திறன் எமது உருவத்தில் கவர்ச்சியையும் உற்சாகத்தையும் ஏற்படுத்துகிறது. நாகரிகத்தின் உள் இரகசியமும் இதுவே நற்பண்பு எனப்படுவதும் இது தான்.

## பிறர் சிந்தனை உண்டானால் இருக்கவேண்டிய பண்புகள்

பிறர் நலன்பற்றி நீங்கள் சிந்திப்பவரானால் உங்களிடம் இருக்கக்கூடிய பண்புகள்.

பிறரிடம் இரவல் வாங்கிய பொருட்களை அவருக்கும் தேவைப்படும் என்ற எண்ணத்துடன் குறிப்பிட்ட காலத்தில் திருப்பிக் கொடுத்துவிடுவீர்கள்.

உங்களுக்கு வரும் கடிதங்களுக்கு தாமதமின்றிப் பதில் எழுதுவீர்கள். உங்களைப் பற்றிய செய்தியை அறிய ஆவலாய் இருப்பவர்களுக்கு வசதிக்கு ஏற்றபடி அடிக்கடி கடிதம் எழுதுவீர்கள். ஏனெனில் உங்களை அன்பு செய்பவர்களுக்கு உங்கள் கடிதம் பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்குமல்லவா?

பிறர் சிந்தனை உங்களிடம் இருக்குமாயின் நோயாளரைச் சந்திப்பீர்கள். உங்கள் சந்திப்பு அவர்களுக்கு மகிழ்வை அளிக்கும் என்பதை நீங்கள் உணர்வீர்கள்.

வீட்டிலும் அலுவலகங்களிலும் சிடுசிடுப்பதையும் முணு முணுப்பதையும் விலக்கிக் கொள்வீர்கள். ஏனெனில் இந்த முணு முணுப்புகள் அடுத்தவர்களுக்கு சலிப்பைக் கொடுக்கும் என்பது தெரிந்த விடயமே.

அடுத்தவர்க்கு உள்ள அவசியங்களை உண்மையான தேவைகளை மனதில் கொண்டிருப்பதே சிந்தனை உள்ள மனித னுக்கு இருக்கவேண்டிய சிறப்பம்சமாகும்.

## உள்ளத்தை உருக்கும் காட்சி

ஜயரீஸ் எனும் யூதத் தலைவனுடைய படுக்கையறை. அங்கு காணப்படும் முகங்களில் எல்லாம் கவலையின் நிழல். அழுது வடிந்து கொண்டிருக்கும் கண்ணீர்க் காட்சிகள், வெடித்துக் கிளம்பும் விம்மல் ஒலிகள், பன்னிரு வயதுப் பாலகி படுக்கையிலே கிடக்கிறாள். பால் வடியும் அவளது முகம் பாறையாக இறுகிவிட்டது வேரோடு பிடுங்கி எறியப்பட்ட பூங்கொடிபோல் துவண்டு போய்க் கிடக்கிறாள். அவள் உடலில் அசைவில்லை. உயிரில்லை—

அங்கு இயேசு வருகிறார் நோயால் வற்றி மெலிந்து ஒட்டி உலர்ந்து உயிரிழந்த அவள் கரத்தைப் பிடித்து எழுப்பு கின்றார். அச்சிறுமி தூக்கத்தில் நின்று விழித்தவள்போல் துடித்து எழும்புகின்றார்.

அங்கிருந்தோர் அனைவருக்கும் அதிர்ச்சி, ஆனந்தம், பரபரப்பு. உயிர்த்த சிறுமியின் பெற்றோரைச் சூழ்ந்து கொண்டு வாழ்த்துரைக்கின்றார்கள் சிறுமியைக் கட்டி அணைத்து முத்த மிடுபவர்களாகவும் கேள்விமேல் கேள்வி கேட்டு அவளைத் துளைப்பவர்களாகவும் நிற்கின்றார்கள். அவர்கள் பெற்ற அந்தப்



புதிய அனுபவம் அந்தச் சூழ்நிலையில் அனைத்தையும் மறக்கச் செய்தது எனவே முக்கியமான ஒரு விடயத்தையும் மறந்து விட்டார்கள். அந்த ஒரு விடயத்தை நினைத்துக் கொண்டவர் இயேசு ஒருவர்தான், மரணத்தின் பிடியில் நின்று மீண்ட அவளது முகத்தின் வாட்டத்தைக் கண்டுணர்ந்த இயேசு "அவளுக்கு உணவு கொடுங்கள் என்று கட்டளையிடுகின்றார். அவளுக்கு அப்பொழுது தேவைப்பட்டது அதுதான்; அந்த 'உணவு' என்ற சொற்களைக் கேட்டவுடன் எவ்வளவு மகிழ்ந் திருப்பாள் !

## பரந்த நோக்குடையோரின் இயற்கைப் பண்பு

பரந்த நோக்கம் கொண்ட மனதிற்கும், இதயத்திற்கும் சிந்தனையானது இயல்பான பண்பாக இருக்கின்றது. அவனது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் இப்பண்பு துலங்குகின்றது.

சிந்திக்கும் மனிதன் வீதியில் செல்லும்போதுகூட பிற ருக்கு இடர் ஏற்படாத வண்ணம் தான் ஒதுங்கி இடம் கொடுக் கின்றான். மற்றவர் காது செவிடுபடும்படி தனது வாகனத் தின் ஒலிப்பானை அழுத்தி ஓசை எழுப்பமாட்டான். வீதி ஒழுங்கு களைக் கடைப்பிடிப்பான், கண்ணியமுள்ள காரோட்டியாக விளங்குவான்.

எல்லோருக்கும்முன் தான் உணவுபெற வேண்டும் என்று துடிக்கமாட்டான் மற்றவர்களின் தேவைகள் கவனிக்கப்படும் வரை இவன் காத்திருக்கிறான். உணவு விடுதியிலோ கடையிலோ தான் முதலில் கவனிக்கப்படல் வேண்டும் என்று இவன் கேட்ப தில்லை. சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கும் கடைச் சிப்பந்திகளுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் வசதி செய்து கொடுப்பது போன்று இவன் அமைதியைக் கடைப்பிடிப்பான். தனது பெருந்தன்மையான குணத்தால் பிறரின் இடத்தில் தன்னை நிறுத்தி பணிவாக தான் ஒதுங்கிக் கொள்கிறான்.

## இல்லறத்தில் பொறுமையின் அவசியம்

பெற்றோர்கள் விவேகமுள்ளவர்களாக நன்கு சிந்தித்துத் செயல்பட வேண்டும். விலைகூடிய ஆடம்பரப் பொருட்களும், தளபாடங்களுமல்ல, பிள்ளைகளுக்கு நல்ல உணவும், படுத்து தங்க இடவசதியுள்ள வீடும்தான் அவசியம். போதியவருவாய் உள்ளவர்கள் முதலில் பிள்ளைகளுக்கு தேடிக்கொடுக்கவேண்டி யவை இவைதான்.

அறிவாளிகளான பெற்றோர் மாலைவேளைகளை பெரும்பாலும் தமது பிள்ளைகளுடனேயே கழிப்பர் அவர்களின் சிந்தனை முழு வதும் பிள்ளைகள்மீதே இருக்கும், அன்பும், மகிழ்ச்சியும், ஒற் றுமையும் உள்ள குடும்பத்தை உருவாக்குவதிலேயே கருத்தாய் இருப்பர்.

ஒரு குடும்பத்தில் நம்பிக்கை நிலவுமானால்—ஒருவருக்கு ஒருவர் துன்பத்தைப் பகிர்ந்து கொள்ளும் மனப்பான்மை இருக்குமானால்—ஒருவரை ஒருவர் மதித்து வாழும் பண்பு காணப்படுமானால்—ஒருவர் ஒருவருக்கு அன்பு காட்டும் வழக்கம் வளர்ந்திருக்குமானால்—கேட்போருக்கு இல்லையெனாது உள்ள தைக் கொடுத்து உதவும் நற்குணம் உண்டானால் அதன் காரணம் அக் குடும்பத்தின் பெற்றோர்தான். அவர்களின் சிந்தனைக்கு கிடைத்த வெற்றிதான். அப்பெற்றோர் மற்றவர் கள்முன் இணையற்ற இலட்சிய வாதிகள் என்றே கூறமுடியும்.

சிந்தனை எனும் பாடத்தை பிள்ளைகள் பெற்றோரிடம் இருந்து தான் கற்க முடியும். பெற்றோர்கள் இதனைக் கற்பிக் கும் கடமையில் இருந்து தவறினால் பிள்ளைகள் பிற்காலத்தில் இதனைக் கற்றுக்கொள்ள வாய்ப்பே இல்லாமல் போய்விடும். அன்பும் அனுதாபமும் பிள்ளைகளிடம் இருந்தால்தான், பெற் றோரின் தேவைகளைக் கவனிக்கும் குணம் பிள்ளைகளுக்கு ஏற்படும்.

பெற்றோரால் அன்பு ஊட்டி வளர்க்கப்பட்டால் தான் மாலை நேரங்களில் வீட்டில் தங்கியிருக்கப் பிள்ளைகள் விரும்புவார்கள். வீட்டில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை நிலவினால்



தான் பிள்ளைகள் பெற்றோரை மகிழ்விப்பார்கள். ஒரு மகன் தானே வலிய முன்வந்து தந்தையிடம் ''அப்பா நான் உங்க ளுக்கு என்ன உதவி செய்ய வேண்டும்'' எனக் கேட்கும் வார்த் தைகள் எந்தத் தந்தைக்குத்தான் மகிழ்ச்சி பொங்காது? அன்னையின் எல்லா வேலைகளிலும் ஒரு மகள் பங்கு கொண்டு நிற்பாளேயானால் எந்தத் தாய் தான் உவகையில் பூரிக்க மாட்டாள்? குடும்பத்தில் உறுப்பினர்கள் தாமாகவே முன் வந்து ஒருவர் மற்றவரின் தேவைகளைக் கவனிக்கும் பொழுது அக்குடும்பத்தின் முன்னேற்றம் உறுதி பெறுகிறது.

## பண்பாடுள்ள குடும்பத்தின் சிறப்பியல்பு

பண்பாடுமிக்க குடும்பம் ஒன்றிற்கு உள்ள சிறந்த அம்சம் விருந்தோம்புதலாகும். விளக்கமாகக் கூறுவதாகில் விருந் தாளிகளை அன்போடு ஏற்று அவர்கள் தேவைகள் மீது அக்கறை செலுத்துவதுதான். விருந்தோம்பும் பண்பானது ஏற்றத்தாழ்வு களுக்குக் கட்டுப்படாது. ஏனெனில் பசி எல்லோருக்கும் பொதுவானதாகும். ஆகையால் ஏழை, செல்வந்தன் நண்பன், மாற்றான் என்ற வேற்றுமையின்றி எல்லோரையும் அன்புடன் விருந்தோம்ப வேண்டும்.

புனித ஆசீர்வாதப்பர் சபைக்குரிய ஒழுங்கு விதிகளில் ''மடத்து வாசலுக்கு வரும் எவரையும் மனித உருவில் வரும் கிறிஸ்து என நினைத்து உபசரிக்க வேண்டும். ஏனெனில் ஒரு நாள் அவர் நம்மைப்பார்த்து 'நான் அந்நியனைப்போல் வந்தேன் நீங்கள் என்னை உள்ளே கூட்டிச்சென்றீர்கள்' என்பார்'' என்று எழுதப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். அப்போஸ்தலர்களும் தமது பிரயாணங்களின்போது விருந்தோம்பும் பண்பின் அவசி யத்தைக் கண்டு உணர்ந்தனர். ஆகையினாற்றான் அப்பண்பை ஒரு புண்ணியமாகப் போற்றும்படி அவர்கள் நமக்கு அறிவுரை கூறியிருக்கிறார்கள்.

விருந்தோம்பும் பண்பைப் பேணி வளருங்கள். முணுமுணுப்பின்றி ஒருவர் ஒருவரை உபசரியுங்கள் என்று எழுதி வைத்துள்ளனர்.

புனித அருளப்பர் இதன் தெய்வீகத்தன்மையை நன்கு அறிந்திருந்தகாரணத்தால் "விருந்தோம்புதலை மறந்துபோகாதீர்கள். ஏனெனில் பலர் இந்தப்பழக்கத்தினால் தாங்கள் அறியாதமுறையில் வானதூதர்களையே உபசரித்து இருக்கின்றார்கள்" என்கிறார்.

## வருபவர் எவரெனினும் உபசரிக்கவே வேண்டும்

எமது வீட்டிற்கு அல்லது அலுவலகத்திற்கு யாரேனும் வந்தால் அவர் எவராக இருப்பினும் அவரை அன்போடு ஏற்றுப் பேணுதல் வேண்டும். நமது வரவேற்பில் அவர் திருப்தி கொள்ளும்படி நடந்து கொள்ள வேண்டும், மாறாக நாம் சிடுசிடுப்பாக நடந்துகொண்டால் தவறு செய்கின்றோம். நம்மிடம் ஏதோ கேட்பதற்காக அவர் வந்திருக்கக் கூடும். அல்லது வீணே அரட்டை அடிக்க வந்தவராக இருக்கக் கூடும். அவர் எந்த நோக்கத்தில் வந்தவராயினும் அவரை உரியமுறையில் கனம் பண்ணுதல் கடமையாகும்.

விருந்தினர் ஒருவரை உபசரிக்கும்போது எம்மிடம் உண்மையும். உதாரகுணமும் விளங்க வேண்டும். எம்மிடம் உள்ளதில் முதல்தரமானதையே அவருக்குக் கொடுக்க வேண்டும். அவ்வேளையில் 'நாம் இப்படிச் செய்தால் தான் மற்றவர்களும் நமக்கும் இப்படிச் செய்வார்கள்' என்ற எதிர்பார்ப்பு இருக்கக்கூடாது. அப்படிச் செய்வதை விருந்தோம்புதல் என்று கூறுவதைவிட ஒருவித பண்டமாற்று என்று கூறுவதே பொருந்தும். உடைமைகளை எம் உடன் பிறப்புகளுடன் பகிர்ந்து அவர்களை மகிழ்விப்பது போன்று அன்பையும் விருந்தினரோடு நாம் பகிர்ந்து மகிழ்விக்க வேண்டும். எமக்குள்ள செலவுகள், இடர்கள்பற்றி அவர்கள்முன் முணுமுணுக்கவோ, அவர்கள் அறிந்துகொள்ளும்படி நடந்து கொள்ளவோ கூடாது. அப்போஸ்தலர்கள் எமக்குப் போதித்திருக்கும் விருந்தோம்பும் முறை இதுதான். இத்தகைய விருந்தோம்புதலினால் நம் வீட்டிற்கு நல்லாசி கிட்டுகிறது. எமது சிறார்களுக்கு நன் முன்மாதிரிகையாகவும், போதனையாகவும் விளங்குகின்றது.

## நம் நினைவில் முதல் இடம்பெறவேண்டியவர்கள்

நம் நெஞ்சத்தில் நாம் முதலிடம் கொடுக்க வேண்டியவர்கள் யார்?

நம்மீது அன்பை அள்ளிச் சொரிந்து நம்மைக் கடனாளி ஆக்கிவிட்டவர்கள்தான் எமது சிறுவயதுமுதல் எம்மைக் கண்ணெனப் போற்றி வளர்த்த பெற்றோர்கள், உறவினர்கள் நண்பர்கள், எமது வளர்ப்புத்தாய்மார்கள், வேலையாட்கள், ஆசிரியர் ஆகியோரே இவர்கள் தவிர இன்னும் எம்மை அன்பால் அரவணைத்த அனைவரையும் நாம் மறந்துவிடலாகாது.

"இவர்கள் நம்மிடம் எதனை எதிர்பார்க்கிறார்கள்?" என்ற கேள்வியை நம்மிடம் நாம் கேட்டுக்கொள்ளவேண்டும். இவர்களை நாம் செய்யும் அலட்சியமும், புறக்கணிப்பும் அவர்களை மிகவும் மனத்துயரடையச் செய்யும். எமது வாழ்நாள் முழுவதும் நன்றிக்கடன் செலுத்தவேண்டிய இவர்களுக்கு எமது உள்ளத்தின் நன்றி உணர்வு பிரதிபலிப்பதை நாம் வெளிக்காட்டிக் கொள்வதால் எமக்கு எதுவித இழப்பும் ஏற்பட்டு விடாது.

எமது அன்பை தாம் தெரிவிக்கும் பொழுது அதில் அன்பும் மரியாதையும் கலந்திருக்கவேண்டும். எமக்கு உதவி புரிந்த எல்லோருக்கும் எம்மிடம் உதவியையும் அன்பையும் எதிர்பார்க்கும் உரிமையுண்டு. இந்த உரிமைகளுக்கு நாம் மதிப்புக் கொடுக்கவேண்டும். அவர்களுக்கு உள்ள இந்த உரிமைகளை ஒப்புக்கொள்வதும் வெளியரங்கப்படுத்துவதுமே பண்புள்ள மனிதனின் பங்காகும்.

சில மாணவர்கள் வயதுசென்ற தங்களின் ஆசிரியர்களைச் சென்று சந்திப்பார்கள். அவர்களை மகிழ்விப்பதற்காக அடிக்கடி கடிதம் எழுதுவார்கள். தனது மாணவர்கள் மட்டில் எந்த ஆசிரியருக்கும் நீதிக்கு அடுத்த உரிமை எதுவும் இல்லைப் போல் தோன்றினாலும் உண்மையின்படிக்கு உரிமை உண்டு.

இரண்டொரு நண்பர்களை நாம் கொண்டிருப்பதும், அவர்கள் மேல் கொண்டுள்ள அன்பினாலும், அனுதாபத்தினாலும் அவர்களுக்குப் பணிபுரிவதும் உயர்வான செயல்தான். காலம் கடந்த நிலையிலும் நட்பு இன்பம் தருவதாகவும் வளர்ச்சியடைகின்றது. ஏனெனில் நட்பு போதை தரும் ஒரு மதுபானம் போன்றது. சிந்தனை பக்கபலமாக இருந்தால் மட்டும் நட்பு உயிர்பிழைக்கும்.

## உன் நண்பனிடம் எதிர்பார்ப்பதை நீ அவனுக்குச் செய்

துன்பங்கள் என்னைச் சூழும் வேளையில் நான் எனது நண்பனிடம் எதனை எதிர்பார்க்கிறேனோ அதே போன்று அவனது துன்பவேளையில் அவனும் என்னிடம் எதிர்பார்க்கின்றான். நான் அவனுக்கு ஆறுதல் சொல்ல வேண்டாமா? கடிதம் எழுத வேண்டாமா? அவனுக்குத் தேவைப்படும் உதவியைச் செய்ய வேண்டாமா? தான் இதுபற்றிச் சிந்திப்பதுண்டா? தருணத்திற்குத் தக்கபடி விவேகத்துடன் நடந்து கொள்கின்றேனா? நானும் கண்ணியவான்தான் என்று கூற முடியுமா?

முதுமை வந்தவுடன் பெற்றோரின் பெருங்குணங்கள் மறைந்து விடுகின்றன. சிடுசிடுப்பும், முணுமுணுப்பும் அவர்களிடம் குடிகொண்டு விடுகின்றன. தங்கள் பிள்ளைகளிடம் இருந்து அதிகமாக எதையோ எதிர்பார்க்கிறார்கள். நரை விழுந்த முடியும், நடை தளர்ந்த நிலையும், முற்றி மூட்டுப் பிசகிய எலும்புகளும் அவர்கள் ஞானத்தையும் பொறுமையையும் ஊசலாடப் பண்ணுகின்றன. எதையும் பற்றோடு சுவைக்கும் அன்பு அவர்களிடம் இப்பொழுது இல்லை. இந்நிலையிலும் பிள்ளைகளின் கடமை என்ன. அவர்கள் பிள்ளைகளிடம் எதிர்பார்க்கும் உரிமைகளை பிள்ளைகள் அவர்களுக்கு வழங்கவேண்டும். எப்பொழுதும் அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கப் பிள்ளைகள் முயற்சிக்க வேண்டும். அவர்களிடமிருந்து முகத்தைத்திருப்பிக் கொண்டுபிள்ளைகள் அவர்களைப் புறக்கணிக்கக்கூடாது.



## நீதியான முறைப்பாடுகளுக்கு காது கொடுக்க வேண்டும்

நாம் பிறர் நலன் பேணும் சிந்தனையுள்ளவர்களானால் மற்றவர்கள் செய்யும் நீதியான முறைபாடுகளுக்குச் செவி சாய்ப்போம். ஏனெனில் அவர்களின் முறைப்பாடுகளில்; மற்றவர்களின் மனதைப் புண்படுத்தும் நமது செயல்களும், இரக்க மற்ற தன்னலப் போக்குகளும் சுட்டிக்காட்டப்படலாம்.

கணவனது ஒழுங்கீனமும், ஊதாரித்தனமும் தன் மனைவிக்கு எவ்வளவு துன்பத்தைக் கொடுக்கும் என்பதை கணவனை விட மனைவியே நன்கு அறிவாள். கணவனுடைய நடத்தையை மனைவி கவனிப்பது போன்று கணவன் தன் நடத்தையை தான் கவனிக்க மாட்டான். தான் தன் மனைவியில் அன்புள்ளவன், அவளது இன்ப துன்பங்களில் அக்கறையுள்ளவன் என்றே அவன் நினைக்கின்றான். அப்படியிருந்தும் அவன் திருந்த வேண்டும் என்று அவள் எழுப்பும் குரலுக்குக் கணவன் செவி சாய்க்க வேண்டும். அவ்விதம் குரல் எழுப்பும் உரிமையும் அவளுக்கு உண்டு கண்ணியம் மிக்க கணவனாக இருப்பானாயின் மனைவிக்கு. உள்ள இந்த உரிமையை அவன் ஏற்றுக் கொள்வான். இதுவே சிந்திக்கும் திறனாகும்.

சிந்தனையற்றவன் தான் தப்பிக்கும் பொருட்டுக் கையாளும் வார்த்தை "மறந்து போனேன்" என்பதாகும். தாய், மனைவி அல்லது பிள்ளையின் பிறந்த நாள் வருகிறது வாழ்த்து அனுப்பவோ, பரிசு வாங்கவோ மறந்து விடுகிறான். அல்லது அன்றையதினம் வீட்டுக்கே வராமல் இருந்து விடுகிறான்.

வழக்கமாக வேலைக்குப் போகுமுன்னர் தனது அன்புக் குழந்தைக்கு முத்தமிட்டுச் செல்வதற்கும் மறந்து விடுகிறான்—

ஒருவருடைய கையிலே காயம் ஒன்று உண்டு என்று அவனுக்கு நன்கு தெரியும். இருந்தும் அந்த இடத்தில் தட்டியோ இறுக்கிப் பிடித்தோ விடுகிறான். எதிலும் எப்பொழுதும் இவனுக்கு மறதிதான். சிந்தனை அற்றவனின் செயல்கள்.

### இரண்டொருவரைப் பற்றித்தான் நினைக்க வேண்டும் என்பதில்லை

நாம் மிகவும் நேசிக்கும் இரண்டொருவரைப்பற்றி மட்டும் நினைப்பது போதாது. எல்லோரைப் பற்றியுமே சிந்திக்க வேண்டும். நமக்குத் தெரிந்தவர்கள், அருமையானவர்களான அனைவருக்கும் கருணைகாட்டி மரியாதையுடன் பழக வேண்டும்.

நாம் ஒருவர்மீது நல்லெண்ணம் கொண்டு மரியாதை காட்டி உறவாடும் பொழுது அவர் மட்டில் நாம் மெய்யான சிந்தனையுடையவர்களாய் இருக்கிறோம். வாழ்க்கை எனும் பந்தயத்திடலில் முக்கிய இடம் பெறுவது அன்பேயாகும். ஒரு நற்செயலைச் செய்யும்படி நம்மைத் தூண்டிவிடும் கிறித்தவ அன்பே அந்தச் செயலின் பெறுமதியைக் கூட்டி அதற்குச் சாகாவரமும் கொடுக்கிறது. கிறிஸ்துவிற்காக, அவருடைய மனப்பான்மையுடன் செய்யப்படும் நற்பணியானது முழு உலகிலும் கிளைபரப்புகிறது அது எப்படிக் கிளைபரப்புகிறது என்பதை நம்மால் சொல்ல முடியாது. வேறு பல நற்செயல்களுக்கும் இது வழிகாட்டி விடுகிறது. பெற்றுக் கொண்டவர்களுக்கும் அதை அறிந்தவர்களுக்கும் உள்ளக் கிளர்ச்சியை உண்டாகிவிடுகிறது.

மக்தலேனாள் அன்பினாலும், மரியாதையினாலும் ஆண்டவரின் பாதங்களைக் கழுவினாள். நற்செய்தி போதிக்கப்படும் இடமெல்லாம் உலகம் முடியும் வரை இந்தச் செயலும் வாசிக்கப்படும்.

கிறிஸ்துவின் நிமித்தம் நாம் செய்யும் ஏனைய அன்புப் பணிகளும் இதேமாதிரியான மதிப்பையும் சாகாவரத்தையும் பெற்றே தீரும் ஆகையால் பிறர் சிந்தனையுள்ளவர்களாக இருப்பதே எமக்கு மேன்மை தருவதாகும்.



# என் மொழி 10

## உதவுதல்

### எப்பொழுதும் ஆயத்தமாக இருப்பவன்

ஒருவருக்கு உதவி ஒன்று தேவைப்படுகிறது —

ஓடி ஒழியமாட்டான் —

ஒன்றும் தெரியாதவனாக நடிக்கமாட்டான் —

திடீரென்று என்ன செய்வது என்று கூறமாட்டான் —

பிறகு பார்போம் என்று தட்டிக் கழிக்கமாட்டான் —

இதில் நான் தலையிட்டால் எனது கதி என்ன ஆவது என்று சிந்திக்க மாட்டான் —

தானாகத் தேடிக்கொண்டதற்கு மற்றவன் என்ன செய்ய முடியும் என்று கேட்கமாட்டான்.

உதவி புரியும் பண்பு உள்ள ஒருவன் எங்கும், எப்பொழுதும், எந்நிலையிலும் பிறருக்கு உதவிக்கரம் நீட்ட ஆயத்தமாக இருக்கிறான்.

''இவனுக்கும் உதவவேண்டியுள்ளதே'' எனும் வேண்டா வெறுப்புடன் உதவமாட்டான். முன்பின் வினைவுகளைச் சிந்தனை செய்யாது ஊக்கத்துடன் உங்கள் முன் வந்து நிற்கின்றான்.

நீங்கள் எதையோ தேடுகின்றீர்கள் அவனும் கூடவே உங்களுடன் தேடுகின்றான். அல்லது அதே பொருள் தன்னிடம் இருக்கின்றது என்று கூறி உங்கள் தவிப்பைத் தணிக்கின்றான்.

ஒருவேலையை அவசரமாக முடித்தாகவேண்டும் என்று நீங்கள் அவதிப்படுகின்றீர்கள். அவனிடம் உதவி கேட்கிறீர்கள் ''எனது வேலை முடிந்ததும் வருகின்றேன்'' என்ற வார்த்தை அவனிடமிருந்துவராது. தன்னுடைய முக்கியமான அலுவலையும் நிறுத்திவிட்டு உங்களுக்கு உதவ ஓடி வருகிறான்.

எஜமானின் காலடி ஓசையைக் கேட்டவுடன் வாலைக் குழைத்து ஓடிவரும் நன்றியுள்ள நாயைப்போன்று உதவிபுரியும் பண்புள்ளவனும் உங்களுக்கு தேவையான பொழுதெல்லாம் மகிழ்ச்சியோடு உதவிசெய்ய ஆயத்தமான நிலையில் இருக்கிறான்

## எல்லோருக்கும் பொதுவான வேலைகள்

சமூக வாழ்வில் என்ன. குடும்ப வாழ்வில் என்ன எல்லோருக்கும் பொதுவான வேலைகள் பல உண்டு. தத்தமது கடமைகளைச் செய்வதோடு இருந்து விடுபவர்களும் உண்டு. ஆனால் எல்லோருடைய வேலைகளையும் தானே செய்து முடிப்பவர்களும் இருக்கின்றனர்.

ஒழுங்கற்று இருப்பனவற்றை ஒழுங்கு படுத்துதல். தேவையானவற்றை புதிதாக வாங்கிப் போடுதல் போன்றவை எல்லோருக்கும் பொதுவான வேலைகள் தான். எனினும் எல்லாவற்றிலும் இவர்களது பங்களிப்பு இருக்கும் நாம் பெரிதும் கடன்பட்டு இருக்கும் இந்த நல்லவர்கள் எப்பொழுதும் ஓய்ந்து விடுவதில்லை. சில தருணங்களில் நீங்களே இவர்களைப் பார்த்து ''நான் உன்னை என்ன செய்ய ?'' என்று அன்போடு கடிந்து கொள்கிறீர்கள்.



உதவி புரியும் பண்பு உள்ளவன் எல்லோருக்கும் ஊழியனாகவும் அன்பிற்கும் இரக்கத்திற்கும் உறைவிடமாகவும் விளங்குகின்றான். பொது நன்மைக்காக பாடுபடும் நன்மனம் கொண்ட இவர்களைக் காணும்போது தன்னலவாதிகளாகிய நாம் நமது தன்னலத்தைப் பற்றியும், சோம்பலைப் பற்றியும் வெட்கப்பட வேண்டும்.

பிறருக்கு உதவி செய்வதற்கு அறிவோ, அழகோ, பணமோ எதுவும் தேவையில்லை. நமக்குத் தேவைப்படுவது அன்பு ஒன்றுதான். எப்போதும் உதவி புரியும்படி நம்மைத் தூண்டி விடும் சித்தம், அதற்கு ஆயத்தமாக இருக்கும் மனம், இவற்றிற்கு இசைவான உள்ளக் கனிவு எல்லாம் அன்பில் இருந்தே பிறக்கின்றன.

முதுமை அடையும்போது உதவிபுரியும் குணமும் தளர்ச்சி அடைகிறது. எனினும் நரைவிழுந்து வலிமை இழந்துவிட்ட நிலையிலும் நல்லதைச் செய்து நன்மையைப் பகிர்ந்துகொள்ள மறக்காதவர்கள் பலர் நம்மிடை இருக்கவே செய்கிறார்கள். பிறருக்கு உதவும் தன்மையை எம்மிடம் நாம் ஒருமுறை உருவாக்கி விட்டோமானால் பின்னர் ஒருபோதும் அது நம்மை விட்டு அகலாது நமது உள்ளம் கடினப்படா வண்ணம் காப்பதும் இப்பண்புதான்.

## நாம் எவ்வளவு நன்மை செய்ய முடியும்

அருட்திரு. ஜேம்ஸ் கெவர் என்பவர் எழுதிய ''உலகை மாற்றும் உங்கள் பணிகள்'' (Careers that change the world) எனும் நூலில் இளைஞன் ஒருவனைப் பற்றிக் கூறுகிறார். ஒரு முறை அவன் கடும் நோய்க்கு உள்ளாகி இருந்த பொழுது ஒரு சபதம் செய்து கொண்டான் 'என் துன்பங்களைப் பொருட்படுத்தாமல் மற்றவர்களுக்கு உதவி புரிவேன்' இதுவே அவன் எடுத்துக் கொண்ட தீர்மானம். அவன் நலமடைந்தவுடன் தன் முடிவின்படி மிக உற்சாகமாக இயங்கி வந்தான். சமூகப்

பணிகளில் ஊக்கமாக ஈடுபட்டான். 'நோயுற்று இருந்த நாட்களில் நான் ஒரு மனிதனுக்கே உதவி செய்து வந்ததுபோல் தினமும் ஒரு மனிதனுக்கு உதவினாலும் நான் முதுமை அடைந்த பொழுது ஆயிரம்பேருக்கு உதவி செய்திருப்பேன் இறைவன் எனக்குச் செய்த எல்லா உதவிகளுக்கும் நான் காட்டக்கூடிய நன்றி இதுதான்' என்றே அவன் உங்களுக்குச் சொல்லுவான்'' என்கிறார்.

நீங்கள் செய்யும் உதவி சிறியதாக இருக்கலாம். ஆனால் பெற்றுக் கொண்டவர்களுக்கு முக்கியமானதாக இருக்கும். முரட்டுக் காளைமாட்டை வண்டியிற் பூட்டுவதற்கு நீங்கள் உதவி செய்கின்றீர்கள். மூட்டை முடிச்சுகளுடன் கடுகதிப் புகை வண்டியில் ஏறக் காத்திருக்கும் ஒருவருக்கு வண்டி வந்ததும் விரைவில் அவர் பொருட்களுடன் வண்டியில் ஏறுவதற்கு உதவி செய்கின்றீர்கள் இவைபோன்ற சிறு உதவிகளினாலேயே ஓர் உயிரையே காப்பாற்ற முடியுமல்லவா?

மயக்கம் அடைந்த ஒருவருக்கு நீங்கள் ஒரு குவளைத் தண்ணீர் கொடுக்கிறீர்கள்,—

எழுதத் தெரியாதவனுக்கு நீங்கள் எழுதிக் கொடுக்கிறீர்கள்—

உங்களுக்குப் பக்கத்தில் நின்று தூண்டில் போடும் ஒருவனுக்கு நீங்கள் தூண்டிலில் போடும் இரை கொடுத்து உதவுகின்றீர்கள், இவைபோன்ற இன்னும் சிறு உதவிகளை உங்கள் அயலவருக்குச் செய்கின்றீர்கள். கருணையுடன் இயேசுவின் பெயரால் நீங்கள் இவற்றைச் செய்யும்போது இவை உங்கள் நித்திய வாழ்வுக்கு உரியவையாகின்றன,

## புகைவண்டியில் ஒரு புது அனுபவம்

அல்பேட் ஸ்குவிட்சர் எனும் ஜேர்மானியப் பேராசிரியர் ஒருவர் ஒருமுறை புகைவண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவர் பயணம் செய்த பெட்டியில் ஒரு கிராமப் புறத்துக் கிழவனும் கல்லூரி மாணவன் ஒருவனும் இருந்தனர்.



வண்டி குறிப்பிட்ட பட்டணத்தை வந்தடைந்தபோது நன்றாக இருட்டி விட்டது. கிழவனுக்கோ பட்டணம் புதிது. நேரமோ இருட்டு அதே பட்டணத்தில் உள்ள வைத்திய நிலையம் ஒன்றில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கும் மகனை, அவன் இறப்பதற்கு முன்னர் எப்படிப் போய்க்காண்பேன் என்று சொல்லிப்புலம்பிக் கொண்டிருந்தான். அவனது பெற்ற மனம் துடித்துக் கொண்டிருந்தது. மகனைப் பற்றிய செய்தியடங்கிய தந்தியும் அவனிடம் இருந்தது. உடனே அந்த மாணவன் ''ஐயா நான் இந்தப் பட்டணத்தை நன்கு அறிவேன். நான் உங்களுடன் இறங்கி அந்த வைத்திய மனைவரை வந்து இடத்தைக் காட்டுகின்றேன். அடுத்த வண்டியில் நான்போகவேண்டிய இடத்திற்குப் போய்க்கொள்வேன்'' என்றான் அந்த நல்ல இளைஞன். எத்தகைய மன அருட்சியூட்டும் நிகழ்ச்சி இது. உண்மையான உதவிபுரியும் பண்பு இதுதான்.

ஒருமுறை இருமுறையல்ல பலதடவைகளில் நமக்கு பிறர் உதவி தேவைப்படுகின்றது நாம் எதிர்பார்த்த உதவி பிறரால் எமக்குக் கிடைக்கும்போது பிறர் அன்பின் ஆழத்தை நாம் கண்டுபிடிக்கிறோம்.

## அன்பின் இரு விழிகள்

பிறர் சிந்தனையும், பிறருக்கு உதவுதலும் அன்பின் இரு விழிகளாம். இரண்டும் எங்கும் இணைந்தே செல்லுகின்றன. இவ்விரு பண்புகளும் ஒன்றையொன்று நிறைவு செய்கின்றன. பிறர் நலனில் நமக்கு அக்கறை இருந்தும் நாம் அவர்களுக்கு உதவாவிட்டால் என்ன பயன்? அது போக வாஞ்சைமிகுதியால் முன்பின்யோசியாமல் உதவி செய்வதிலும் விபரீதங்கள் விளைவதுண்டு.

உதவி செய்வதில் அவதியும், பரபரப்பும்கொள்கிறவன் தான் தேவைப்படாத அலுவல்களிலும் தலையிடுகின்றான். பிறருக்கு உதவிட நாம் தீவிரமாக நிற்கும் அதேவேளையில் நம்மிடம் தாழ்ச்சியும் வேண்டும்.

எங்கள் தகைமைக்கு மீறிய வேகத்தாலும் பரபரப்பாலும் நன்மைக்குப் பதிலாகக் கேடுவிளைவிக்கக்கூடிய வாய்ப்புகளும் ஏற்படும். இதனை நாம் எப்பொழுதும் கவனத்தில் கொள்ளுதல் அவசியமாகும். இல்லையேல் நம்முகத்தில் நாமே கரிபூசிக் கொண்டது போலாகிவிடும்.

## மயங்கி விழுந்தவன் எதிரியானான்!

துயர் துடைக்கப்போய் தொடைதெறிக்க நான் ஓடிய சம்பவம் ஒன்று நினைவுக்கு வருகிறது. இது ஒரு கசப்பான அனுபவம்தான். இந்த அனுபவம் புகைவண்டி நிலையத்தில் எனக்குக் கிடைத்தது. எனது நோக்கம் மட்டும் நல்லதாய் இருந்தால் போதாது அதனைச் செய்வதற்கு எனக்குத் தகுதியும் வேண்டும். அன்றுநான் என் தகுதிக்குமீறிய செயலைத்தான் செய்துவிட்டேன்.

புகைவண்டி மேடையில் கூட்டமாக இருந்தது. திடீரென ஒரு மனிதன் மயங்கி விழுந்தான். பலவீனம் காரணமாக அவன் விழுந்திருக்க வேண்டும் என நான் நினைத்தேன் ஆனால் ஆளோ பெரிய தடியன். அவன் மூச்சுவிடுவது பலமாகக் கேட்டது.

சில அடிகள் தள்ளி ஒரு வாளி நிறையத் தண்ணீர் இருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் 'நான்தான் செயல்வீரன்' எனும் நினைப்பு எனக்கு. அந்த ஒருவாளி தண்ணீரையும் கவிழ்த்து அவன் தலையில் கொட்டினேன்.

நான் செய்ததற்குப் பலன் உடனடியாகக் கிடைத்தது. அவன் உடனே துள்ளி எழுந்தான். அங்கு நின்ற எல்லோருக்கும் அடிக்கத் தொடங்கினான். நான் உதவிய மனிதன் விலங்காக மாறி ஆட்டம் போட்டுக்கொண்டிருந்தான்.

நானோ தலைதெறிக்க ஓடினேன் மேற்கொண்டு உதவுவதற்கு என்னிடம் துணிவு இல்லை. இவனது ஆர்ப்பாட்டத்தைக் கண்டு அருகே நின்ற காவற்றுறையினர் வந்து மதுபோதையில் நின்ற அந்த முரடனை மடக்கிப் பிடித்து அழைத்துச் சென்றனர்



''உங்கள் செருக்கினால் நீங்கள் அறிவாளிகள் என்று கருதாதீர்கள்'' என்கிறார் புனித சின்னப்பர் ஆனால் அந்தச் சமயம் இந்தப் போதனையை நான் அறிந்திருக்கவில்லை.

## மருந்து அறியா மருத்துவர்கள்

பிறர் நோயால் வருந்துகின்றனர் அந்தவேளையில் அவருக்கு வேண்டிய உதவியை நாம் செய்யத்தான் வேண்டும். ஆனால் நாம் அறிந்தவற்றையெல்லாம் அவர் நோய்க்கு மருந்தாகக் கூறக்கூடாது. ஏனெனில் மனிதனின் நெஞ்சத்தில் இருக்கும் அன்புக்கு மருத்துவம் செய்யும் அறிவு திடீரென்று ஏற்பட்டு விடுவதில்லை. இரக்கம் முன்சிந்தனை இல்லாததாக இருந்தால் ஆளையே கொன்று விடுகிறது.

எனக்கு ஒரு நண்பர் இருந்தார். நல்ல கல்விமான். ஆனால் ஏழை. கடுமையான இருதய நோயினால் படுக்கையில் வீழ்ந்தார். நெடுங்காலம் படுக்கையிலே கிடந்து துன்பப்பட்டார்.

அவர்களுடைய உறவினர்களில் ஒருவர் அவர் ஓய்வு பெற்ற புகைவண்டி நிலைய அதிபர் மிக்கி என்பது அவருடைய பெயர். மிக்கி கள்ளம் கபடில்லாத வெள்ளை உள்ளத்தவர். என்னுடைய நண்பருக்கு வஞ்சகம் இல்லாமல் உதவி செய்வார். முன்னாட்களில் தனது உணவைத் தானே சமைத்து உண்டு பழக்கப்பட்டவர். அவர் தனக்குப் பிடித்தபடி இறைச்சி கலந்த ஒருவித உணவைத் தயாரிப்பார் அதற்கு 'புகைவண்டிக் காரனின் புக்கை' என்றும் பெயர் வைத்தார்.

ஒருநாள் நான் எனது நண்பனின் கட்டில் அருகில் நிற்கும்பொழுது தான் தயாரித்த அந்த உணவை மிக்கி என் நண்பனுக்குக் கொண்டு வந்தார். அதில் ஆவி பறந்து கொண்டிருந்தது. எனது நண்பர் அதிகம் சாப்பிடமாட்டார் என்பதை மிக்கி அறிவார். ஆயினும் ஒரு தட்டு நிறைய இட்டுச் சாப்பிடும்படி கட்டாயப்படுத்தினார். அவன் சாப்பிட்டால் உலகளவு பயன் கிட்டும் என்று அளந்தார்.

எனது நண்பரும் அதனை வாங்கிச் சாப்பிட்டார். பாவம் அன்றிரவு அப்பாவியான எனது நண்பர் இறந்துவிட்டார். எந்த இடத்திலும் எவருக்கும் உதவி செய்வதற்கு நாம் பின் நிற்கக் கூடாது. ஆனால் பணிவிடை செய்தாலும் சரி, பரிகாரம் செய்வதென்றாலும் சரி தாழ்மையுடனும் விவேகத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். எமது சொந்தக் கருத்தில் நாம் அளவுக்கு மிஞ்சிய நம்பிக்கை வைக்கக்கூடாது. ''அறிவுரையைக் கேட்டு அதன்படி நடப்பது மேல்'' எனும் தோமஸ்கெம்பிசின் கூற்றை என்றும் மனதில் பதித்துக் கொள்வோம்.

## மிகப்பெரிய உதவி

பிறருடைய அலுவல்களில் நாம் தலையிடாது ஒதுங்கிக் கொள்வதே அவர்களுக்கு நாம் செய்யும் பெரும் உதவியாகத் தோன்றும்.

சுறுசுறுப்புடன் சமைத்துக் கொண்டிருக்கிறாள் உங்கள் மனைவி அவளுக்கு உதவி செய்வதற்காக நீங்கள் சமையற் கட்டினுள் செல்லுகிறீர்கள் ''எனக்கு உதவி செய்ய விரும்பினால் நீங்கள் வெளியே போய்விடுங்கள்'' என்று அவள் சில வேளையில் சத்தமிடுவாள்.

விருந்து நிகழ்ச்சிகளில் சிலர் பந்திபரிமாறுவதற்கு தாங்களாகவே முன்வருவர். பின்னர் தங்கள் வேடிக்கையான சேட்டைகளினால் அனைத்தையும் கெடுத்துவிடுவார்கள்.

அன்பை முன்னிட்டு செய்யவேண்டியவையும் உள்ளன விலக்கவேண்டியவையும் உள்ளன. இவ்விதம் விலக்கவேண்டியவற்றுள் முக்கியமானது நமது பண்பாடு இல்லாத கோமாளித் தனங்கள். இவற்றால் நாம் பிறருக்குத் தொல்லை கொடுப்பதை நிறுத்த வேண்டும்.

நீங்கள் வழக்கமாகத் தொல்லை கொடுக்கும் ஒருவருக்கு தொல்லை கொடுக்காமல் விடும்பொழுது அவருக்கு உதவி செய்கின்றீர்கள்.



அழைப்பு மணியை அடிக்கடி அடித்து அடுத்தவரை அழைக்கும்போது உங்கள் தேவைகளுக்காக அடுத்தவரை நச்சரிக்கின்றீர்கள். இப்படியான சமயங்களில் உங்கள் தேவைகளை வெளியிடாமல் பிறருடன் பரிவாக நடப்பதற்கு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. புனித சின்னப்பர் தாம் மற்றவர்களுக்குச் சுமையாக இருக்க விரும்பவில்லை. தமது வேலைகளைத் தாமே கவனித்து வந்தார் மற்றவர்களின் சுமையைத் தம்மேல் சுமந்து கொண்ட அவர் மற்றவர்களுக்குத்தாம் சுமையாக இராதபடி பார்த்துக்கொண்டார்.

தானே உழைத்து தனது பாடசாலைத் தேவைகளை பூர்த்தி செய்யும் மாணவன் பெற்றோருக்கு உதவி செய்கிறான் தனது தேவைகளைக் கவனித்துக்கொள்ளும் மாணவியும் அப்படியே.

அன்பின் நிமித்தம் அனைத்தையும் பொறுத்துக்கொள்வதே மேலான வாழ்வின் சிறப்பான பங்காகும் வாழ்வின் வழியும் இதுவே!

---

# என் மொழி 11

## வாழ்வு அன்புடன் தொடங்குகிறது

வாழ்வின் தொடக்கம்?

வாழ்வின் ஆரம்பம்?

வாழ்வின் உதயம்?

வாழ்வின் தோற்றம்?

என்று? எப்பொழுது?

வாழ்வு அன்புடன் தொடங்குகின்றது என்பதற்கு எடுத்துற் காட்டாக விளங்குவது இராயப்பர் சின்னப்பர் ஆகியோரின் மறுபிறப்புகள் தான். தங்களின் உடன் மனிதரை நேசிக்க வேண்டும் என்று இயேசு அவர்களுக்குப் போதித்தார். அந்தப் போதனையை அவர்கள் கடைப்பிடிக்கத் தொடங்கிய அன்று முதல் அவர்கள் புதுப்பிறவி எடுத்தார்கள், அன்றுதான் அவர்கள் வாழ்வு ஆரம்பமானது.



### இராயப்பரின் ஆரம்ப நாட்கள்

இராயப்பர். இவரைப் பற்றிய செய்திகளை, குண இயல்புகளை நற்செய்தி நூலின் மூலம் நன்கு அறிவோம் அவர் ஒரு அவசரப் புத்திக்காரன் பதட்டப்பட்டு அனைத்தையும் கெடுத்துவிடும் ஒரு வீண் மனிதன் பயம் வந்தால் கோழையாகி விடுவார். சமயத்தில் பிறர் அலுவல்களில் தலையிடுபவர். மற்றவர்களை அதட்டி மிரட்டும் குணமும் இவருக்கு உண்டு சுருங்கக் கூறின் இவர் அன்போ இரக்கமோ இல்லாத ஒரு முரட்டு மீனவன்.

### சின்னப்பர்

இராயப்பரை விஞ்சிய முரடன் கோபமும், தற்பெருமையும் மிகுந்தவர். கல்வி அறிவு இருந்தது, கருணையற்ற தன்மையும் இருந்தது பொறுமை இவருக்கு வெகுதூரம், இரக்கமோ இவரிடம் மருந்துக்கும் கிடையாது—இவரோ ஒரு முரட்டுத் தீவிரவாதி.

### தெரிவு செய்யப்பட்டது ஏன்?

திருச்சபையை உருவாக்கும் கருவிகளாக இயேசு இவர்களைத் தெரிந்து கொண்டார். ஏன்? எம்மிடம் இயல்பாக எழும்பக்கூடிய கேள்விதான். அவர்கள் அன்புக்கு அடிமையாவார்கள். அன்பு அவர்களைப் புதிய மனிதர்களாக்கும். அவர்கள் அன்பின் வழியில் புதிய வாழ்வு வாழ்வார்கள் என அவர் அறிந்திருந்த படியாற்றான். அதன் படியே ஒருவர் ஒருவரை நேசியுங்கள் என்ற இயேசுவின் போதனைப்படி வாழ்ந்தார்கள். புது இயல்பு தலைதூக்கியது. புதுப்பிறவி எடுத்து புதுமனிதர்களானார்கள்.

பிரமாணிக்கம், நல்லொழுக்கம், ஊக்கியமனம், ஈகை என்பன இராயப்பரிடமும், சின்னப்பரிடமும் இருந்த பிறவிக் குணங்கள்தான். ஆனால் அவர்கள் அவற்றை வளர்க்கவில்லை. அதன் பொருட்டே அவர்களது ஆரம்பகால வாழ்வு மேன்மையானதாக இருக்கவில்லை. இயேசு அவர்களை அழைத்ததின் பின்னர்தான் அஃது அவர்களை ஆட்கொண்டது. திருச்சபையை உருவாக்கி ஆண்டு நடத்தும் திறனையும் அன்பின் மூலம் பெற்றுக் கொண்டனர்.

## அவர்களில் நிகழ்ந்த மனித மாற்றங்கள்

ஆன்மீக வாழ்வின் மட்டில் அவர்கள் இயேசுவை நெருங்கிச் சென்றார்கள். இயேசு அவர்களில் வாழ்ந்தார். அவர்கள் இயேசுவால், இயேசுவிற்காக, இயேசுவில் வாழ்ந்து வந்தனர். சில மனிதர்கள் புனிதம் அடைந்ததுபோல் அவர்களும் புனிதமடைந்தார்கள். ஆனால் இங்குநாம் கவனிக்கவேண்டியது அவர்கள் புதிதாக நடத்திய மனித வாழ்வையே.

தங்கள் உடன் மனிதரின் ஆன்ம சரீர நன்மைகளுக்காக விரத்தியாகங்கள் பலவற்றைப் புரிந்தார்கள். அடுத்தவர் மட்டில் அன்பும், கருணையும், பற்றும் மிகுந்த வாழ்க்கை நடத்தினார்கள். புதிய இராயப்பர் அஞ்சாமை, பொதுநலநாட்டம், ஈகை ஆகியவற்றைக் கொண்ட தலைவராகத்திகழ்ந்தார். சின்னப்பரோவெனில் அறிவுக் களஞ்சியமாக, அன்பின் சுரபியாக பிறர் நலமே கருத்தாகக் கொண்டு எப்பொழுதும் வாழ்ந்தார்.

## புதிய இராயப்பர்

அன்பு இவரை முற்றிலும் புதிய மனிதனாக மாற்றியிருந்தது. திருச்சபையின் ஆட்சிப்பொறுப்பை இராயப்பர் ஏற்றகாலத்தில் விசுவாசிகள் எல்லோரும் ஏழைகளாய் இருந்தார்கள். இயேசுவைப் பின்பற்ற அவர்கள் பயந்து நடுங்கி



னார்கள். அவர்களுக்காக இராயப்பர் பல அறநிலையங்களை நிறுவினார். பணக்காரர்கள் தங்கள் சொத்துக்களை ஏழைகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் எனப் போதித்தார். மக்களும் அவர்கள் விரும்பியது போல் செய்தார்கள்.

கிறிஸ்துவைப் பின்பற்றிய ஆண்களும் பெண்களும் அப்பங்களைப் பிட்டு தங்கள் அயல்வீட்டில் உள்ளவர்களுடன் பகிர்ந்து உண்டார்கள். மகிழ்ச்சியுடனும் கபடமற்ற உள்ளத்தோடும் தாங்கள் அன்றாட உணவைப் பங்கிட்டுக்கொண்டார்கள். அவர்களுக்குள் எவ்விதமான குறையும் இருக்கவில்லை. ஏனெனில் ஒவ்வொருவரினதும் தேவைக்கு ஏற்றபடி எல்லாம் அவர்களுக்குப் பகிர்ந்து கொள்ளப்பட்டது. இந்தப் பணிக்காகத் தாம் தியாக்கோன்மாரை நியமிக்கும்வரை இராயப்பரே அப்பணிகளை மேற்கொண்டு வந்தார். ஏனெனில் புதிய இராயப்பர் மற்றவர்களின் தேவைகளையே மனதில் கொண்டிருந்தார். பிறரை நினைத்து அவர்களுக்குத் தொண்டாற்றுவதில் எல்லோருக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

## புதிய ஆயர்கள்

அவருடைய அப்போஸ்தலப் பணியில் உதவி செய்வதற்கு இராயப்பருக்கு ஆட்கள் தேவைப்பட்டது. ஒழுக்கம் உடையவர்களாகவும், நம்பிக்கைக்குரியவர்களாகவும் உள்ள சிலரை அவர் தெரிந்து கொண்டார். அவர்களிற் சிலர் கண்டிப்பு மிக்கவர்களாக இருந்தார்கள். ஏனையோர் அனுபவம் குறைந்த இளைஞர்களாக இருந்தார்கள். அவர்களுக்குப் பிறர் அன்பைப் பற்றிப் போதித்தார். "உங்கள் மத்தியில் வாழும் இறைவனின் மந்தைக்கு உணவளியுங்கள்; கட்டாயத்தினால் அல்ல தேவனுக்குப் பிரியமான முறையில் நல்ல மனதுடன் அதைப் பராமரியுங்கள். கைமாறு எதிர்பார்க்க வேண்டாம். குற்றங்களின் மேல் ஆணை செலுத்தும் எண்ணத்திற்கு இடங் கொடுக்க வேண்டாம். முழு உள்ளத்துடன் ஆண்டவரின் மந்தைகளுக்கு எல்லாவற்றிலும் முன்மாதிரிகை காண்பியுங்கள்" இதுவே இராயப்பர் அவர்களுக்குச் செய்த போதனையாகும்.

இவ்விதமே புதிய ஆயர்கள் அமர்த்தப்பட்டார்கள். திருச்சபைக்குள் அன்பின் ஆட்சியே நிலவவேண்டும் என்று இராயப்பர் ஆசைப்பட்டார். ஏனெனில் புனிதப்படுத்துவதில் அன்புக்கு உள்ள ஆற்றலை அவர் நன்கு அறிந்திருந்தார். அன்பு உள்ள ஆற்றலினால் ஆன்மாக்களைப் புனிதப்படுத்துவதையே அவர்தம் வழிவந்தவர்களுக்கு வலியுறுத்தியுள்ளார்.

இவர் யார்? ஒலிவமரத் தோப்பில் ஒருவனது காதை வெட்ட வாளை உருவிய முரடன் என்பதை ஒப்பிட்டுப் பார்க்கையில் எத்தனை வியப்புக்குரிய மாற்றம்—இம்மாற்றத்தின் காரணம் அன்பு!

## அன்பின் சாயலை அயலவர் கண்டனர்

இராயப்பரின் அன்பு உள்ளத்தை மக்கள் அறிந்து கொண்டனர். அவர்கள் நோயாளரைக் கட்டில்களோடும், மெத்தைகளோடும், தூக்கிவந்தார்கள். தெருவில், வீதி ஓரங்களில் அவர்களை வளர்த்தினார்கள். இராயப்பர் அந்த வழியால் வருகையில் அவரது நிழல் பட்டாலே நோயாளர்கள் சுகம் பெறுவர் என்று மக்கள் நம்பினார்கள்.

நற்செய்தியில் சொல்லப்பட்டிருக்கும் புதுமைகளில் அவருடைய கருணை உள்ளம். மரியாதையான பண்பு எல்லாம் விளங்குகின்றன.

கோவிலின் அலங்காரவாசலில் அவர் முடவனைக் குணப்படுத்தினார். அவன் சுகம்பெற்றுவிட்டான் என்பதை இராயப்பர் அவனுக்குத் தெரிவிக்க விரும்பினார். பரிவுடன் அந்த மனிதனைக் கைகளில் பிடித்து தூக்கி நிறுத்தினார். அவரது செயல்களில் எல்லாம் கருணையும் அன்பும் பளிச்சிட்டன. அவரது செயல்கள் மக்களைக் கவர்ந்தன.



## தபித்தாளை உயிர்ப்பித்தார்

பெண்கள் எல்லோரும் இராயப்பர் மீது அன்பும் மரியாதையும் நம்பிக்கையும் வைத்திருந்தார்கள். தங்கள் உணர்வுகளையெல்லாம் புரிந்துவைத்திருக்கும் சுறுசுறுப்பான ஆயர் என்று கருதினார்கள். அழிந்த எதனையும் முன்னிருந்தபடி ஆக்கிக் கொடுக்கும் ஆற்றல் அவருக்கு இருப்பதாக நம்பினார்கள்.

தபித்தாள் எனும் தையல் இறந்துவிட்டாள் விதவைகளும் ஏனைய பெண்களும் இராயப்பரிடம் வந்தார்கள். தபித்தாள் தமக்குத் தைத்து தந்த உடுப்புக்களை இராயப்பருக்குக் காட்டினார்கள். அவளை உயிர்ப்பித்துத்தரும்படி கெஞ்சினார்கள் தாங்கள் கேட்டதை கிறீஸ்து யேசுவின் பெயரால் அப்படியே தரக்கூடிய வல்லமைமிக்க ஆயர் என்பது அவர்கள் துணிபு அவளுக்கு அவர் உயிர்கொடுப்பார் என்பது அவர்கள் விசுவாசம்

இராயப்பர் அவர்களுடன் போனார் எல்லோரையும் வெளியே அனுப்பிவிட்டு அவள் உடலின் அருகில் நின்று வேண்டினார். அவளது கையைப் பிடித்து எழுப்பினார். அவள் உயிர் பெற்று எழுந்தாள். மக்கள் கேட்டதை இராயப்பர் கொடுத்தார். மக்கள் கேட்டதை அவர்கள் பெற்றுக்கொண்டனர்.

## அன்பின் அளவுகோல்

அன்பின் அளவுகோல் பொறுமையாகும் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடான சூழ்நிலைகளை இராயப்பர் தன் அன்பால் வெற்றி கொண்டார். அவரது சொந்த மக்களாம் யூதர்களை கிறிஸ்துவைக் கொன்ற கொலைஞர்கள் எனும் பழியில் நின்று மீட்க வேண்டியவராக இருந்தார். "நீங்கள் அறியாமையினால் தான் இப்படிச் செய்தீர்கள் என்பது எனக்குத் தெரியும்" என்று அவர் யூத மக்களுக்குச் சொன்னார். சின்னப்பரைவிட இராயப்பர் கண்டிப்பு உள்ளவர் எனினும் சட்டங்களைத் தளர்த்தி புற இனத்தாரையும் திருச்சபையில் சேர்த்துக் கொள்ளும்படி செய்வதில் முன்னோடியாக விளங்கினார்

கோர்னிலியூஸ் எனும் உரோமை அதிகாரி இராயப்பரை விருந்துக்கு அழைத்தான். இராயப்பர் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டார்.

"மற்றவர்களுடன் உறவாடுவது, புறவினத்தார் வீட்டில் விருந்து உண்ணுவது எல்லாம் யூதருக்கு அருவருப்பான செயல்கள் என்பது உமக்குத் தெரியும். ஆனால் எந்த மனிதனையும் தாழ்ந்தவன், பாவி என்று புறக்கணிக்கக் கூடாது என்று ஆண்டவர் எனக்குக் காட்டியிருக்கிறார். இதன் பொருட்டே தான் உமது அழைப்பை ஏற்றுக் கொண்டேன். ஆண்டவர், ஆட்களை மதிப்பவர்களை அல்ல—தமக்கு அஞ்சி நடக்கிறவர்களையே விரும்புகிறார்." என்று தம்மை அழைத்த கோர்னிலியூஸிற்கு அவர் சொன்னார்.

திருச்சபைக்கு வெளியே இருப்பவர்கள் எல்லாரும் மீட்படைய வேண்டும் என்பதே திருச்சபையின் ஆவல், இதில் திருச்சபை காண்பிக்கும் பெருந்தன்மைக்கு திருமறையின் முதல் பாப்புவாம் இராயப்பரின் போதனையும், சாதனையும் எடுத்துக்காட்டுகளாகும்.

## முதிர்ந்த தலைவர்

உங்கள் அயலவரை நேசியுங்கள் என்ற இயேசுவின் போதனையின்படி இராயப்பர் வாழ்ந்து காட்டினார். மக்களுக்கும் அதனைப் போதித்து அதன்படி வாழக் கற்பித்தார்.

"எல்லா மனிதரையும் மதியுங்கள்" எனும் இராயப்பரின் கட்டளையானது இயேசு போதித்ததின் சாரம் அல்லவா? ஒரு மனிதன் தன் உடன் மனிதனுக்குக் காட்ட வேண்டிய அன்பின் உயர்நிலைக்கு இராயப்பரின் கட்டளை தான் எல்லைக் கோடு. என்றும் எதிலும் சரியாக நிற்கும் ஓர் இதயத்தில் இருந்தே இப்படியான அன்பு சுரக்க முடியும். "ஒருவர் ஒருவருக்குக் கருணை காட்டவேண்டும், தாழ்ச்சியாக நடக்க வேண்டும்" என்பதே அவரது போதனை.



இராயப்பர் தள்ளாத வயதடைந்தார். அந்நிலையிலும் பல சமயங்களில் பட்டினி கிடந்தார். அளவுக்கு மிஞ்சி வேலையால் களைப்பு அடைந்தார். ஓய்வின்மையால் உறங்கி விழுந்தார் நெடும்பயணங்களை மேற்கொண்டார். மக்களுக்கு கொடுப்பதிலேயே அவர் வாழவேண்டியிருந்தது. கொடுத்து வாழ்வதில் உள்ள சிறப்பை வாழ்வின் மூலம் அனுபவித்தார் எனவே கிறிஸ்தவர்கள் தரும சிந்தை உடையவர்களாகத் திகழவேண்டும் என்று போதித்தார். "முணுமுணுப்பின்றி ஒருவர் ஒருவரைத் தாபரியுங்கள்" என்று தம்மவர்களை வற்புறுத்தினார். அன்பின் விதிகளை எவ்வளவு நுணுக்கமாக இந்த முரட்டு மீனவன் கடைப்பிடிக்கத் தொடங்கி விட்டார். அன்பின் ஆற்றலே ஆற்றல்!

## இறுதிப் போதனை

பிறர் நலன் நாடுவதில் இராயப்பரின் உள்ளம் சோர்ந்து போகவில்லை. "நேர்மையான நெஞ்சில் நின்று சுரக்கும் அன்புடன் ஒருவர் ஒருவரை நேசியுங்கள்" என்று அவர் கூறுகின்றார்.

ஒருவர் ஒருவருடன் தாழ்ச்சியாக நடந்து கொள்ளுவதே சகோதரத்துவத்தின் இரகசியம். தீமைக்குத் தீமையும், நிந்திப்புக்கு நிந்திப்பும் செய்ய வேண்டாம் என்பதே அவர் மீண்டும் மீண்டும் செய்த போதனைகளாகும். தாம் மறை சாட்சியாக மரிப்பதற்குச் சில நாட்களின் முன் பெரிய மடலொன்றை எழுதினார். அதில் அடங்கியவையாவும் அன்பைப்பற்றியே, அவையெல்லாம் பழைய போதனைகள்தான். ஆகையினால்தான் அவர் "நீங்கள் எல்லோரும் இவற்றை நன்றாக அறிந்திருக்கிறீர்கள். இருந்தாலும் எல்லாவற்றையும் உங்களுக்கு மீண்டும் ஞாபகப்படுத்திவிட விரும்புகிறேன்!" என்று அதில் எழுதினார்.

## முடிவு !

அன்பினால் புதிய பிறவி எடுத்தார். பரந்த நோக்கமே உருவான ஒப்பற்றதலைவராகினார். திருச்சபை எனும் தெய்வீகக் கோட்டைக்குள் தியாக தீபமாய் சுடர் கொடுத்தார். வாழ்வின்

இறுதிவினாடிவரை மற்றவர்களின் நலனுக்காகவே உழைத்தார் கிறிஸ்துவில் அவர்கள் தங்கள் மீட்டைக் கண்டடையும்படிக்கே தமது உயிரையும் கொடுத்தார்.

## புரட்சிக்காரன் புனித சின்னப்பர்

அன்பு அவரை ஆட்கொள்ளுமுன்னர்— அவரிடம் அந்த மாறுதல் ஏற்படும் முன்னர்—அவர் புதுவாழ்வினை தொடங்கும் முன்னர் கிறித்தவர்களை வதைப்பதும் அழிப்பதுமே அவரின் முழுமூச்சாக இருந்தது.

அந்தப் புரட்சிக்காரனை அன்பினால் ஆட்கொண்டு அதிசயிக்கத் தக்க மாறுதலை ஏற்படுத்தினார் இயேசு. புரட்சிக்காரன் சின்னப்பரின் பேச்சிலும் செயலிலும் புதிய புரட்சி தோன்றியது.

''அன்பு கேடு செய்யாது ஒருவர் ஒருவருக்குத் தயவு காண்பியுங்கள். கிறிஸ்துவின் நிமித்தம் தந்தை உங்களை மன்னிப்பது போல் நீங்களும் ஒருவர் ஒருவரை மன்னியுங்கள்'' என்றார்.

உபாதிக்கும் குணம் நீங்கி உதவிடும் குணம், துன்பறுத்தும் குணம் மாறி துணைசெய்யும் குணம். அல்லல் கொடுக்கும் குணம் மாறி அன்பு செய்யும் குணம். ஏழைகளை வாழவைக்க நிதி திரட்டுகின்றார் புயலில் சிக்கியவர்களுக்கு புகலிடம் வழங்குகின்றார். சிறைக் கைதி ஒருவன் தன்னுயிரை மாய்த்துக் கொள்ளாவண்ணம் தடுக்கின்றார். தப்பி ஓடிய கைதி ஒருவனுக்கு கசையடி வழங்காது கருணைகாட்டும்படி கடிதம் எழுதுகின்றார்—மக்களை மனம் திரும்புகிறார்—அவர்களுக்குப் படிப்பிக்கின்றார்.

## சுமையாக இருக்கவில்லை

தானே உழைத்து தனது தேவைகளைக் கவனிக்கிறார். கர்வமுள்ள பரிசேயனாகவோ, நீதியாகவோ அல்ல அன்பும் எளிமையும் தாழ்ச்சியும் கொண்ட சிறிய ஆயனாகச் சேவை



புரிகின்றார். அவரது தோள்களில் மற்றவர்களின் சுமைகளைச் சுமந்து கொள்கிறார். எல்லோரும் அவ்விதமே நடக்க வேண்டும் என்பது அவரது போதனை.

''ஒருவர் ஒருவருடைய குறைகளைச் சுமந்து கொள்ளுங்கள். அப்பொழுதுதான் நீங்கள் கிறிஸ்த்துவின் கட்டளைகளை நிறைவேற்றுவீர்கள்'' என்கிறார்.

மற்றவர்களுக்கு அவர் சுமையாக இருக்க விரும்பவில்லை எல்லோருக்கும் எல்லாமாக அவர் காட்சியளிக்கிறார்.

## பிறர் நலனில் நாட்டம்

திருமறைப் பணியில் தமக்குத் துணை நின்றவர்களை சின்னப்பர் என்றும் மறந்திடவில்லை. தீமோத்தே என்பவர் நோயுற்று இருந்தபோது வெறும் தண்ணீரை மட்டும் அருந்தாது கொஞ்சம் திராட்சை இரசமும் சேர்த்து அருந்தும்படி அன்போடு ஆலோசனை கூறுகின்றார்.

சேனாசும், அப்பொலோவும் தம்மிடம் வரப் புறப்பட்டதை அறிந்த பொழுது வழியில் அவர்களுக்குத் தீங்கெதுவும் ஏற்படக் கூடாது என்று அங்கலாய்ப்புக் கொள்ளுகின்றார்.

அவருடைய நண்பனும் உடன் ஊழியனும், உடன் போர் வீரனுமாகிய எப்பாபிரோதீத்து என்பவரை நன்கு கவனிக்கும்படி எழுதிய மடலில் ''ஏனெனில் கிறிஸ்த்துவின் அலுவல்களின் நிமித்தமே அவர் மரணஆபத்துக்கு உள்ளானார்'' என்று குறிப்பிடுகிறார்.

## அனைவரும் அவரை அன்பு செய்தனர்

அவரிடம் விளங்கிய வீரம், விவேகம், பிரமாணிக்கம், பெருந்தன்மை ஆதியாம் குணவியல்புகளைக் கண்டு அனைவரும் அவரை அன்பு செய்தனர். எபேசியரை விட்டு அவர் பிரிந்த பொழுது அம்மக்கள் அவரில் காட்டிய அன்பு புலப்பட்டது.

அவர்கள் கண்ணீர் விட்டு அழுதார்கள். ''மீண்டும் என்னைக் காணமாட்டீர்கள்'' என்று அவர் கூறிய வார்த்தைகளை அம் மக்களால் தாங்கவியலாதிருந்தது.

ஆணவம் எங்கே ?
ஆவேசம் எங்கே ?

சின்னப்பர் இப்பொழுது எல்லோரிடமும் சமமான அன்பைப் பொழிகிருர்.

"யூதனும் இல்லை. புறசாதியானும் இல்லை, விருத்த சேதனமும் இல்லை, விருத்த சேதனம் இல்லாமையும் இல்லை. தலைவனும் இல்லை, அடிமையுமில்லை, ஆனால் கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமாக இருக்கிருர்'' என்பதே இன்று அவருடைய போதனை.

புரட்சியும் கொலை வெறியும் அவரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டன. எல்லா மனிதரின் இரத்தப்பழியில் நின்றும் விடுதலையடைந்து விட்டேன் என்று அவர் துணிந்து கூறக்கூடிய நிலை.

அனைவருக்கும்
அறிவுரை

ஏழை பணக்காரன் — பாவி பரிசுத்தன் — கணவன் மனைவி — இளையோர் முதியோர், திருடர், அடிமைகள் அனைவரையும் அவர் நினைவு கூர்ந்தார்.

''எல்லோரும் உங்கள் சொந்த அலுவல்களில் அல்ல பிறரின் அலுவல்களிலேயே கருத்தாய் இருங்கள்'' என்ருர்.

''முதலாளிகளே உங்கள் ஊழியருடன் தயவாக நடந்து நீதிசெலுத்துங்கள். மோட்சத்தில் உங்களுக்கு ஒரு முதலாளி இருக்கிருர் என்பதை மறந்துபோகாதீர்கள்''

''வயது சென்றவர்களுக்கு கோபமூட்டாதீர்கள்''



''கணவன்மாரே உங்கள் மனைவியர்க்கு மனத்துயரம் கொடுக்காதீர்கள்''.

''பெற்ருேர்களே உங்கள் பிள்ளைகளுக்கு ஆத்திரம் எழுப்பாதீர்கள் அதனால் அவர்கள் அதைரியம் அடைவார்கள்''.

பாவிகளைத் தேற்றுங்கள் கருணைகாட்டி மன்னியுங்கள், இல்லாவிடில் அவர்கள் அவநம்பிக்கையில் மூழ்கிவிடுவார்கள்''

இப்படியாக எல்லோரையும் நினைத்து அனைவருக்கும் புத்திமதி கூறுகிருர்.

அன்பின் செயல்

அன்பு புனித சின்னப்பரின் வாழ்வை திசை திருப்பியது புது மெருகூட்டி புதுப்பிறவியாக்கியது. முன்பு முரட்டுத்தனமும் கர்வமும் கொண்டவராக இருந்தார். இப்பொழுது தாழ்ச்சியும் கருணையும் உடையவராகக் காட்சி தருகிருர்.

பிறர் அன்பு எனும் பாதையில் அவரது பாதங்கள் படியத் தொடங்கிய பின்னர் அவர் என்றும் சோர்ந்தது இல்லை. அன்பினால் விசுவாசத்தை வளர்த்தார். "நான் விசுவாசத்தைக் காப்பாற்றி விட்டேன்'' என மார்தட்டிக்கூறும் துணிவு பெற்ருர். பெற்றுக் கொள்வதில் அல்ல கொடுப்பதில்தான் இன்பம் இருக்கின்றது எனும் இயேசுவின் வார்த்தையின் வழியில் வாழ்ந்து காட்டினுர்.

அவர்களின் வாழ்வு
அன்புடன் தொடங்கியது

''இதோ இரக்கத்தின் மனிதர்கள் இவர்களின் நற்பணிகள் என்றும் கனிகள் தருகின்றன'' என்று இவர்களின் விழாக் காலங்களில் திருச்சபை பாடுகின்றது. இந்த அருட்சிக்குரிய புகழ் மொழியுடன் அவர்களின் வாழ்வு அன்புடன் தொடங்கியது என்று நாமும் தாழ்ச்சியுடன் அறிக்கையிடுவோம்.

# என் மொழி 12

## அனைவரையும் அன்பு செய்க

ஒருவனை மட்டுமல்ல—

உறவினரை மட்டுமல்ல—

அயலவரை மட்டுமல்ல—

அறிந்தவனை மட்டுமல்ல—

ஊரவரை மட்டுமல்ல—

அனைவரையும் அன்பு செய்ய வேண்டும்—

இதற்கு பெருமனதும், களங்கமற்ற அன்பும் தேவை. பசியால் வாடுபவனை அன்றேல் நோயால் துன்புறுபவனைக் கண்டு இரங்குவது கடினமான செயலன்று. ஆனால் பசியால் வாடும் பலருக்கு ஒரு நாட்டு மக்களுக்கு உதவி செய்வது இலகுவான செயலன்று.

கிணற்றில் ஒரு குழந்தை விழுந்து விட்டது என வைத்துக் கொள்வோம். அதனை மீட்பதற்குத் துணிந்து பலர் முன்வருவர். குழந்தைக்கு ஏற்பட்ட நிலையையும், மீட்கத் துணிந்தவர்கள்



வீரத்தையும் வானொலியில் வர்ணித்தால் எம்மவருட் சிலர் மனமுருகிக் கண்ணீர் விடவும் செய்வார்கள். ஆனால் அதே அளவு உருக்கமும் நெகிழ்ச்சியும் ஒரு நாட்டில் ஏற்பட்ட பெரும் அழிவைக் கேட்கையில் பலருக்கு ஏற்படாது. வெள்ளப் பெருக்கினாலோ, பூமி அதிர்ச்சியினாலோ, எரிமலை வெடித்ததினாலோ ஏற்பட்ட அவலங்களைக் கேட்டு வியப்படைவதோடு நின்று விடுவோம். அதனைப் பற்றி மேற்கொண்டு சிந்திக்க மாட்டோம். அவர்களுக்காகத் துடிக்க மாட்டோம் அவர்களுக்கு எம்மால் உதவ முடியாதா? என்று ஏங்கமாட்டோம். காரணம் நிறைவான பிறர் அன்பு நம்மிடம் இல்லை என்பதே. துன்பமும், வறுமையும் எவ்வளவு பெரிதாக இருக்கின்றதோ அந்த அளவுக்கு 'நாம் என்ன செய்ய முடியும்? என்ற நினைவுடன் அமைதியடைகின்றோம்.

### இயேசுவின் முன்மாதிரிகை

பெருந்திரளான மக்களுக்கு இரக்கம் காட்ட வேண்டும் என்று கிறிஸ்து யேசு எமக்கு செயல்மூலம் வெளிப்படுத்தியுள்ளார். ஜெருசலேமின் அழிவை முன்னதாகவே அறிந்திருந்த அவர் கண்ணீர் சிந்தி அழுதார், தம்மைப் பின்சென்ற மக்கள் பட்டினியால் சாகாதபடிக்கு அவர்களுக்கு உணவளித்தார். தனிமனிதனுக்கு உதவி செய்வதுபோல் பெருந்தொகையான மக்களும் உதவி செய்யவேண்டும் இதுவே உண்மையான அன்பு எமக்கு இதனைப் போதிப்பதற்காகவே இயேசு இவ்விதம் செய்தார். உண்மையான இரக்கம் உள்ள மனிதனுக்கு கடற்கரையின் மணலைப்போன்று பரந்து விரிந்த இதயமும் அளவற்ற ஞானமும், அறிவும் வேண்டும்.

சிறு பிள்ளைவாதம், புற்றுநோய், தொழுநோய் போன்ற நோய்களால் துன்புறுபவர்கள், நாடுகடத்தப்பட்டவர்கள், வறுமையால் வருந்துபவர்கள், கைதிகள், பாமர மக்கள் கடவுளை அறியாதவர்கள் போன்ற மக்கள் எல்லோர்மீதும் நாம் இரக்கம் காட்டவேண்டும். இத்தகையோர் கூட்டம் எல்லாநாடுகளிலும்

உண்டு. இத்தகைய மக்கள் தினமும் புதுப்புதுவடிவுகளில் எம்முன் தோன்றுகின்றார்கள். உலகில் எத்திசையிலும் துன்பத்தின் சாயல் படர்ந்து இருக்கிறது.

## நாம் கற்கவேண்டிய கலை

எல்லோரையும் பற்றி எனும் பொழுது எமக்குத் தொலைவில் உள்ளோர் பற்றியும் நாம் கவலைகொள்ளவேண்டும், அதற்கு நாம் நம்மைப்பழக்கிக் கொள்ளவேண்டும். நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கிய கலை இதுவாகும்.

அன்பு செய்வதற்கென்றே நம் இதயம் படைக்கப்பட்டது அதற்குக் கட்டுப்பாடு எதுவும் கிடையாது. துன்பப்படுவோர் எல்லோருக்காகவும் நாம் கண்ணீர் விட முடியாது என்பது உண்மைதான். ஆனால் இவர்கள் மட்டில் நாம் அலட்சியமாய் இருப்பதும் முறையல்ல. நம் இதயத்தை நாம் கல்லாக்கிவிடக் கூடாது.

சிறிய தொகையினருக்கே நாம் உதவுவோமானால் நாம் பெருமளவில் உதவி செய்வதற்கு வாய்ப்பேது? உலகளாவிய விதத்தில் உதவிடவிரும்புவர்கள் செஞ்சிலுவைச் சங்கங்கள் புனித வின்சன்டிப் போல் போன்ற அறச்சேவை நிலையங்களுக்கு பணத்தையோ, பழைய உடைகள், பொம்மைகள் போன்ற பொருட்களை அனுப்பி வைக்கலாம்.

பட்டினியால் வாழும் நாட்டின் மக்களுக்கு எமது நாட்டிற்கு வரும் உணவு வகைகளில் ஒரு பகுதியை அனுப்பி வைக்கும்படி ஆட்சியாளரைத் தூண்டலாம். இவை போக யாரும் போய்க் கேட்க அஞ்சும் பெரும் பணக்காரரை அணுகி நிதி திரட்டலாம். இவ்விதமாக வறுமை, நோய் என்பவற்றை ஒழிக்குப் இப்பாரிய போராட்டங்களில் எமது சிறு பங்களிப்பின் மூலமே உதவிட முடியும். உலகின் தொலைவிடங்களில் இருந்து ஒலிக்கும் அபயக் குரல்களுக்கு எம்மால் உதவ முடியாத நிலையில் நாம் மன்றாட வேண்டும்.



## தொண்டு செய்யப் புகுமுன் தேடவேண்டியது அறிவு

பிறர் பணிக்கு நம்மைத் தூண்டும் நூல்களை நாம் தேடிப் படிக்க வேண்டும். வாசிப்பதன் மூலம் நம் அறிவை விருத்தி செய்ய வேண்டும். அதுவே நாம் நம்மை தொண்டிற்கு ஆயத்தம் செய்யச் சிறந்த வழியாகும். கண்களையும் காதுகளையும் மூடிக் கொண்டிருக்கும் கல்நெஞ்சக்காரர் வழியைக் கண்டு பாவித்தல் கூடாது.

கடந்த நூற்றுண்டில் கடன்காரரும், சிறைச்சாலைகளும், தொழில் நிறுவனங்களும் அநீதியாக நடந்து கொண்ட பொழுது சாள்ஸ் டிக்கன்ஸ் பல புரட்சி நாவல்களை எழுதினர். மக்கள் அவற்றை வாங்கிப் படித்ததின் மூலம் புரட்சிக்கு வழி கண்டார்கள். தலைவர்களைச் சந்தித்தார்கள். நிலைமைகளைச் செம்மை செய்யும் துணிவைப் பெற்றுர்கள். விடாமுயற்சியுடன் போராடி சீர்திருத்தங்களை உண்டாக்கினர்கள். நல்ல நூல்கள் கொடுத்த நன்மைகள் இவை. நமது நாட்டிலும் நூலறிவின் மூலம் நீதிக்காக வாதிடும் நெஞ்சத்தை பொதுமக்கள் பெற்றுள்ளார்கள்.

விவேகமுள்ள பிறரன்பு நாட்டில் நற்குடிகளை உருவாக்குகிறது. தேசிய சமூகப் பணிகளில் ஈடுபடவும், நல்லொழுக்க வழி நடக்கவும், நல்ல அரசைத் தெரிந்தெடுக்கவும் வழிகாட்டுகின்றது. ஒரு நல்ல குடிமகன் தன் நாட்டை நேசிக்கின்றான். நாட்டில் நல்ல சட்ட திட்டங்களுக்குப் பணிந்து நடக்கின்றான், அநீதி அட்டூழியங்களுக்கு ஆதரவு கொடான். அவற்றை எதிர்த்துப் போராடும் போது அவன் எல்லாருக்காகவுமே போரிடுகிறான். அங்கே பிறர் அன்பே செயல்படுகின்றது.

ஒரு ஏழைக்கு உதவிடுதல் உத்தமமான செயல்தான். ஆனால் எல்லா ஏழைகளுக்கும் நன்மை ஏற்பட தனக்குள்ள உரிமைகளையும், வசதிகளையும் பயன்படுத்துவதே மிகவும் உத்தமமான செயல். இதனை நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் உணர வேண்டும்.

## வாக்குரிமை ஒருவரம்

வாக்குரிமை என்பது மனிதனுக்கு இறைவன் வழங்கியுள்ள வரம் பெரும் ஆயுதம்! நீதியை நிலைநாட்டவேண்டிய இக்கால கட்டத்தில் இவ்வாயுதத்தை நல்ல முறையில் நாம் பயன்படுத்த வேண்டும்.

எல்லோருக்கும் பொதுவான அன்பே மனிதனின் வாழ்வை இயக்கிவிடும் விதிமுறையாகும். நம் திருமறை போதிக்கும் உத்தரிப்பு இடம் பற்றிய போதனை எல்லோரையும் தழுவி நிற்கும் அன்புக்கு எடுத்துக்காட்டு. உத்தரிப்பு இடத்தில் இருக்கும் அந்த எண்ணில் அடங்காத ஆன்மாக்கள் எல்லாம் நம் உடன்பிறப்புக்களே. இறைவனுடன் நேசமான நிலையில் இவர்கள் மரித்தார்கள் எனினும் விண்ணக இறைவனை நேரடியாகக் காண்பதற்கு தடை விதிக்கப்பட்டவர்கள். அதன் காரணமாக அவர்கள் ஆன்மா முழுத்தூய்மைபெறாது இருக்கின்றன. அவ்வழுக்கு அகலும்பொருட்டே இப்பொழுது கடும் வேதனைகளை அனுபவிக்கிறார்கள்.

இந்த இரக்கத்துக்குரிய ஆன்மாக்களின் கொடிய வேதனைகளை நினைத்து நாம் நெஞ்சு உருகின்றோம். அவர்களின் மீட்பினுக்காக இறைவனை வேண்டுகிறோம்.

'தமக்கு விண்ணகப் பேறு கிடைக்குமா?' என்ற அவநம்பிக்கைப்படும் நிலையில் இந்த ஆத்துமாக்கள் இல்லை. அவர்களின் மீட்பு அவர்களுக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் அவர்கள் அதிகமான வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிக அன்பு உள்ளவர்கள் இரக்க மேலீட்டால் இவர்களுக்காக மன்றாடுகிறார்கள்.

உத்தரிப்பு இடத்தில் இருப்பவர்கள் ஒரு சிலரையே எமக்குத் தெரியும். மற்றையோரை நாம் அறியோம் நமக்கு அவர்கள் அந்நியர்கள். இந்த வேறுபட்ட தேச, இன மொழி குல மக்களுக்காக நாம் மன்றாட வேண்டும் என்பது திருமறையின் போதனை இப்படி மன்றாடுவது எல்லோரையும் அன்பு செய்யத் தூண்டும் அறச்செயலாகும். இந்த வழக்கம் நமக்கு நல்ல பயிற்சியைத் தருகிறது. நாம் செய்யக் கூடிய மிக எளி



தான பிறர் அன்புப்பணி இதுவாகும். நாம் நம்மை சூழ உள்ள நாட்டுமக்கள் துன்பப்படும் வேளையில் அவர்கள் துயர் துடைக்க உழைப்பதில் முன்னோடிகளாய் விளங்க வேண்டும்.

## பணிக்கு வேண்டாத பாகுபாடுகள்

நோயாளர், நாடுவிட்டு நாடுவந்த அகதிகள் ஆகியோருக்கு உதவும் இயக்கங்களில் நாமும் சேர்ந்து உழைக்கின்றோம். இவ்வியக்கங்களில் வேறு சமய மக்களும் சேர்ந்து எங்களுடன் பணிபுரிவதைக் காண்கிறோம். பிறர் அன்புப் பணிகளில் இந்த நல்ல சமாரித்தர்கள் ஊக்கமாக உழைக்கும் போது—நீங்கள் எந்தச் சமயத்தவர்கள் என்று கேட்டு அவர்களை இடைமறிப்பது பண்பான செயல் அல்ல.

தாழ்ச்சியுடனும் அன்புள்ளத்துடனும் அவர்களுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். நற்பணிகளைப்புரிய எந்த அற நிலையங்கள் முன்வந்தாலும் அவற்றிற்கு நாம் உதவப் பின் நிற்கக் கூடாது. உண்மையான சமூக சேவை உள்ளத்துக்கு உரிய இயல்பு இதுவேயாகும்.

கத்தோலிக்க அற நிலையங்கள், பிரிவினைக் கிறிஸ்தவச் சகோதரர்களின் அறநிலையங்கள், இந்து அற நிலையங்கள் என்று பல உள. இந்த ஒவ்வொரு பிரிவைச் சாந்தவர்களும் மற்றைய அறநிலையங்களுக்கும் உதவிடவேண்டும்

கிறிஸ்துவே எல்லாவற்றிலும் எல்லாமாக இருக்கிறார்' ஏழைகளும் துன்பப்படுவோரும் அவருடையவர்களே. அவர்கள் எம்மதத்தவர்களாய் இருந்தாலும் அதுபற்றிக் கவலைப்படத் தேவையில்லை '' இறைவன் ஆட்களை மதிப்பவர் அல்லர். எந்த எந்த இனத்தவர்களாக இருந்தாலும் அவருக்குப் பயந்து நீதியாக நடப்பவர் எல்லோரும் அவருக்குப் பிரியமானவர்களாய் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும் (புனித இராயப்பர்)

# நாம் தப்பியதால் நன்றி

வெள்ளப் பெருக்கு, பூகம்பம், கொள்ளைநோய், அயல் நாடுகளை அழிக்கின்றன? எங்கள் நாட்டில் மட்டும் இவை இல்லை. உடனே நாங்கள் சொல்லுவது "நாங்கள் தப்பி விட்டோம் இங்கு பூமி அதிர்ச்சி, கொள்ளை நோய், வெள்ளப் பெருக்கு எதுவும் இல்லை, ஆண்டவருக்கு நன்றி."

தம்மைக் காப்பாற்றியதற்காக ஆண்டவருக்கு நன்றி சொல்லத்தான் வேண்டும். ஆனால் நாம் தப்பி விட்டோம் எனும் குறுகிய மனப்பான்மைக்கு இடம் கொடுக்கக் கூடாது. பிறர் துன்பத்தைக் கேட்டும் கேளாதவர்களாக இருத்தல் கூடாது. ஏனெனில் அவர்களும் எமது சகோதரர்கள். நாம் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளா விட்டாலும் அவர்களுக்கு வந்த துன்பம் எமக்கு வந்தவைகளே. இவர்களுக்கு உதவ வேண்டியது நமது கடமையாகவும் அவர்களுக்கு ஏற்பட்டவைகள் எமக்கு ஏற்பட்டவைகளாக எண்ணி இரங்க வேண்டும். அவர்களின் குரலுக்கு நாம் செவிசாய்க்க வேண்டும். ஆகக் குறைந்தது மன்றாடவாவது வேண்டும்.

இது யுத்த காலம் என வைத்துக் கொள்வோம். இந் நிலைக்கு உள்ளானவர்கள் நம் எதிரியின் ஆட்களாக இருந் தாலும் அவர்களுக்கு ஏற்பட்ட அழிவையிட்டு ஆனந்தப்படக் கூடாது. குண்டுகளாலும், நஞ்சுப் புகையாலும் அவர்கள் அழியட்டும் என்று ஆசைப்படக் கூடாது. அப்படி மன்றாடவும் கூடாது. இந்நிலையில் எல்லோரையும் இறைவன் சமாதானத்தில் ஒன்றுபடுத்த வேண்டும் என இறைஞ்சுவதே முறை.

எல்லோருக்கும் பொதுவான அன்பை நாங்கள் பல வழிகளால் வெளிப்படுத்த முடியும். மற்றவர்களின் உடல் தேவைகளைத் தீர்க்கும் பணிகள் பல இருக்கின்றன. அத்துடன் மனிதரின் ஞான அறிவை வளர்க்கக் கூடிய தொண்டுகளும் பல இருக்கின்றன.





ஆசிரியர்களும், எழுத்தாளரும் நல்ல கருத்துக்களை பத்திரிகைமூலம் வெளியிடலாம். இவ்விதம் செய்தால் பல்லாயிரம் மக்களை நாம் நன்மையில் ஊக்குவிக்கின்றோம். ஆகையால் எல்லோரையும் பொதுவில் அன்பு செய்வதற்கு நல்ல எழுத் தாளர்களே மக்களுக்கு நன்முன்மாதிரிகையாய் விளங்கு கிறார்கள்.

பட்டினியால் வாடுவோரின் பசிதீர்க்க இவர்கள் எழுத் துக்கள் பலரைத் தூண்டிவிடுகின்றன ஏழைகளை, பொது மக்களை ஏய்த்துப்பிழைக்கும் ஏமாற்றுப் பேர்வழிகளை இவர்கள் எழுதுகோல்கள் முகத்திரைகிழித்து அம்பலப்படுத்துகின்றன நன்மையோ தீமையோ ஊக்கப்படுத்திவிடும் ஆற்றல் இந்த எழுத்தாளர்களுக்கும் அச்சகங்களுக்குமே உண்டு.

ஒரு பத்திரிகையானது மக்களின் அறிவுக்கு விருந்தாக வும் அமையலாம், விஷமாகவும் அமையலாம் ஏனெனில் அச்சுப் பணியானது எப்பொழுதும் பலரைக் கருத்தில் வைத்தே இயங்கி வருகிறது.

ஒரு மேடைப் பேச்சாளனால், அல்லது ஒரு போதகரால் அவரது குரல் எட்டியவரையும்தான் வசப்படுத்தமுடியும். அந்தப் பேச்சு வானொலியில் ஒலிபரப்பப்பட்டால் அது சில வேளை பெருந்தொகையான மக்களின் கவனத்தை ஈர்க்கக் கூடும். ஆனால் புத்தகங்கள், பத்திரிகைகள் சஞ்சிகைகளோ கோடானு கோடி மக்களுடன் உறவாடுகின்றன. அடுத்தவன் கையில் இருக்கும் எதுவாயினும் அச்சுப்பிரதியொன்றை எட்டிப் பார்க்காத பெண்ணோ, ஆணோ சிறுவனோ, சிறுமியோ இன்று இல்லை. இவ்விதம் உலகை ஆண்டுவரும் பத்திரிகை கொஞ்ச மாவது படிப்போரின் உள்ளத்தைத் தாக்காது விடுவதில்லை

அச்சுப்பணியின் ஆற்றலை கத்தோலிக்க மக்கள் நன்கு அறிந்தே இருக்கிறார்கள். கத்தோலிக்கப் புத்தகம், சஞ்சிகை, பத்திரிகைகளை ஆதரிக்கும்படி எமது ஞானமேய்ப்பர்கள் அடிக் கடி குரல் எழுப்புகின்றனர். பணிவுடன் வேண்டுகோள் விடுக் கின்றனர். இருப்பினும் அவர்கள் குரலுக்கு எத்தனைபேர் செவி

கொடுக்கின்றோம்? அவர்களின் இக்கோரிக்கைகளை அலட்சியப் படுத்துவதன் மூலம் பலர் மட்டில் எமக்குள்ள பிறர் அன்புக் கடமைகளை உதாசீனம் செய்கின்றோம்.

ஒரு கத்தோலிக்க அச்சகம் வெற்றிகரமாக இயங்கும் போது எத்தனையோ கோடி மக்கள் அறிவொளி பெற்றுப் பயன் பெறுகிறார்கள். பிற சமயமக்கள் தமது சமய வெளியீடுகளில் காட்டும் அக்கறையையும் ஆர்வத்தையும் கத்தோலிக்க மக்களும் தமது பிரசுரங்கள் மட்டில் கொள்ள வேண்டும்.

### அறப்போராட்டம்

தங்களுக்குள்ள அறிவாற்றலால் அரும்பாடுபட்டுத் தயாரிக்கும் தமது அரிய படைப்புகளை இன்னும் சிறப்படையச் செய்வது கத்தோலிக்க எழுத்தாளருக்குள்ள பெருங்கடனாகும். இவர்களது சோர்வு, அயர்வு அற்ற இப்பணியானது ஒரு விதத்தில் அறப்போராட்டம் என்பது எல்லோருக்கும் தெரியும். இருந்தும் இவர்களுக்கு ஆதரவு கொடுப்பவர்கள் எத்தனை பேர்? எனினும் அச்சகப் பணிகள் சீரும் சிறப்பும் பெற்று வளர்ச்சியடைந்து வரவே செய்கின்றன.

பல மக்களின் நலத்திற்கு அவசியமான பல அரிய முயற்சிகள் எல்லா மக்களின் உள்ளங்களுக்கும் ஒளி கொடுத்து ஆறுதல் அளித்து, மனதைத் தட்டி எழுப்பி உண்மையான அன்பில் எல்லோரையும் ஒன்றுபடச் செய்யும் பல வழிகளை கத்தோலிக்க வெளியீடுகளில் தினந்தோறும் படிக்கிறோம்.

பிறரன்புக்கு வேண்டிய பயிற்சியும் அதை வளர்க்கும் விதிகளும் இந்த வெளியீடுகளில் நிறைய வருகின்றன. இவற்றை வாங்கிப் பரப்புவதன் மூலம் நம்மால் இயன்ற நன்மையை எல்லா மக்களுக்கும் நாம் செய்ய முடியும்.



3998CC

# என் மொழி 13

## நீங்கள் முக்கியம்

நான் என்ன முக்கியமா?

என்னாலே இது ஆகுமா?

எனக்கு என்ன தகைமை உண்டு?

நான் ஒன்றிற்கும் உதவாதவனாயிற்றே?

என்னைவிட எத்தனை சிறந்தவர்கள் இருக்கிறார்கள்?

இது எம்மை நாம் கேட்டுக் கொள்கின்ற கேள்விகள். எம்மை ஊக்கமின்றி மூலையில் ஒதுங்கிடச் செய்யும் எண்ணங்கள் ஊக்கத்தை வேரறுக்கும் உட்பகைகள்.

முன்னர் நாம் கூறியபடி இவை எம்முடம் தாழ்ச்சியை வெளிப்படுத்தும் படி எழுந்த எண்ணங்கள் என்று கொள்ளலாமே எனச்சிலர் எண்ணலாம். ஆனால் இவை தாழ்ச்சியின் அடிப்படையில் அல்ல தாழ்வு மனப்பான்மையின் பொருட்டு ஏற்பட்டவை. தாழ்ச்சி வேறு தாழ்வு மனப்பான்மை வேறு. தாழ்வு மனப்பான்மையானது மனிதனை அழிக்கும் ஒரு விதமான நோய் எனவே ,அன்பு செய்ய வேண்டியவனுக்கு தாழ்வு மனப்பான்மையல்ல தாழ்ச்சியே அவசியம். அந்தத் தாழ்ச்சி எனும் புண்ணிய குணம் உள்ள நீதான் முக்கியம்.

'தாழ்ச்சி உடையவனாய் இரு' என்று அன்பு போதிக்கிறது. நாம் இருதயத்தில் தாழ்ச்சியும் பொறுமையும் உடையவர்களாக இருக்க வேண்டும். அன்பு நம்மிடம் சகிப்புத் தன்மையை எதிர்பார்க்கிறது. மற்றவர்களுடன் பொறுமையாக நடந்து அவர்களை மன்னித்து. அவர்களுக்கு மரியாதை செலுத்தும்படி அன்பு நமக்குக் கட்டளையிடுகிறது.

எச்சரிக்கையின்றிப் பேசுவது நம் கருத்தில் நாம் பிடிவாதமாய் இருப்பது போன்றவற்றை அன்பு விலக்கும்படி செய்கிறது. பிறரைப்பற்றி நன்மையாகவும், உயர்வாகவும் நினைக்கவும், எம்மைப் பற்றித் தாழ்வாகக் கொள்ளவும் அன்பு நம்மைத் தூண்டுகிறது. தாழ்ந்த இடத்தை நீ தெரிந்து கொள்ள உயரிய இடத்தை மற்றவர்களுக்குக் கொடு என்று அன்பு நமக்கு ஆணையிடுகிறது. ஆனால் மகிழ்ச்சியின்று, சோர்ந்து சுருண்டு ஒதுங்கி வாழச் செய்வது அன்பின் பண்பல்ல.

இறைவனின் பிள்ளைகள் நாம் தனித்து எதையும் செய்ய முடியாது. நாம் இறைவனின் கருவிகள் அவரது உதவியுடனேயே நாம் எல்லாம் செய்ய முடியும்.

கிறீஸ்துவில் ஒன்றித்து நம்மால் எல்லாம் செய்யமுடியும் என்பதே கிறிஸ்தவ நம்பிக்கை. நாம் முக்கியமானவர்கள் என்று உணரச் செய்வதும் அந்த நம்பிக்கைதான்.

தாழ்ச்சியும் அன்பும் அதிகமாக இருக்கும் அளவிற்கே இறைவனது ஆக்கும் பணியில் நமக்கு இருக்கும் முக்கியமான பங்கை நாம் ஒப்புக்கொள்ளலாம்.

## மனிதனுக்கு மதிப்பு பணத்திலும் பதவியிலுமல்ல

சமூகத்தில் நீ வகிக்கும் பதவியின் நிமித்தமும் உன்னிடமுள்ள பணத்தின் நிமித்தமும் நீ முக்கியமானவன் என்று நினைப்பது முட்டாள்தனம். ஆனால் நீயும் முக்கியமானவன்



தான், எந்தவிதத்தில்? இறைவனின் பிள்ளை என்ற காரணத்தால், ஆகவே உலகத்தில் அனைவரும் முக்கியமானவர்கள். அனைவரும் செய்யக்கூடிய முக்கியமான பணிகள் இருக்கின்றன.

நான் தொடக்கத்தில் சுட்டிக்காட்டிய நற்பண்புகள் உடையவன் ஒரு மனிதன்தான். அவனை உலகம் அடிமை, கோழை என்று சொல்லுகிறது. இன்னும் அந்த அன்பின் உருவத்தைப் பார்த்து தாழ்ச்சி, சாந்தம், மரியாதை இன்சொல் எல்லாம் உள்ளவன்தான் ஆனால் அவனுக்கு முதுகெலும்புமில்லை ஆண்மையுமில்லை என்று கேலி செய்வதும் எனக்குக் கேட்கவே செய்கிறது.

## மக்களைக் கவர்வது வெளித் தோற்றங்களே

என்ன செய்வது நான் கூறும் அன்பின் மனிதனை சமூகம் புரிந்து கொள்ளவில்லை. வெளிப்படையான செயல்களையே வியந்துபோற்றும் கொள்கையில் ஊறியதுதானே உலகம்.

வீரமாகப் பேசுபவனை தவறு இழைத்தவனை தடிகொண்டு அடிப்பவனை, வசைபாடி வாதம் புரிபவனை, புயவலிமை காட்டிப் போராடுபவனை போற்றும் அளவுக்கு அன்பின் வழிபோற்றி அமைதிகாக்கும் அன்புநெஞ்சனுக்கு வரவேற்பில்லை என்பது உண்மைதான்.

ஆனால் நான் கூறும் அன்பே உருவானவன், கோழையாக குறிக்கோள் அற்றவராக இருப்பது இல்லை. அப்படி இருக்கவும் முடியாது. பேராசையைக் கட்டுப்படுத்த இன்னல்களுக்கு எதிராக எதிர் நீச்சலிட, கேட்பவனுக்கு இல்லை எனாது வழங்க, தன் நாவை அடக்கி ஆள, எவ்வளவோ குணச் சிறப்புகள் தேவை பயிற்சிகள் தேவை. பிழைகளையெல்லாம் பொறுமையுடன் தாங்கிக்கொள்ள வேண்டிய மனத்திடன் சாதாரணமானது அல்லவே.

பக்தியும், பண்புமுடைய பையன் ஒருவனை நான் அறிந்திருந்தேன். இரக்கமும், இனிமையான குணமும் கொண்ட இவனை ஒருமுறை ஆசிரியர் ஒருவர் முரட்டுத்தனமாக அடித்தார். ஆசிரியரின் கைச்சாட்டை அவனது உடலைக் கிழித்த பொழுதிலும் அவன் முகத்தில் உணர்ச்சிகள் எதுவும் வெளிப்படவில்லை. அவனது அந்த இறுகிய நிலை ஆசிரியருக்கு மேலும் சினமூட்டவே இன்னும் வேகமாக அவனைச் சாடினார் அப்படியிருந்தும் அவன் அசையவில்லை. முகம் சுழிக்கவில்லை, முணுமுணுக்கவில்லை. எதிர்ப்புத் தெரிவிக்கவுமில்லை இரக்கம்கோரி ஏங்கவுமில்லை. உண்மையான மென்மையும், ஆண்மையும் இங்கே வியப்பிற்கு உரியவகையில் இணைந்திருந்தன. இங்கு அமைதிகாத்தவன் கோழையல்ல வெளிப்படையான வீரம் காட்டுபவனிலும் பன்மடங்கு வீரமும், திடனும் கொண்டவன்

## தாழ்ச்சியுடையவன்
## செயல் வீரன்

தாழ்ச்சியே உருவான ஒரு பெரியாரை நான் அறிவேன் அவரைப்போல் வாழுதல் கடினம்தான். இவர் புதிதாக எமது மறையைத் தழுவிக்கொண்டவர். இவர் இப்பொழுது ஒரு குருவானவர். சிறந்த கல்விமான். குருவாகுமுன்னர் சிறந்த வழக்கறிஞராக விளங்கியவர். சாதாரண மொழியில் கூறுவதானால் பெரிய புள்ளி என்று பெயர் எடுத்தவர். இப்பொழுது பழம் பெருமைகள் எதுவும் அவரிடமில்லை. அவர் தன்னை மறைத்து வாழவே விரும்பினார். கால் நடையாகவே வீதியெங்கும் அலைந்தார். நோயுற்றோர் பசியுற்றோரைத் தேடிப்பிடித்து அவர்களுக்குப் பணிவிடை புரிந்தார். தன்னால் முடிந்ததை ஏழைகளுக்குத் தானம் செய்தார் இந்நிலையில் அவர் தோற்றத்தையும் செயலையும் கண்டு அவர் கல்விமானல்ல சிறந்த பேச்சாளனல்ல, செயல்வீரன் அல்ல என்ற முடிவுக்கு நாம் வர முடியுமா?

உடன் மனிதன் ஒருவன், அவன் நல்லவனோ, கெட்டவனோ அவனை அடித்து வீழ்த்தி வெற்றி காண்பதே இன்றைய சமூகத்



தில் சாதனையாகக் கொள்ளப்படுகிறது. இது அழகான பண்பாடான செயல் அல்ல. நிச்சயமாக இது கிறிஸ்தவ சாதனையுமல்ல

பதவியும், பணமும் உள்ளவனைப் போன்று ஏழையும் மரியாதை செய்யப்பட வேண்டியவன்தான். அந்த ஏழை அறிவிலியாக இருக்கலாம், வடிவற்றவனாக இருக்கலாம், வலிவு குறைந்தவனாக இருக்கலாம் எனினும் அவன் மதிப்புக்கு உரியவன். அவனிடமும் அன்பும் விசுவாசமும் பொழியப்பட்டிருக்கிறது. இறைவனின் சித்தம் எதுவோ அவனால் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காகவே அவனும் படைக்கப்பட்டுள்ளான்

இந்தச் சிறிய மனிதன் நீயாகவோ நானாகவோ இருக்கலாம். உலகத்தை நன்னிலைப் படுத்த இவனால் முடியும். ஜேம்ஸ் கெலர் அடிகள் சொல்லியுள்ள அழகிய அந்த வார்த்தைகள் நினைவு கூரப்பட வேண்டியவை. ''இந்தச் சிறிய மனிதன் கிறிஸ்தோப்பராக, கிறிஸ்துவை உள்தரித்து இருப்பவனாக தன் உடன் மனிதனுக்குச் சேவை செய்பவனாக இருக்க முடியும்''

## பரீஸ் நகர மாணவன்

பிரெட்றிக் ஓசானும் என்பவர் பரீஸ் நகர மாணவர். இவர் பிரான்சில் ஏழைகளுக்கு என்று ஒரு சமூக சேவை இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார். இன்று உலகளாவிய இவ்வியக்கத்தின் பலாபலனை அன்று அவர் கண்டிருப்பாரா? இல்லை. நிச்சயமாக இது பற்றி அவர் கனவுதானும் கண்டிருக்க மாட்டார். ஏன்? திருச்சபையின் வரலாற்றைப் புரட்டிப் பார்ப்போமாயின் உலக உய்வினுக்காக தங்கள் வாழ்வினை அர்ப்பணித்த ஒவ்வொரு சிறிய ஆணினதும் பெண்ணினதும் வாழ்க்கை வரலாறுதானே திருச்சபையின் வரலாறு!

''நீ முக்கியமானவன், ஏதாவது செய், ஒரு மெழுகு திரியையாவது கொழுத்திவை. கிறிஸ்துவை நீ உன்னில் கொண்டிருக்க வேண்டுமாயின் நீ ஏதாவது செய்ய வேண்டும்.

இதைச் செய்வதற்கு நீ கிறிஸ்துவை அவரின் அன்பை, அவரின் கருணை உள்ளத்தை நீ உன்னில் கொண்டிருக்க வேண்டும். வெயில் மழை பாராது வருந்துவோர் ஏழைகளைத் தேடிச் சந்தைகள் சேரிப்புறங்களுக்கு நீ போக வேண்டும்'' இவ்வாறு எழுதுகிருர் கெலர் அடிகள்.

## தேடி அலையத் தேவையில்லை

அன்புக்காகவும் இரக்கத்திற்காகவும் ஏங்கும் மக்களைத் தேடி எங்கும் அலைய வேண்டியதில்லை. உங்கள் சுற்றுப் புறங்களில் உங்கள் வீட்டின் வாசலில் ஏன் உங்கள் வீட்டிற்கு உள்ளேயே உங்கள் அன்பிற்காகவும், இரக்கத்துக்காகவும் ஏங்கி நிற்பவர்கள் உள்ளார்கள்.

கிறிஸ்துவின் உண்மையை அவரது அன்பை நிலைநாட்ட வேண்டும் என்று விழைபவர்கள் எவராவது இருப்பினும் கிறிஸ்தோப்பர்கள்தான். கிறிஸ்தோப்பர்களாக நீங்கள் உங்களை ஆக்கிக் கொள்வதற்கு நீங்கள் எந்த ஏட்டிலும் உங்கள் பெயர்களைப் பதிவு செய்ய வேண்டியதில்லை. எந்த தலைவரிடமும் தயவு எதிர்பார்க்க வேண்டியதில்லை. எவரையும் பின்செல்ல வேண்டியதில்லை, நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் உங்கள் அயலாரை நேசிக்க வேண்டியதுதான்.

பேசி வம்பு அளப்பதிலும், பிழை கண்டு பிடிப்பதிலும் காலத்தை விரயமாக்குவதை விடுத்து உலகை வளப்படுத்த ஏதாவது செய்யுங்கள், ஏதோ ஒரு விதத்தில் உலகைத் திருத்த முயலுவதே கிறிஸ்தோப்பர் இயக்கத்தின் நோக்கமாகும். இறையன்பே இவர்களின் குறிக்கோள். இறைவனின் பொருட்டு எல்லா மனிதரையும் நேசிப்பதே கிறிஸ்தோப்பராக இருக்க விரும்புவோருக்கு இருக்க வேண்டிய தகைமையாகும்.

ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், சமூக சேவையாளர்கள், அரசியல் அல்லது தொழிற்சங்கங்களில் முக்கிய பதவி வகிப்பவர்கள் ஆகியோர்களும் கிறிஸ்தோப்பர்களாக மாறிப் பணி



புரியும் தகமை பெற்றவர்களாவர். அன்பினுல் உலகை மாற்றி அமைக்க விரும்புவோர் இத்தகைய பதவிகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அருட்திரு கெலர் அடிகள் தூண்டுகிருர்.

இலட்சக் கணக்காஞேர் கிறிஸ்தோப்பர்களாக மாறி இந்த நற்பணியைத் தொடங்கி விட்டார்கள். அன்புடனேயே வாழ்வு ஆரம்பிக்கின்றது என்பதை இவர்கள் கண்டு கொண்டார்கள்.

இந்த இயக்கத்தின் அச்சாணியாகத் திகழ்வது தனிப்பட்டவர்களின் மதிப்பு. இந்த நோக்கத்தால் தூண்டப்பட்டு செயல்படும் பொழுது தனிமனிதன் முக்கியமானவனுகக் காணப்படுகிருன்.

## பொதுவுடமை வாதிகளிடம் கற்கவேண்டியது!

இறையியற் கொள்கைகளில் நஞ்சு கலப்பதிலேயே நாட்டமுடைய பொதுவுடைமைவாதிகள் ஆண்களையும் பெண்களையும் அதற்கெனப் பயிற்றுவிக்கிருர்கள். முக்கியமான தொழில்வாய்ப்புக்களை அவர்களுக்குத் தேடிக் கொடுப்பதின் மூலம் செல்வாக்கைத் தேடிக் கொள்வதே அவர்கள் நோக்கம்

16-ம் நூற்ருண்டில் ஏற்பட்ட புரட்சிக் கொந்தளிப்பை இயேசு சபையினர் சாதுரியமாக வெற்றிகொண்டனர். அதற்கு அவர்கள் கையாண்ட வழி இவ்வகையானதுதான். கல்லூரிகள் முதலிய நிறுவனங்களில் உறுப்பினர்களாகவும், மேற்பார்வையாளர்களாகவும் தமது தொண்டர்களை இடம்பெறச்செய்தமையே யாகும்.

கிறிஸ்தோப்பர் இயக்கத்தின் நோக்கமும் அன்பினுல் உலகைக் காப்பாற்றுவதும் அதன் பொருட்டு எந்தப் பதவியையும் ஏற்றுச் செய்வதும்தான். இவையெல்லாம் தனி மனிதனிலேயே தங்கியுள்ளது. தாழ்ச்சி துணிவு, இரக்கம் உள்ள கிறிஸ்தவன் இறைவனின் கையில் கருவியாக இருந்துகொண்டு தன்னுல் எதையும் செய்யமுடியும் என்பதை அறிவான்.

## இற்றை வரை மறக்கவில்லை

சிறிய செயல்களே நமது வாழ்வில் பெருமளவில் திருப்பங்களை ஏற்படுத்தக் காரணிகளாக அமைகின்றன. புனித வின்சன்ட் டி போல் சபையினர் என்னையும் கல்லூரி மாணவன் ஒருவரையும் ஓர் ஏழைக் குடும்பத்தைச் சந்திக்க அனுப்பிவைத்தனர். அந்த எளிய குடிசையிலே ஒரு ஏழைக் கிழவனும் கிழவியும் இருந்தனர். அவர்களுக்கு உணவு வாங்கும் சீட்டைக் கொடுத்துவிட்டு வருவது எங்களது பணியாகும்.

என்னுடன் வந்த அந்த மாணவன் எமது சபையின் உறுப்பினனோ அல்லது ·சபையில் ஆர்வமுள்ளவனோ அல்லன் இவன் அளவுக்கு அதிகமாகப் பேசுவது கிடையாது மற்றவர்களுக்காக ஒரு காசாவது இவன் செலவழித்ததில்லை. எனவே இவன் தன்னலம் கொண்டவன் என்று பலதடவைகளில் நான் நினைத்ததுண்டு. ஆனால் அன்று மாலை அவன் செய்த காரியம் என்னை வியப்பில் ஆழ்த்தியது!

அன்றுமாலை அவன் யாரிடமோ காசுவாங்கிக் கொண்டு வந்திருந்தான். அந்தக் கிழவனின் சுங்கானுக்குப் புகையிலை இல்லை என்பதை அன்று காலையில் அவன் அறிந்திருக்கவேண்டும் போலும் தான் கொண்டுவந்த பணத்திற்கு புகையிலை வாங்கிக் கொண்டு சென்று அக்கிழவனிடம் கொடுத்திருக்கிறான் ஆனால் இது பற்றி அவன் ஒருவார்த்தைகூடச் சொல்லவில்லை· மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தில் அந்த வயோதிபரை சந்தித்த பொழுது அவர் வாயிலாகத்தான் இச்சம்பவத்தைக் கேள்விப்பட்டேன்.

இது அற்பமான ஒரு செயல்தான். இது என்மனதில் இடம்பெற்றுவிட்ட செயலாகி விட்டது என்னிடம் ஒரு மாறுதலையே ஏற்படுத்தியது காரணம் இது அன்பின் செயல் இரக்கத்தின் செயல்தான் என்றகாரணந்தான் அன்பு இறவா வரம்பெற்று வாழ்வதன் மர்மம் தான் என்ன?

நாம் முக்கியமானவர்கள் நம்மால் பெரும் காரியங்களைச் சாதிக்கமுடியும். உலகில் எந்த நிலையில் இருப்பவர்களும் தத்தமது நிலையில் இருந்து தக்க அன்புப் பணி ஆற்றமுடியும்



உதாரணமாக ஒரு ஆசிரியர் செய்யக் கூடிய சேவைகளை இங்கு பார்ப்போம் ஆசிரியன் எனும்போது இதற்கென்று பயிற்சி பெற்று சான்றிதழ் பெற்றவர்கள் மட்டும்தான் ஆசிரியர்கள் அல்ல நாம் ஒவ்வொருவரும் ஆசிரியர்கள்தான்.

## ஆசிரியர்களின் பங்கு

எனது ஆசிரியர்கள் முறையான மறைக்கல்வியை எனக்குப் போதிக்கவில்லை என்பது என்னுடைய கருத்து. பக்தியாக இருக்கவேண்டும். எச்சரிக்கையின்றி வாழ்ந்து ஒழுக்கத்தில் இடறிவிழக் கூடாது என்று மட்டும்தான் அவர்கள் எனக்குச் சொல்லித் தந்திருந்தார்கள். ஆனால் வேதத்தின் அடிப்படையை அவர்கள் எனக்குச் சொல்லித் தரவில்லை. ''வேதம் தூய்மையானது. தகப்பன் இல்லாதவர்களையும் விதவைகளையும் சந்தித்து ஆறுதல் கூறுவதே வேதம்'' என்ற புனித யாகப்பரின் வார்த்தைகளை அவர்கள் அறிந்தே இருக்கவில்லை என்றே நினைக்கின்றேன்.

நம்முடன் கலந்து உறவாடும் மனிதர்களை உண்மையான செயல்களினால் நாம் நேசிக்க வேண்டும் இல்லாவிடில் நாம் தேவனை அறிய முடியாது· ஒவ்வொரு ஆசிரியரும், சமய குருவும் மற்றும் மறை போதகர்களும் பிள்ளைகளுக்குச் சொல்லித்தர வேண்டும். ''சிநேகிக்காதவன் இறைவனை அறிவதில்லை. ஏனெனில் இறைவன் சினேகமாய் இருக்கிறார்'' என்கிறார் புனித அருளப்பர்.

ஓடி அலைந்து பணம் தேடுவதையே தொழிலாகக் கொண்ட அந்த நல்ல சமாரித்தன் ஏன் தூயவன் என்பதை என் ஆசிரியர்கள் விளக்கிக் கூறவில்லை. அவனைப் போல் நானும் நடக்க வேண்டும். இல்லையேல் அந்த மரத்த மனம் படைத்த லேவித்தன் போலவே இருப்பேன். அப்படியிருப்பின் என்னைக் கிறிஸ்தவன் என்று கொள்ள முடியாது என ஒருவரும் எனக்கு விளக்கம் தரவில்லை.

## அக்குறையை தீர்த்தவர் அன்னையே

எனது இளமைப் பருவத்தில் எனக்கு மறைக்கல்வி அளித்தவர்கள் துறவிகள் தாம். ஆயினும் அது நிறைவானதாக இருக்கவில்லை. ஆனால் என்னுடைய தாயார் தனக்கே உரிய இனிமையான இயல்பினாலும் தெளிவான சிந்தனை வழிகளாலும் எனக்கு நல்ல பயிற்சி அளித்திருந்தாள். காரணம் அன்பு செய்வது பற்றி சிறுவருக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று அவள் தெளிவாக அறிந்திருந்தாள்.

பசியாறும் நோக்கத்துடன் ஒரு முதிய ஏழை விதவை எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவது வழக்கம் அந்தப் பாட்டி வந்தவுடன் எனது அம்மா என்னை அழைப்பார். அம்மா என்னை அழைக்கும் தொனியில் இருந்து அவர் அழைக்கும் செய்தியை நான் உணர்ந்து கொள்வேன். என்னிடம் ஏதும் காசு இருந்தால் நான் கொடுக்க வேண்டும் அல்லது யாரிடமாவது வாங்கி மரியாதையுடன் அப்பாட்டிக்குக் கொடுக்க வேண்டும். அவளுடன் அன்பாக உரையாட வேண்டும். இவை போக பலகாரங்கள் கேக் ஏதாவது ்ன்னிடம் இருப்பின் அவற்றையும் நான் அவளுக்குக் கொடுக்க வேண்டும். இது என் அன்னை எனக்கு அளித்த பயிற்சி. அந்த முதியவள் ஒருமுறை நோயுற்றுப் படுக்கையில் இருந்தாள். நான் அவளை அடிக்கடி போய்ப் பார்க்க வேண்டும். என்னால் முடிந்ததை நான் கொண்டுபோய்க் கொடுக்க வேண்டும் என்று எனக்கு அன்புக் கட்டளையிட்டிருந்தாள். சிறுவருக்குப் பிறர் அன்பைப் பழக்கிவிடும் சீரிய பயிற்சியல்லவா இது.

## சகிப்பைப் பேண சக்தியளித்தார்

பிரிவினைக் கிறிஸ்தவர்களும் கத்தோலிக்கரும் ஒருவரோடு ஒருவர் போட்டியிட்டுக் கொண்டிருந்த காலம் அது. எங்கள் அயல்வீட்டுப் பாட்டியொருத்தி நோயுற்றிருந்தாள்.



அவள் பிரிவினைக் கிறிஸ்தவத்தைச் சேர்ந்தவள். அவளுக்கு உறவினர் எவருமிலர், தன்னந் தனியாகவே வாழ்ந்து வந்தாள். சீட்டாட்டத்தில் (கடதாசி விளையாவதில்) அப்பாட்டிக்கு மிகவும் விருப்பம். கிழமைக்கு ஒன்றிரண்டு தடவைகள் நான் அப்பாட்டியைக் காணச் செல்ல வேண்டும். குறைந்தது ஒரு மணி நேரமாவது அவளோடு கதைத்துப் பொழுது போக்க வேண்டும், சீட்டாட வேண்டும் என்பது என் அன்னையின் கட்டளையாக இருந்தது

சில வேளைகளில் மலர்களையும், சிற்றுண்டிவகைகளையும் கொண்டுபோய் அந்த அம்மாளுக்குக் கொடுப்பேன் பக்தியை ஊட்டும் வகையில் வளர்க்கப்பட வேண்டிய கத்தோலிக்க சிறுவனுக்கு அன்புக்கு ஏற்றத்தாழ்வுகள் இல்லை என்பதைப் பயிற்றுவிக்க இதுவே வழியென என் அன்புத்தாய் கையாண்டாள்.

''சகோதரபாசத்துடன் ஒருவரை ஒருவர் நேசியுங்கள். சகிப்புத்தன்மையுடன் ஒருவர் ஒருவரைக் கனம்பண்ணுங்கள்', எனும் புனித சின்னப்பரின் போதனையில் அம்மா எவ்வளவு ஊன்றி நின்றாள். எத்துணை அழகாக அக்கருத்தை எம் இதயத்தில் வேரூன்ற வைத்தாள் என்பதையிட்டு நான் பெருமிதமடைகின்றேன்.

## அரிய வாய்ப்பு ஆசிரியருக்கு உண்டு

அன்பெனும் பெருநிதியை அடுத்தவர்க்கு அள்ளிக்கொடுக்கவும் அதை மற்றவர்களிடத்தில் வளர்க்கவும் பயிற்சி அளிக்கக் கூடிய வாய்ப்பு ஆசிரியர்களுக்கே உண்டு. அதிகம் அன்பு செய்கிறவர்களே உண்மையில் பெரியோர்கள் என்பதை துணிவோடு போதிக்கக்கூடிய ஆற்றலும் இவர்களுக்கே உண்டு.

''மேலும் மேலும் நன்மை செய்யுங்கள்'' என்று புனித சின்னப்பர் தம்முடைய சீடர்களை ஊக்கப்படுத்தினார். சின்னப்பரின் வழியில் நின்று ஆசிரியர்களும் தமது மாணவர்களை

ஊக்குவித்தல் வேண்டும். அவர்களிடம் அன்புப்பணிகளை ஏவி அவர்கள் அதனைச் செய்துமுடிக்கத் தூண்டிவிடவேண்டும். அப்படிச் செய்து முடிப்பனவற்றை மனமாரப்பாராட்டவேண்டும்

அன்புப் பணிகளில் சிறுவருக்கு இயல்பாகவே ஆர்வம் உண்டு இப்பணிகளின் மூலம் அவர்கள் ஆன்ம உடல் நலன்களை அதிகம் பெற்றுக் கொள்ளுகிறார்கள். துடிக்கும் இளைஞர்களின் உணர்வுகளை அன்பு வழியில் திருப்பி விடுவதே நல்ல ஆசிரியன் ஒருவன் செய்யக்கூடிய மேலான பணியாகும்.

அன்பு செய்வதற்கு அழகாகப் போதிக்கவேண்டும். அழகாகப் போதித்தல் மூலமே சிறுவர் சிறுமியரின் கவனத்தை எம்பால் ஈர்க்கமுடியும். அவர்கள் உள்ளங்களைப் போதனையால் பக்குவப்படுத்தவேண்டும். அவர்களது கை, கால், கண், காது, இருதயம் ஆகிய உறுப்புகள்யாவும் அன்பின் பொருட்டுத் துடிக்கும்படி செய்தல்வேண்டும்.

அவர்கள் தாமாக உணர்ந்து சேவையில் ஈடுபடுமுன்னரே துன்பம், நோய், பிணி, வறுமை, சிறுமை எனும் ஏதோசில அனுபவங்களின் தாக்கங்களுக்குள்ளாகின்றனர். இவற்றின் மூலம் அன்பு தமக்கு வேண்டியுள்ளது என்பதை உணர்கின்றார்கள். இக்குறைபாடுகள் தொலையாதா என்று தவிக்கின்றார்கள். அதே அன்பு பிறருக்கும் தேவைப்படுகின்றது என்பதை இலகுவாகப் புகட்டிவிடலாம்.

அன்புப் பணியை வளர்ப்பதில் தான்தான் முக்கியமானவன் என்பதை ஒவ்வொரு ஆசிரியனும் உணர்ந்திருக்க வேண்டும். இது ஒரு கடினமான பணியல்ல ஒவ்வொரு ஆசிரியனும் ஒரு இதயத்திலாவது இந்த அன்புப்பணி எனும் தீயை மூட்டிவிட்டால் அது உலகினையே நாளடைவில் பற்றி எரிக்கும் என்ற நம்பிக்கையோடு பணிபுரியவேண்டும்.

---



# என் மொழி 14

## அன்பின் நான்கு விதிகள்

**அன்பின் பண்பு பணிவிடை**

உண்மை அன்பு என்பது என்ன?

அதன் தன்மை எத்தகையது?

இதுவரை நாம் காட்டியது நிலையான அன்புதானா?

நீங்கள் இதுவரை செய்ததைக் காட்டிலும் எப்படிக் கூடுதலாக அன்பு செய்ய முடியும்?

என்பதை எல்லாம் இதுவரையில் கூறிய வற்றின் மூலம் விளங்கிக் கொண்டிருப்பீர்கள்.

உங்களின் நற்பணிகள் எல்லாம் பகைமை, அநீதி, கொடுமை தன்னலம் போன்ற கறைகள் படிந்திருந்தன. உங்கள் வாழ்வு அன்பால் உலகை மாற்றுதற்கு அர்ப்பணிக்கப்பட்டதாக அமைந்திருக்கவில்லை என்று கண்டுகொண்டிருப்பீர்கள். அதனால் இதுவரை நீங்கள் செய்துவந்ததைவிட அதிகம் நன்மை செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தை என்மொழிகள் தூண்டி விட்டிருக்கக் கூடும். ஆனால் எப்படித் தொடங்குவது எனும் தவிப்பும் இப்புதுவாழ்வை எவ்விதம் ஆரம்பிப்பது எனும் திகைப்பும் ஏற்பட்டிருக்கும். எனவே அதற்கு இலகுவாக சில விதிகளைக் கொடுக்கலாம் என எண்ணுகிறேன்.

## நற்செய்தி நல்லும் விதி

நற்செய்தியில் பல இடங்களில் அன்பைப்பற்றிய பல அழகியவிதிகள் கூறப்பட்டுள்ளன, உண்மை பேசுதல், உபசரித்தல், சிந்தித்தல், பெருந்தன்மை காட்டுதல் என்றும். மனத் தாராளமாக ஒருவரை ஒருவர் உபசரியுங்கள், சிறைப்பட்டோருடன் நீயும் சிறையில் இருப்பதாக நினைத்துக்கொள், கபடற்ற உள்ளத்துடன் தருமம் செய் அயலவரின் தேவைகளில் அக்கறை கொள் என்றெல்லாம் படித்திருகின்றோம்.

இன்னும், ஒருவர் ஒருவருக்கு சகிப்புத்தன்மை காட்டுங்கள் எல்லா மனிரையும் மரியாதை செய், நம் விரோதிகளையும் நம்மைப் பகைப்போரையும் நேசி, நவை அடக்கி ஆளு, எல்லோருடனும் சமாதானமாக வாழு, நம் நன்மைகளை அல்ல பிறர் நன்மைகளையே நாடு, பாவிகளை மன்னித்துத் தேற்று. கருணையுடன் மன்னிப்பு அருளு, ஊழியருக்கு நீதியான கூலி வழங்கு, நம் சகோதரரின் சொந்த விடயங்களில் தலையிடக் கூடாது. சட்டங்கள் ஒழுங்குகளின் மீது தர்க்கம் செய்யக் கூடாது, நன்மைகள் செய்வதற்கும் நன்மைகளைப் பகிர்ந்து கொள்ளவும் பின் நிற்கக் கூடாது என்றெல்லாம் நற்செய்தி நம்மை வற்புறுத்துகின்றது.

## நற்செய்தி காட்டுவதே நமது வழி

நாம் கிறிஸ்தவர்கள் நாம் இந்தப் போதனைகளைத் தூய உள்ளத்துடன் ஏற்று நன்மனதுடன் நடக்க வேண்டும். பிறர் அன்பையே இலக்காகக் கொண்டு வாழ இவ்விதிகள் துணை செய்யும். இவ் விதிகளில் அன்பின் கரு முழுமையாக இருக்க வேண்டும். இவைகளில் உண்மை, உறுதி, உற்சாகம் என்பன மிளிர வேண்டும். இவை எல்லோருக்கும் இலகுவானதாயும், மனதில் நிலைநிறுத்திக் கொள்ளத் தக்கனவாயும் அமைய வேண்டும். அத்தோடு இலகுவில் இவற்றை விளங்கிக் கொள்ளவும் மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுக்கவும் கூடிய வகையில் இவ்விதிகள் சொற்பமானதாய் இருக்க வேண்டும்.



இத்தகைய விதிகள் நான்கும் புனித சின்னப்பர் அன்பு பற்றிக் கூறும் குறிப்புகளில் உள்ளன ''அன்பு பொறுமை உள்ளது; தயை உள்ளது, துடுக்காய்ச் செய்யாது, பொறுமைப் படாது, பேராசை கொள்ளாது, தன்னை நினைப்பது இல்லை, அநியாயத்தில் மகிழ்ச்சி கொள்ளாது, சத்தியத்தில் மகிழ்ச்சி கொள்ளும், எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ளும், அனைத்தையும் நம்பும், அனைத்தையும் மன்னித்து விடும் தீர்க்க தரிசனங்களும், வேதப்பிரமாணங்களும் அழிந்தாலும் அறிவு கெட்டுப் போனாலும் அன்பு அழிந்து போவதில்லை. (கொரி 1 : 13)

அன்பைப் பற்றி அழியா வரம் கொண்ட இந்த பதினாறு அறிவுரைகளையும் நான்கு விதிகளுள் அடக்கலாம்.

I. ( நேர்மையைத்தரும் ) பிரமாணிக்கம்
II. ( பொறுமை, சகிப்புத்தன்மையைத் தரும் ) மனத்திடன்
III. ( நாவடக்கத்தைத் தரும் ) பிறரைத் தீர்ப்பிடாமை
IV. ( தயை தன்னலமின்மையைத் தரும் ) உதாரகுணம்.

ஒரு நாளும் ஒருவரையும் தீர்ப்பிடாதவன், ஒருவருக்கும் சுடுசொல் சொல்லாதவன், சகிப்புத்தன்மையுடன் எல்லோருக்கும் பிரமாணிக்கம் காட்டுகிறவன் புனித சின்னப்பர் கூறும் அன்பின் மனிதனுக்கு உரிய இலட்சியங்களை உணரத்தொடங்குகின்றான். அத்தகைய ஒருவராக நீங்களும் இருக்க விரும்புகிறீர்களாயின் பின்வரும் நான்கு விதிகளும் உங்களை வழி நடாத்தட்டும்.

I. நீங்கள் பிறருக்குக்கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள்.
II. உங்கள் இயல்பை அடக்கி ஆளுங்கள்.
III. உங்கள் வாயை மூடிவைத்திருங்கள்.
IV. உங்கள் நெஞ்சில் அன்பின் சூடு இருக்கவேண்டும்.

### I. கொடுத்த வாக்கை நிறைவேற்றுங்கள்

இதுவே முதல் விதி, ஏனெனில் பிரமாணிக்கம் நேர்மை என்பனவற்றுக்கு இதுவே விதி. இதுபற்றி முன்னரே என் மொழிகளில் கூறிவிட்டேன்.

''அன்பு தீமை செய்வதில்லை, அன்பு சலிப்படைவதில்லை'' எனும் புனித சின்னப்பரின் கூற்று இதனை எமக்குக்காட்டுகிறது

இரட்டை மனமும், ஏமாற்றும் குணமும் அன்புக்குக் கிடையாது. நல்ல அயலவனுக, நம்பிக்கையுள்ளவராக நண்பர்களாக இருக்க விரும்பினுல் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டும்.

ஒருவருக்குக் கொடுத்த வாக்கினை நிறைவு செய்யும்போது நாம் அவரை மேன்மைப்படுத்துகிறேம். அவருக்கு அன்புத் தொண்டு புரிகிறேம், மற்றவர்கள் எம்முடன் அன்புடனும் பண்புடனும் பழகவேண்டுமென்று நாம் எதிர்பார்க்கின்றேம். அதே போன்று நாமும் மற்றவர்களை நடத்தவேண்டியது அவசியமல்லவா?

## படைத்தலைவன் ஒருவனின் வேண்டுகோள்

பிரிவினைக் கிறிஸ்தவரான ஒரு படைத்தலைவன் அருட்திரு. கெலரிடம் வந்து ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

''இந்நாட்டில் எந்த நேரத்திலும் கலகம் ஏற்படலாம், ஒழுக்கச் சீர்கேடுகள் எல்லாத் துறையிலும் மலிந்து கிடக்கின்றன. இலஞ்ச ஊழல், நேர்மை இன்மை, வஞ்சகம், சூழ்ச்சி, பொய்ச் சத்தியம், குடும்பப் பிரிவினைகள் சமுதாயத்தை அரித்துத் தின்ற வண்ணம் இருக்கின்றன. இவற்றைச் சீர்திருத்தும்படி கிறிஸ்தோப்பர் இயக்கத்தைத் துரிதப்படுத்துங்கள்'' என்றுர்.

உங்கள் வாக்குறுதிகளை நீங்கள் நிறைவேற்றுவிட்டால், பிரமாணிக்கம் உள்ளவர்களாக நீங்கள் வாழாவிட்டால், நேர்மைக் குறைவால் வளர்ந்து வரும் இந்த ஒழுக்கச் சீர்கேடுகளை நீங்களும் நானும் எதிர்த்துப் போராடுவது எப்படி?

இறைவனின் அன்பின் பொருட்டுக் கொடுத்த நம் வாக்குறுதிகளை நாம் நிறைவேற்ற வேண்டும். இவ்விதம் செய்தால் நம்மை, நம் அயலவரை, நம் நாட்டை நாம் காப்பாற்றுகின்றேம். அன்பின் வித்தை அகிலமெலாம் விதைக்கின்றேம்.



நான் இங்கு ஓர் உண்மையைக் கூறப்போகின்றேன். அது உண்மைதான் என்ருலும் உவப்பானது அல்ல. அது, எமது பொய்ச் சத்தியங்களும், சூழ்ச்சிகளும், நம் குடும்பப் பிரிவினைகளும் எமது வாழ்வில் அமைதியைக் கெடுக்கும். இவைபோன்ற மற்ற நிகழ்ச்சிகள் யாவற்றுக்கும் நாம் நமது கொடுத்த வாக்குறுதிகளை ஒப்பந்தங்களை காற்றில் பறக்விடுவதே காரணமாக அமைகிறது,

## II. உன் இயல்பை அடக்கி ஆளு

இது இரண்டாம் விதி. இது சகிப்புத்தன்மைக்கும் பிறருடன் கொள்ளவேண்டிய நல்லுறவுக்கும் இது விதியாகின்றது.

பிறரால் நமக்கு வரும் தொல்லைகளை, அவர்கள் தவறுகளை நாம் தாங்கும்படி செய்வது சகிப்புத் தன்மையே இதனுல் அன்பின் ஒளியாம் மகிழ்ச்சியை நாம் உலகம் முழுவதும் ஏற்றி வைக்கிறேம். நம் இயல்பை, பழிவாங்கும் குணத்தை அடக்கி ஆளுவதே சகிப்புத்தன்மையின் முக்கிய பண்பாகும்.

''அன்பு பொறுமையுள்ளது அனைத்தையும் சகித்துக் கொள்ளும் அன்பு கோபம் கொள்வதில்லை'' என்கிறுர் புனித சின்னப்பர். நாம் மற்றவர்களுக்குப் பயன்பட வேண்டுமாகில் நாம் அவர்களுடன் இணங்கிப்போக வேண்டும்.

அன்பாக அவர்களை நடாத்த வேண்டும். சிடுமூஞ்சிகளாகவும், கொதிக்கும் குணத்தவர்களாகவும் இருந்தால் பகைக்கும் குழப்பங்களுக்கும் காரணமாக இருப்போம். பகையைக் கொல்லும் எதிரி இனிய இயல்புதான்.

எனவே வாழ்வின் எல்லா சந்தர்ப்பங்களிலும் நாங்கள் பொறுமையுடன் நடக்கவேண்டும். கருணையே உருவான ஒரு சகோதரமாகத் திகழவேண்டும். இப்படி விளங்குவதற்கு எம்மை நாம் அடக்கி ஆளுதல் மிக மிக அவசியமாகும்.

## III. உன்வாயை மூடி வைத்திரு

இது மூன்றும் விதி. நாம் நாள் ஒன்றில் இருபத்தி நான்கு மணி நேரமும் சலிக்காமல் கதைத்துக் கொண்டிருக்கிறேம். இந்தப் பேச்சுவார்த்தைகளையெல்லாம் விட்டுவிட வேண்டும்

என்பதல்ல இதன் பொருள். வீட்டுக்கு வெளியிலும் உள்ளேயும் உள்ளவர்களோடு மனம் விட்டுப் பேசிப் பழக வேண்டும். இது பிறர் அன்புக்கு மிகத் தேவையான குணம்தான்.

ஆனால் பிறரைப்பற்றி கேடாக அல்லது அவர்களது மனம் புண்படும்படி நாம் ஒன்றும் பேசக் கூடாது. எங்களது பேச்சு பிறரின் கோபத்துக்குத் தூபமிடக் கூடாது பிறரின் குணத்தை அளவிடும் வகையில் நாம் வம்பு அளத்தல் கூடாது. ''அன்பு அநியாயத்தில் மகிழ்ச்சி கொள்ளாது'' என்கிறார் புனித சின்னப்பர்.

தனது நாவினைக் கட்டி ஆளாதவன் பிறரைத் திட்டித் தூற்றுகிறான். அவர்களது தீயநடை முறைகள் குறைகள் பாவங்களை ஆர்வமுடன் ஆராய்ந்துபார்க்கிறான். அவற்றை அம்பலப்படுத்துவதில் இன்பம் காணுகின்றான் சுருங்கக் கூறின் தீயதை நினைத்து தீயதைப் பரப்புவதில் உள்ளம் மகிழ்கிறான்

முன்னர் நான் மொழிந்துள்ளதுபோல் அன்புக்கு இன்சொல் அவசியம். நல்ல சொற்களால் நாம் மற்றவர்களை மேன்மைப்படுத்தமுடியும். எல்லாவற்றையும் சரியாக விளங்கிக் கொள்வதற்கும் எங்கும் நல்லெண்ணத்தைப் பரப்புவதற்கும் இன்மொழிகளே தேவைப்படுகின்றன.

மௌனம் சாதிப்பது மனித இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல் ஆகையால் இந்தவிதி கடினமானதுதான் இதனை முழுமையாகக் கடைப்பிடிக்கவேண்டும் என்றதும் வாழ்க்கைமுழுவதும் போராட்டம் நடாத்த வேண்டுமே என எண்ணத் தோன்றும் ஆனால் பிறரை அன்புசெய்வதற்கு இந்த விதி மிக மிக அவசிமானதாகும், எனவே முடிந்த மட்டும் நன்மனதுடன் இவ்விதியைப் பேணவேண்டும்.

## மனிதனை உயர்த்திவிடும் பண்பு

இத்தகையோன் ஒருநாளும் பிறரைத் தூற்றியதில்லை'' என்பதே ஒருவன் பெறக்கூடிய புகழ்ச்சிகளில் பெரும் புகழ்ச்சிகளாகும் இந்த அடைமொழி நல்ல உள்ளத்துக்குச் சான்றாகும்.



இப்பண்பு ஒன்றே மற்றவர்களை நாம் நன்மைக்குத் தூண்டிவிடப் போதுமானதாகும். மிகச் செல்வாக்கு மிக்க இடத்துக்கு ஒருவனை உயர்த்திவிடும் பண்பு அவனது நாவடக்கம்தான்.

எல்லோருக்கும் இந்தமனிதன் மேல் நம்பிக்கை பிறக்கிறது

பகைமையை வெல்ல நாவடக்கம் வேண்டும், உலகில் நிலவும் துன்பங்கள், கொடுமைகளைத் தணிப்பதற்கும் இது தேவை எனவே எமது நாவினை நாம் கட்டி ஆளுவோம் ஆளப் பழகுவோம் ஆம் 'யாகாவாராயினும் நாகாப்போம்''

## IV. உனது அன்பு சூடு பிடித்திருக்க.

இது நான்காம் விதி இந்த நேர்த்தியான விதியால் நாம் மற்றவர்களுக்கு இரங்குகின்றோம், மனத் தாராளத்துடன் எல்லோர்க்கும் உதவுகின்றோம். நாம் பிறருக்குச் செய்யும் எல்லாச் சேவைகளுக்கும் இந்த விதிதான் பிறப்பிடம். அன்பின் சூடு உள்ள இதயம் தன்னலம் எனும் குளிர்ந்து விறைத்த இதயத்திற்கு எதிர்மாறானது.

''அன்பு தயை உள்ளது, அன்பு தன்னுடையவற்றைத் தேடுவது இல்லை'' என்கிறார் புனித சின்னப்பர். உங்கள் நெஞ்சத்தில் அன்பின் வெப்பம் இருக்கும்பொழுது உங்களுக்கு கடினமான சேவைகளைக் கூட நீங்கள் முணுமுணுக்காமல் ஏற்றுக் கொள்வீர்கள். பொய்க் காரணங்கள் காட்டித் தப்பித்துக் கொள்ள வசதி இருப்பினும் கூட அப்படிச் செய்ய மாட்டீர்கள். ''அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு'' என்பது போன்று நீங்கள் மற்றவர்களின் உடைமையாய் விளங்குகின்றீர்கள். எல்லோருக்கும் நன்மை செய்வதும் அவர் இறைவனிடம் இட்டுச் செல்வதுமே உங்கள் மன வாஞ்சையாகும்.

நாம் பிறருக்குச் செய்த உதவிகளையும் அவற்றைச் செய்த விதங்களையும் சற்று ஆராய்ந்து பார்ப்போம் நம்மால் செய்ய முடிந்ததிலும் குறைவாகவே நாம் உதவி செய்துள்ளோம். நமது செயல்களில் இருக்கவேண்டிய தாழ்ச்சியும் கருணையும் இருக்கவில்லை என்பதைக் கண்டு பிடிக்கிறோம்

அன்பின் வெப்பமும், தாழ்ச்சியும் நம் நெஞ்சிற் குடியிருக்க வேண்டும் இல்லையெனில் நமது சேவைகளும் கொடைகளும் பிறரைத் துன்புறுத்துவனவாய் அமைந்து விடும். தான்



114840

செய்ய வேண்டிய தியாகத்தை எண்ணி முணுமுணுப்பவனை யல்ல. உவகையுடன் ஏற்றுக் கொள்கிறவனையே இறைவனும் அன்பு செய்கிருர்.

எனவே.........!

அன்பையும் பரிவையும் பற்றி நான் சொல்லக்கூடியது அனைத்தும் இந்த நான்கு விதிகளிலும் அடங்கியுள்ளன. நான் முன்னர் மொழிந்தவைகளின் சாரமே இந்த நான்கு விதிகளாகும்...

நான் ஓர் ஆசிரியனுக இருந்தால் ''சகோதர அன்பை வளர்க்க நான் என்ன செய்யவேண்டும்?'' என்று கேட்கும் மாணவனுக்கு இந்த நான்கு விதிகளையுமே சொல்லுவேன்.

தனது வாழ்வு பயனற்றுப்போவதைக் கண்டு விரக்தி கொண்ட ஆணே, பெண்ணே என்னிடம் வந்து ''எனது வாழ்வு எல்லோர்க்கும் பயன்படும்படி ஒரு வழி சொல்லுங்கள்'' என்று என்னிடம் கேட்டால் இந்த விதிகளையே அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பேன்.

''அன்புதான் வாழ்வின் ஊற்று'' என்கிருர் கொலம்பா மார்மியோன் எனும் மட அதிபர் இந்த விதிகளில்தான் அன்பின் இரகசியம் அடங்கியிருக்கிறது. நிறைவான சிறந்த வாழ்வுக்கு வேண்டிய வழியும் இந்த விதிகள்தான்.

சீரிய அறிவாக, மனதுக்கு ஒளியாக, சித்தத்தின் வலிமையாக உள்ளத்தை ஆட்கொள்ளும் தூய அன்பு இந்த உயர் விதிகளின் உள்ளேதான் தேங்கி நிற்கின்றது. இந்த அன்பு உங்கள் ஆன்மாவை வளர்க்கின்றது. மற்றவர்களின் உள்ளங்களைக் குணப்படுத்தும் அதேவேளையில் அன்பு உங்கள் உள்ளங்களுக்கும் நலம் அளிக்கின்றது.

இந்த நான்கு விதிகளையும் கடைப்பிடிப்பவன் அன்பைப் பெரும் அளவில் அடைந்துகொள்வான். மிக்க அன்பைக் கொண்டிருப்பதால் அவனே பெரியவனுகத் திகழ்வான்.

அவன் வாழ்வில் வசந்தம் மலரும். அடுத்தவன் வாழ்விலும் வசந்தம் மலரவும் செய்வான்.

வணக்கம்

அன்பின் நன்றி